# கிறிஸ்தவம்

## தரம்

## 9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| *முதலாம் பதிப்பு* | - | *2017* |
| *இரண்டாம் பதிப்பு* | - | *2018* |
| *மூன்றாம் பதிப்பு* | - | *2019* |

*முழுப் பதிப்புரிமையுடையது.*

ISBN 978-955-25-0148-7

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,*
*நிம்தரா பிரின்டஸ் கம்பனி*
*இல்: 30/1, பன்சல வீதி, பட்டிவில கோனவல, களனி*
*அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.*

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

கண்காணிப்பும் மேற்பார்வையும் : டபிள்யூ.எம். ஜயந்த விக்கிரமநாயக்க
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

வழிகாட்டல் : டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

இணைப்பாக்கம் : ஆர். டீ. விஜேவிக்ரம
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

: அ. ஞானேஸ்வரன்
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

ஆலோசனை : வணக்கத்துக்குரிய கீர்த்திசிறி பர்னாந்து
குரு முதல்வர் (நுவரெலியா)
இலங்கை திருச்சபை.

பதிப்பாசிரியர் குழு : அருட்பணி. சி. பால்ராஜ்
அதிபர்
தூய. தோமையர் கல்லூரி, பண்டாரவளை.

: எம். ஹேமசந்திர பெரெரா
உதவி கல்வி பணிப்பாளர் (ஓய்வு பெற்ற)
கிறிஸ்தவம், கல்வி அமைச்சு.

: அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது
செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு

எழுத்தாளர் குழு : டி. குளோரி எப்சிபா
ஆசிரியர்
கம்பளை இந்துக் கல்லூரி, கம்பளை.

: எம். பி. எஸ். பெரேரா
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்
கிறிஸ்தவம்.

: **நிலந்தி தீபா டி சில்வா**
ஆசிரியர்
மெதடிஸ்த உயர் கல்லூரி
புவக் அரம்ப, மொரட்டுவ.

: **எம். ரதீகா சமந்தி மென்டிஸ்**
ஆசிரியர்
தூய தோமையர் கல்லூரி
கல்கிசை.

: **நயனா நந்தினி சிறிமா குமாரி ஜயசேன**
ஆசிரியர்
கு/சிறீ நிஸ்சங்க மத்திய கல்லூரி
குருணாகலை.

: **நிலூகா சாமினி உடுமுல்ல**
ஆசிரியர்
கிங்ஸ்வுட் கல்லூரி
கண்டி.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **எஸ். வடிவேல்**
ஆசிரியர்
இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்
இரத்தினபுரி.

**சரவை பார்ப்பு** : **ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.

**கணினி வடிவமைப்பு** : **நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இறை சமூகத்தில் நேர்மையாளர் “நோவா” | 1 |
| 2. | இறை சமூகத்தில் நேர்மையாளர் “தாவீது” | 6 |
| 3. | விண்ணப்பம் - நாளாந்த வாழ்வுக்கு | 10 |
| 4. | இறைவனின் தீர்வு | 16 |
| 5. | இறை வல்லமையால் ஊட்டம் பெறுதல் | 20 |
| 6. | நம்பிக்கையில் குணம் | 24 |
| 7. | கருணையால் குணமடைதல் | 27 |
| 8. | தூய ஆவியின் வல்லமை பெற்ற தொடக்க திருச்சபை | 31 |
| 9. | சவால்களின் மத்தியில் நற்செய்தி பரம்பல் | 35 |
| 10. | தொற்கா - தூய ஆவியின் வல்லமையால் உயிர் பெறல் | 38 |
| 11. | தூய ஆவியின் வல்லமையால் ஸ்தேவான் மரணத்திற்கு முகம் கொடுத்தல் | 42 |
| 12. | தூய ஆவியின் வல்லமையால் சவுலின் துணிவான பணி | 46 |
| 13. | இறைவனுடன் நல்வாழ்வு | 49 |
| 14. | இறைவனுடன் நல்நோக்கு | 54 |
| 15. | இறைவனுடன் நல்லுறவு | 62 |
| 16. | இறைவார்த்தை வாழ்வின் அடிப்படை | 65 |
| 17. | இறைவார்த்தை வாழ்வின் அடைக்கலமும் பெலனும் | 70 |
| 18. | தன்னலம் துறந்து சிலுவை சுமப்போம் | 76 |
| 19. | கிறிஸ்துவின் படைவீரர் ஆவோம் | 83 |
| 20. | கிறிஸ்தவ கொள்கையைப் பாதுகாப்போம் | 88 |
| 21. | கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வு | 96 |

# 1 இறை சமூகத்தில் நேர்மையாளர் ''நோவா''

**தொடக்க நூல் 6 : 8-12**

**பூலோகத்தாரே யாவரும் - கர்த்தாவில் களிகூருங்கள்**
**ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம் - செலுத்தி பாட வாருங்கள்**

**பராபரன் மெய்த்தெய்வமே - நாம் அல்ல அவர் சிருஷ்டித்தார்**
**நாம் ஜனம் அவர் ராஜனே - நாம் மந்தை அவர் மேய்ப்பனார்**

**கெம்பீரித்தவர் வாசலை - கடந்து உள்ளே செல்லுங்கள்**
**சிறந்த அவர் நாமத்தை - கொண்டாடித் துதி செய்யுங்கள்**

**கர்த்தர் தயாளர் இரக்கம் - அவருக்கு என்றும் உள்ளதே**
**அவர் அநாதி சத்தியம் - மாறாமல் என்றும் நிற்கும்.**

**(*கிறிஸ்தவ பாமாலை - பாடல்* 333)**

*இறைவன் அழகிய உலகைப் படைத்து எம்மிடம் ஒப்படைத்தார் எனவும் அவர் எம்மைக் காத்து வழிநடத்துகின்றார் எனவும் இப் பாடலைப் பாடும்போது நாம் அறிந்து கொண்டோம்.*

*இறைவன் உலகை மிக அழகாகப் படைத்து மனிதரிடம் ஒப்படைத்தார். இறை படைப்பில் மிக உயர் படைப்பாக இறைசாயலில் மனிதன் படைக்கப்பட்டான். மேலும் ''மண்ணுலகில் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள். அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள். உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்'' என மனிதருக்கு ஆசி வழங்கினார். மண்ணுலகில் விதை தரும் செடிகளையும் பழமரங்களையும் மனிதருக்கு உணவாகக் கொடுத்தார். இறை படைப்பில் மனிதருக்கு சிறப்பிடம் கிடைத்தது. ஆனாலும் முதல் மனித குடும்பம் இறை விருப்புக்கு மாறாக செயற்பட்டு, பாவத்தில் விழுந்து, இறையுறவிலிருந்து விலகியது. எனவே, மனித இனம் பாவத்திலிருந்து மீள வேண்டிய நிலை உருவாகியது.*


இவ்வாறு பாவத்தினால் இறையுறவிலிருந்து பிரிக்கப்பட்ட மனிதர் மத்தியில் நோவா என்பவர் நேர்மையாளராகவும் இறைவனுடன் நெருங்கிய தொடர்பு உடையவராகவும் அவர் இறைவனால் நேசிக்கப்பட்டவராகவும் இருந்தார். இறைவன் அவருக்குக் கருணை காட்டினார்.



**வாசிப்போம்**
**தொடக்க நூல் 6:8-12**

இதற்கேற்ப பேழை ஒன்று செய்யுமாறு இறைவன் நோவாவிடம் கட்டளையிட்டார். கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நோவா எல்லாவற்றையும் செய்தார். அதற்கமைய நோவாவின் புதல்வர் சேம், காம், யாப்பேத்து, மனைவி, புதல்வரின் மனைவியர் ஆகியோருடன் எல்லா உயிரினங்களும் சோடி சோடியாக ஆணும் பெண்ணுமாக பேழைக்குள் சென்றனர். அதனால் நோவாவும் அவனுடைய குடும்பத்தவரும் பெருவெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

நோவாவைக் குறித்து இறைவார்த்தையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.




### நோவா நற்பண்புகள் நிறைந்தவராக வாழ்ந்தார்

தீயவழியில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில், நோவா நல்வழியில் வாழ்ந்து இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவரும் இறைவனின் முன்னிலையில் போற்றத்தக்கவருமாக இருந்தார். இதனால் நோவா நற்பண்புள்ள ஒருவராக இறைவன் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

நாம், மனித சமூகத்தில் நற்பண்புகள் நிறைந்த பிள்ளைகளாக வாழவேண்டும் என இறைவன் எதிர்பார்க்கின்றார். உலக போக்கு தீயதாக இருப்பினும் நல்லவற்றைத் தெரிவுசெய்து செயற்பட வேண்டுமென எம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு செயற்படுகையில் உலக மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் இறைவனின் முன்னிலையில் போற்றத்தக்க செயல்களை நிறைவேற்றுதல் எமது கடமை யாகும். தீமையான சமூகத்தில் நல்ல வாழ்வை வாழ முயலுதல் சிரமமான செயலாக இருப்பினும் இறைவார்த்தைக்கு ஏற்ப வாழுதலும் சமூகத்தில் சமத்துவத்துடன் சகவாழ்வுடன் வாழுதலும் எம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. இறைவன் விரும்பும் வாழ்வின் கோலத்தைப் பின்பற்றி அவரது முன்னிலையில் நற்பண்புகள் நிறைந்த பிள்ளைகளாக எம்மால் வாழ முடியும்.

## நோவா குற்றமற்ற மனிதனாக இருத்தல்

குற்றங்கள் பல நிறைந்த சமூகத்தில் குற்றமற்றவராக வாழவேண்டியதற்கான சவால் நோவாவுக்குக் காணப்பட்டது. இறைவனுடன் காணப்பட்ட நல்லுறவானது அவரை நல்லவராக வாழ வழிகாட்டியது; இறை வழிகாட்டலுடன் நல்லவனவற்றைத் தெரிவுசெய்து அவர் வாழ்ந்தார். எனவே இறைவன் நோவாவை குற்றமற்றவனாக ஏற்றுக்கொண்டார். நோவாவின் வழிமரபில் குற்றமற்ற மனிதனாக இறைவனால் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஆசி பெற்றவராக இருந்தார் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. ஏனெனில் அவரது வாழ்வில் இறைவிருப்பத்தை நிறைவேற்றும் செயல் மட்டுமே காணப்பட்டது.

குற்றம் நிறைந்த சமூகத்தில் குற்றமற்றவராக வாழும் சவாலுக்கு நாமும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். செல்வம், அதிகாரம், புகழ் என்பவற்றைச் தேடிச் செல்லும் சமூகத்தில் இறை வார்த்தையைப் பின்பற்றி வாழ்தல் சிரமமான செயலாகும். எனினும் இதனை நிறைவேற்ற வேண்டுமென இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். மேலும் நாம் குற்றமற்றவர்களாக வாழும்போது எமக்கு பெறுமதியையும் மதிப்பையும் இறைவன் வழங்குவார்.

## நோவா இறைவனுடன் நல்லுறவுள்ளவராக செயற்படல்

நோவா இறைவனுடன் நல்லுறவுடன் வாழ்ந்தார் என இறைவார்த்தையில் காண் கின்றோம். இறைவனுடன் நல்லுறவுடன் வாழ்தல் எமது வாழ்வில் கிடைக்கும் சிறந்த அனுபவமாகும். இறைவன் புனித தெய்வம் ஆவர். மனித உலகில் தீயவைகள் அர சாளுகின்றன. நோவா வாழ்ந்த சமூகச் சூழலும் அவ்வாறே காணப்பட்டது. அது மிகக் கொடூரமாக இருந்தது. அவற்றின் மத்தியில் கடவுளின் முன்னிலையில் சரியானதை நோவா தெரிவுசெய்து வாழ்ந்தார். நோவாவின் கரங்கள் இறைவனை நோக்கி

உயர்த்தப்பட்டிருந்தது. நோவாவின் வாழ்வு இறை ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டது. மனிதனால் புனிதத் தன்மையைப் பேணி வாழ்தல் கடினமான செயலாக இருந்தாலும் நோவா அவ்வழியில் பயணம் செய்தார்.

மனிதன் இறைவனுடன் நட்புறவுடன் வாழ்தல் மிகக் கடினமான செயலாகும். ஆனாலும் நோவா இறைவனுடன் நட்புறவுடன் வாழ்ந்தார். இறை உறவுடன் வாழ்வதற்கு நட்பு எனும் குணம் எம்மிடம் காணப்பட வேண்டும். கிறிஸ்தவனாகிய நாம் பாடசாலையில், வீட்டில், சமூகத்தில் பிறருடன் காட்டும் நட்பு அன்புடையதாக இருக்க வேண்டும். சரியானதை மதித்து ஏற்றுக்கொள்ள இறைவனின் முன்னிலையில் நன்னடைத்தையுடன் செயற்பட வேண்டும். இறை விருப்பத்தை அறிந்து அதனை நிறைவேற்ற முன்வர வேண்டும். நாம் பிறருடன் காட்டும் நல்லுறவானது, நாம் இறைவனுடன் நல்லுறவுடன் வாழ்கின்றோம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

### நோவா இறைவனின் இரக்கத்தைப் பெறல்

இறைவனின் முன்னிலையில் நேர்மையாளராக வாழ்ந்த நோவா கடவுளின் கருணையை தன் வாழ்வில் அனுபவித்தார். இறைவனின் பிள்ளைகளிடம் காணப்பட வேண்டிய கீழ்ப்படிவு, தாழ்வு, இறை விசுவாசம் போன்ற நற்பண்புகள் நோவாவிடம் அதிகம் காணப்பட்டன. நோவாவின் நல்ல வாழ்வு மற்றும் நல்ல இறையுறவை இறைவன் போற்றினார். எனவே அவருக்கு இறைவன் ஒரு பொறுப்பை வழங்கினார். நோவாவால் நோவாவின் குடும்பம் உட்பட மனித இனம் புதுப்பிக்கப்பட்டது.

இறைவனின் பிள்ளையாகிய நாம் இறைவனுடன் நட்புறவுடன் வாழ வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும். அதனால் நாம் கீழ்ப்படிவுடன், தாழ்வுடன், இறை விசுவாசத்துடன் வாழ வேண்டும். நாம் நல்வழியில் வாழும்போது இறைவனின் கருணையை அனுபவத்தில் காணலாம். தீயவழிகள் நிறைந்துள்ள உலகில் நல் வழியில் வாழும் சவாலை வெற்றி கண்டு உலகில் பணிசெய்வதற்கு எமக்கு இறையழைப்பு கிடைத்துள்ளது. இறை வார்த்தைக்கு ஏற்ப இறைவன் விரும்பும் நற்செயல்களை பாடசாலையில், வீட்டில், சமூகத்தில் நாம் நிறைவேற்றும்போது இறைவனின் முன்னிலையில் நோவாவைப் போன்று எமக்கு இறைவனின் கருணை கிடைக்கும்.

***இவ்வாறாக வாழும்போது நாம்,***

1. நற்பண்புகள் நிறைந்த பிள்ளையாக வாழ
2. குற்றமற்ற பிள்ளையாக வாழ
3. இறைவனுடன் நட்புறவுடன் வாழ
4. இறைவனின் கருணையுடன் வாழ வாய்ப்பு கிடைக்கும்.

இதன்மூலம் உலகைப் புதுப்பிக்கும் பணியில் இணையும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கும் நோவாவின் நல்ல வாழ்வினால் அவருக்கும் அவருடன் இருந்தவர்களுக்கும் இறை கருணை கிடைத்தது போல் எமது நல்வாழ்வால் எமக்கும் எம்முடன் இருப்பவர்களுக்கும் இறை கருணை கிடைக்கும். இவ்வாறான வாழ்வுக்கான இறை அழைப்பை நாம் ஏற்று வாழ்வோம்.

**செயற்பாடு**

1. கிறிஸ்தவ பிள்ளை என்ற ரீதியில் இறை கருணையைப் பெறுவதற்கு உமது வாழ்வில் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

# 2 இறை சமூகத்தில் நேர்மையாளர் ''தாவீது''

**1 சாமுவேல் 24 :1-22　　　2 சாமுவேல் 9 :1-13**

**அன்பு**

திருவிவிலியத்தில் சங்கிலிக் கோர்வை போன்று தொடர்ந்து காணப்படும் தலைப்பு 'அன்பு' ஆகும். இறையன்பை மனிதன் அனுபவித்த விதம் பற்றி பழைய, புதிய ஏற்பாடுகளைக் கற்கும்போது நாம் அறிந்துகொள்ளலாம்.

இந்தப் பாடத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் வரலாற்றுக் கதையில் இறைவன் எதிர்நோக்கும் வண்ணம் பகைவரிடம் அன்பு செலுத்தி, முன்மாதிரியாக வாழ்ந்த ஒப்பற்ற ஒருவரைப் பற்றிக் கற்போம்.

**வாசிப்போம்**

**தாவீது சவுலைக் கொல்லாது விடல்**

**1 சாமுவேல் 24 :1-22**

**தாவீதும் மெபிபொசேத்தும்**

**2 சாமுவேல் 9 :1-13**

நீங்கள் வாசித்த மேற்படி இரு திருவிவிலியப் பகுதிகளில் காணப்படும் முக்கிய நிகழ்வுகளின் சாராம்சம்:

### தாவீது ஏன்கேதி பாலைவனத்தில் சவுலைக் கொலை செய்வதைத் தவிர்த்தல்

- இஸ்ரயேல் மக்களின் முதல் அரசன் சவுல் பல்வேறு காரணங்களை முன்வைத்து தாவீதின் மீது பொறாமைப்பட்டான். அதனால் சவுல் அரசன் தாவீதைக் கொலை செய்வதற்கு முயற்சித்தான். இதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தாவீது பாலை நிலத்தில் மறைந்திருந்தான்.

- தாவீது ஏன்கேதிப் பாலைநிலத்தில் இருப்பதை அறிந்த சவுலும் அவரது ஆட்களும் தாவீதை அழிக்க வழிதேடினர்.

- ஏன்கேதிக் குகையில் சவுல் அரசரைக் கண்ட தாவீதுக்கு அவனைக் கொலை செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

- ஆனால் தாவீது சவுலைக் கொலைசெய்யாது, சவுலின் மேலங்கியின் முனையை அவருக்குத் தெரியாமல் வெட்டினான். அதற்காக தாவீது மனம் வருந்தினார்.

- தாவீது தம் ஆட்களைப் பார்த்து, ''ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத் தீங்கும் செய்யாதவாறு நான் அவர் மேல் கைவைக்கக் கூடாது'' என அவர்களைத் தடுத்தார்.

- சவுல் குகையை விட்டு வெளியேறியபோது, தாவீது சவுலைப் பின்தொடர்ந்து ''அரசே என் தலைவரே'' என்று அழைத்தார். பின் தாவீது தரையில் முகம் குப்புற விழுந்து அவரை வணங்கினார்.

- ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்ட என் தலைவருக்கு எதிராக நான் கை உயர்த்தக் கூடாது'' என தாழ்மையுடன் தாவீது கூறினார். உமக்கெதிராக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று தாவீது சவுலிடம் கூறினார்.

- தாவீது பேசி முடிந்தவுடன் சவுல் ''என் மகன் தாவீதே! இது உன் குரல் தானா!'' என்று சொல்லி உரத்த குரலில் அழுதார்.

- அவர் தாவீதிடம் ''நீ என்னிலும் நீதிமான்'' எனக் கூறி அவனது நேர்மைத் தன்மையை ஏற்றுக்கொண்டார். ''நானா உனக்குத் தீங்கு செய்தேன். நீ எனக்கு நன்மையே செய்திருக்கின்றாய்'' என்று கூறி இறைவனின் இரக்கமான ஆசிகளைத் தாவீதுக்கு வழங்கினார்.

## தாவீதும் மெபிபொசேத்தும்

- பின் ஒருகாலத்தில் சவுல் அரசனும் அவனது மகன் யோனத்தானும் போரில் தோல்வி அடைந்து மரணம் அடைந்தனர்.

- சவுலுக்குப் பின்னர் இஸ்ரயேலின் அரசனாக தாவீது நியமிக்கப்பட்டார்.

- போரில் தோல்வி அடைந்த அரச பரம்பரையை அழித்தல் அக்காலத்து வழக்கமாக இருப்பினும் தாவீது சவுலின் சந்ததியினரான தனது நண்பன் யோனத்தானின் மகன் மெபிபோசேத்தின் மீது கருணை காட்டினான்.

- மேலும் சவுலின் நிலத்தின் உரிமையை மாத்திரமன்றி, தன்னுடன் அமர்ந்து உணவருந்துவதற்கும் மெபிபொசேத்துக்கு இடமளித்தான்.

- அரச வழிமரபிற்கு உரிமையாளர் மட்டும் ஒன்றாக உணவருந்துதல் அன்றைய

வழக்கமாக இருந்தாலும், யோனத்தானின் மகன் மெபிபொசேத்துவை உண வருந்த அழைத்தமையின் மூலமாக அவனை தனது மகனாகக் கருதினார் என உணர்த்தப்படுகின்றது.

- மெபிபொசேத்துக்கு உடல் குறைபாடு காணப்படினும் அவனது வாழ்வுக்கு மதிப்பளித்து அவனை அன்புடன் பராமரித்து தாவீது பிறருக்கு முன்மாதிரியாகினார்.

தாவீதின் நேர்மை வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் :

- ஏன்கேதியில் சவுலைக் கொலைசெய்வதைத் தவிர்த்தல்
- மெபிபொசேத்துக்கு கருணை காட்டல்

தாவீதின் வாழ்வில் வெளிப்பட்ட நற்பண்புகள் பின்வருமாறு

**தாவீது**

- **சவுல் இறைவனால் திருப்பொழிவு பெற்றவர் என ஏற்று அவர் மீது கருணை காட்டினார்.**
- **இறைபயத்துடன் செயற்பட்டார்.**
- **கீழ்ப்படிவுடன் செயற்பட்டார்.**
- **பழிவாங்காமல் அன்புடன் செயற்பட்டார்.**
- **சரியானவைகளில் மனதைச் செலுத்தினார்.**
- **நேர்மையாளராக வாழ்ந்தார்.**
- **கருணை நிறைந்து காணப்பட்டார்.**
- **மன்னிப்பு வழங்கினார்.**
- **பிறரின் உடைமைகளைப் பறிக்காது வாழ்ந்தார்.**
- **பிறரது வாழ்வைப் பாதுகாத்தார்.**
- **தமது அதிகாரத்தை தமது மனம் ஆட்கொள்ளாது இறைவனுக்கு உரித்தானவராகச் செயற்பட்டான்.**

இவ்வாறாக தாவீது நேர்மையுடன் செயற்பட்டது போன்று கிறிஸ்தவர்களாகிய நாமும் நேர்மையுடன் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாம் பிறரின் வாழ்வைப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது எம்முடன் இணைந்து செயற்படுபவர்களைப் போன்று எமக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மீதும் சமமாகக் கருணை காட்டும் மனம் அவசியம். அதேபோன்று தம்மைப் பாதுகாப்பது போல மாற்றுத் திறனாளிகளின் சுக நலத்தையும் பாதுகாப்பதில் ஈடுபடல் வேண்டும். நல்லவைகளைச் செய்து நேர்மை நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்.

### செயற்பாடு

1. தாவீதின் நற்பண்புகள் வெளிப்பட்ட நிகழ்வுகளை எழுதுக.
2. கிறிஸ்தவ பிள்ளையாக நீர் உங்களுடன் இருப்பவர்களிடம் அன்புடன் செயற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மூன்றை விளக்குக.

# 3 விண்ணப்பம் - நாளாந்த வாழ்வுக்கு

**மத்தேயு 6 : 5-15**

தொழினுட்பம் அதிகமாகக் காணப்படும் இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் மிகப் பிரபல்யமாகவும் விரைவாகவும் இடம்பெறுகின்றது. கையடக்கத் தொலைபேசி, முகப் புத்தகம், மின்னஞ்சல் போன்றன எமது தொடர்பாடலை மிக இலகுவாக்கி உள்ளன. ஒவ்வொருவருடனும் மிக விரைவாக தகவல்களைப் பரிமாறி தொடர்பு களைப் பேணிக்கொள்வதற்கு இவைகளினால் சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன.

அவ்வாறே கிறிஸ்தவ வாழ்வில் விண்ணப்பம் மிக முக்கியமான ஊடகம் ஆகும். தொடர்பாடல் யாருடன் நிகழ்கின்றது?




இயேசு தனது வாழ்வில் எப்போதும் விண்ணப்பத்தை இணைத்து வாழ்ந்தார். அவரது விண்ணப்ப வாழ்வின் நிகழ்வுகள் சில பின்வருமாறு:

- தமது சீடர்களைத் தெரிவுசெய்யும் முன்னர்
- அற்புதங்கள் செய்வதற்கு முன்னர்
- தமது பணியை ஆரம்பிக்கும் முன்னர்
- துன்புறுத்தலை எதிர்நோக்கும் முன்னர்.

தமது சீடர்களுக்கும் விண்ணப்பம் செய்வதற்கு கற்பித்த இயேசு, அதற்கு வழிகாட் டுவதற்கு மாதிரியையும் அறிமுகம் செய்தார்.


**வாசிப்போம்**
**மத்தேயு 6 : 5-8**

மேற்படி திருவிவிலியப் பகுதியை ஆராயும்போது மக்கள் இறைவனிடம் வேண்டுதல் செய்யும் முறையில் காணப்படும் குறைகளைக் கண்டு, அவைகளைச் சரியாக்கி வேண்டுதல் செய்யும் முறையை இயேசு காண்பித்துள்ளார் என்பதை அறியலாம். விண்ணப்பம் செய்வதில் அன்றைய மக்களிடம் இயேசு அவதானித்த குறைகளையும் இயேசு அவற்றைத் திருத்திய விதத்தையும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடுக.

| காணப்பட்ட தவறான முறை | இயேசு காட்டிய சரியான முறை |
|---|---|
| மத்தேயு 6:5 ........................ | மத்தேயு 6:6 ........................ |
| மத்தேயு 6:7 ........................ | மத்தேயு 6:8 ........................ |

இவர்கள் வேண்டுதல் செய்த முறையானது அர்த்தமற்றது எனக் காட்டி, இயேசு தமது சீடர்களுக்கும் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் வேண்டுதலில் சரியான வழியைக் காட்டினார். தனியாக அல்லது இணைந்து தமது உள்ளங்களையும் சிந்தனைகளையும் இறைவனிடம் மட்டும் நோக்கி பொருள்பட விசுவாசத்துடன் வேண்டுதல் செய்யுமாறு இயேசு கற்பித்தார்.

இயேசு எமக்கு அறிமுகம் செய்த விண்ணப்பத்தை முழுமையாக நோக்கும்போது, அது தன்னலமற்றதாகவும் தற்பெருமை அற்றதாகவும் பொதுநலமுடையதாகவும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.




இயேசுவால் எமக்குக் கற்பித்த மேற்படி விண்ணப்பம், கிறிஸ்தவ விண்ணப்பத்துக்குச் சரியான வழிகாட்டலுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைகின்றது.

**வாசிப்போம்**
**மத்தேயு** 6 : 9 - 13

**இறைவனை நடுநிலைப்படுத்தி முன்வைக்கப்படும் மேற்படி இறைவேண்டலில் வெளிப்படும் இறை பண்புகளையும் சிறப்பான கருத்துக்களையும் ஆராய்வோம்.**

**விண்ணுலகிலிருக்கிற**

விண்ணுலகிலிருக்கிற என்ற விண்ணப்ப ஆரம்பம் எல்லாம் வல்ல இறைவனில் எமது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. எமது விசுவாசத்தின் ஆக்கியோன் எல்லாம் வல்ல இறைவன் ஆவர். அவர் எம்முடன் இருப்பது போன்று உன்னத இடத்திலும் வாசம் செய்கின்றார்.

## எங்கள் தந்தையே

''எங்கள் தந்தையே'' என்பது யூதப் பிள்ளைகளின் மிக பழக்கப்பட்ட விழித்தல் ஆகும். அப்பா (தந்தை) என ஆரம்பமாகும் வேண்டுதல் காண்பிக்கின்றது. இறைவனுக்கும் எமக்கும் இடையில் ஏற்படும் தந்தை - பிள்ளை உறவை, இயேசு இந்த வேண்டுதல் ஊடாக எமக்கு வெளிப்படுத்துகின்றார். அவரை விசுவாசிக்கும் எல்லோருக்கும் 'எமது தந்தையே' என அழைக்கும் உரிமையை வழங்கினார். இதில் அனைவருடனும் ஏற்படும் இறையன்பு வெளிப்படுத்தப்படுகின்றது. அவர் இவ்வுலகில் வாழும் அனை வருக்கும் இறைவன் என்பதும் இறைவனின் இரக்கம் அனைவருக்கும் உரித்தானது என்பதும் இதில் உறுதியாகின்றது.

## உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக!

இறைவனின் புனித பெயரைக் கௌரவமுடன் கூறி அவரிடம் கிட்ட நெருங்க முடியுமென இவ்வேண்டுதல் மூலம் கற்பிக்கப்படுகின்றது. வல்லமையுடைய புனித இறைவனின் பெயருக்கு கௌரவத்தைக் காட்டும் ஆரம்பமாக அமைவதை நாமறியலாம். ''உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக'' என்பதில் கடவுளின் மேன்மை, மகிமை என்பனவற்றை விளங்கி இறை பயத்துடன் வேண்டுதலை மேற்கொள்ள வேண்டும் என்பது வெளிப்படுகின்றது.

## உமது ஆட்சி வருக

இறைவன் ஊனுடலாகி இயேசுவாக இவ்வுலகுக்கு இறையரசை எமக்கு உரித்தாக்குமாறு வந்தார். 'உமது ஆட்சி வருக' என்பதில் இறைவனின் ஆட்சி, எமது வாழ்வில் அனுபவிக்கப்பட வேண்டுமென்பது உணர்த்தப்படுகின்றது.

## உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுக!

''உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறை வேறுக'' என்பது கிறிஸ்தவர்களின் அனைத்து வேண்டுதல்களின் நோக்கமாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாள்தோறும் இறைவிருப்பத்தை வேண்டி விண்ணப்பம் செய்ய இந்த வேண்டுதல் வழிகாட்டுகின்றது. வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் எடுக்கும் தீர்மானங்களில் இறை விருப்பத்தைத் தேடி இறை வனிடம் எம்மை ஒப்படைக்க இந்த வேண்டுதல் வழிநடத்துகின்றது.

## இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்

*என்னைப் போன்று எம் அனைவரதும் தேவைகளை இறைவனிடம் வேண்டுவதற்கு இயேசு இந்த விண்ணப்பத்தை எமக்குக் கற்பித்தார். ''இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்'' என்பதில் எமது நாளாந்த தேவைகளுக்காக இறைவனில் தங்கியிருக்கப் பழக்கப்படுகின்றோம். அவர் எமது ஆயராக நாளாந்தம் எம்மைப் போஷிக்கின்றார். விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் அவருடன் தங்கியிருத்தல் அவசியம். அவர் எமது தேவைகளை எம் ஒவ்வொருவருக்கும் முழுமையாக வழங்கிட செயற்பட்டு வருகின்றார். எமது தேவைகளைப் போன்று பிறரின் தேவைகளிலும் எமக்குப் பொறுப்பு உண்டு என்பது இங்கு தெளிவாகப் புலப்படுகின்றது.*

## எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்

*'எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்' என்பதில் இயேசு பாவ மன்னிப்புப் பெறுதல் மற்றும் வழங்குதலின் அவசியத்தில் கவனம் செலுத்துகின்றார். எமது பாவங்களுக்காக மன்னிப்புப் பெறுவதற்காக எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் இங்கு காட்டப்படுகின்றது: எமக்கு எதிராகக் குற்றம் செய்பவர்களை மன்னித்தல் ஆகும். நாம் பிறரின் குற்றங்களை மன்னித்தால் இறைவன் எமது குற்றங்களை மன்னிப்பார். எம்மால் பிறர் மீது இறை மன்னிப்பு பெருக்கெடுத்து ஓடுதல் அத்தியாவசியம் ஆகும். இறை மன்னிப்பைப் பெறும் அனைவரும் இறைவனில் புதுவாழ்வை அடைவர். அதற்காக பாவமன்னிப்பு வேண்டி மனம்மாறி வாழவேண்டியதன் தேவையை ஆண்டவர் இயேசு மேற்படி முன்மாதிரி விண்ணப்பத்தில் காட்டியிருக்கின்றார்.*

## எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும் தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்

*இயேசு கற்பித்த முன்மாதிரி விண்ணப்பங்களில் இறை பாதுகாப்புத் தரும் விண்ணப்பம் முக்கியமானது. 'எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்' என வேண்டுமாறு இயேசு கற்பித்தார். தீயோனின் சோதனைகளுக்கு உட்படுதல் என்பது இறைவனிடமிருந்து விலகுதல் ஆகும். எனவே தீயோனிடமிருந்து விலகி வாழ இறை பாதுகாப்பை இறைவனிடம் வேண்டி வாழ சீடர்கள் ஈடுபட்டனர். எமது வாழ்வுப் பயணத்தில் எங்கள் சிந்தனைகள் மற்றும் வார்த்தைகளால் மட்டுமல்ல செயல்களினாலும் தீயோனின் சோதனைகளிலிருந்து விடுபட்டு கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும் என்பதை இது வலியுறுத்துகின்றது.*

**இவ்வாறு இயேசு கற்பித்த விண்ணப்பத்தை நாம் பயன்படுத்தும்போது,**

- அமைதியான இடத்தைத் தெரிவுசெய்து இறைவனை வணங்குவோம். அமைதியான சூழலில் அவருடைய பிரசன்னத்தை அனுபவிப்போம்.
- சிறுவயது முதல் இரு கரங்களையும் கூப்பி இறைவனை வணங்கிடப் பழகுவோம். இறைவனுடன் கொண்டுள்ள தொடர்பினால் ஏற்படும் ஒன்றிப்பை அனுபவித்தல் காண்போம்.
- முழந்தாளில் நின்று முழுமனதுடன் விண்ணப்பம் செய்வோம். இதன் மூலம் இறைவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிகின்றோம் என்பது வெளிப் படுகின்றது.
- கண்களை மூடி இறை வேண்டுதல் செய்வோம். முழுமனதோடும் முழுசிந்தனையோடும் முழுஆத்மாவோடும் இறைவேண்டுதல் செய்வோம்.

**இவ்வாறு இயேசு எமக்குக் கற்பித்த இறைவேண்டுதலில்,**

- இறைவனுக்கு நன்றிகளுடன் துதி செலுத்துவோம்.
- இறை நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வளர்ப்போம்.
- இறையன்புடன் வாழ்வோம்.
- இறைவிருப்பத்தை நிறைவேற்றுவோம்.
- இறை போசணை, இறை மன்னிப்பு, இறை பாதுகாப்பை உணர்வோம்.

அப்போது நிறைவான கிறிஸ்தவ வாழ்வினை நாம் அனுபவிக்கலாம்.

### செயற்பாடு

1. இறை வேண்டலில் காணப்பட வேண்டிய அம்சங்களை இயேசு எமக்குக் கற்றுக் கொடுத்த இறை வேண்டுதலைப் பயன்படுத்தி எழுதுக.
2. இயேசு வாழ்ந்த சமூகத்தில் மக்கள் பின்பற்றிய தவறான விண்ணப்பப் பழக்கங்களை விபரித்து உங்கள் ஜெபவாழ்வில் அவற்றைச் சரியாக்கிக் கொள்ளும் முறைகளை விளக்குக.

# 4 இறைவனின் தீர்வு

**யோவான் 2 : 1-11**

## கானாவில் திருமணம் - அரும் அடையாளம்

யூத சமூகத்தில் திருமண விழாவுக்கு விசேட இடம் கொடுக்கப்பட்டது. யூதர் திருமண விழாவை ஏழு நாட்கள் கொண்டாடுவர். இந்த ஏழு நாட்களும் தமது பாரம்பரியங்களை நிறைவேற்றி மகிழ்வடைவதில் மணவாளனும் மணவாட்டியும் கலந்துகொள்வர். இந்த ஏழு நாட்களும் திருமண விழாவில் கலந்து கொள்ளும் அனைவர்களினதும் தேவைகளை நிறைவேற்றுதல் வேண்டும். குறைவுபடின் அவர்களுக்குச் சமூகத்தில் அவமான நிலை உருவாகும். இதனால் இந்த ஏழு நாட்களும் விழாவைக் கொண்டாடி விருந்தாளர்களை உபசரிப்பது யூதரின் வழக்கமாக இருந்தது.

இயேசுவும் அவருடைய சீடரும் அவருடைய தாயாரும் கலிலேயாவில் உள்ள கானா ஊர் திருமணத்திற்கு அழைப்பு பெற்றனர். அங்கு இடம் பெற்ற சிறப்பான நிகழ்வை ஆராய்வோம்.

**வாசிப்போம்**
**யோவான் 2:1-11**

கானாவில் திருமணம் குறித்து யோவான் நற்செய்தி நூலில் மாத்திரமே குறிப் பிடப்பட்டுள்ளது. இதனை யூதர் முக்கிய நகரமாக கவனத்தில் கொள்ளாதிருந்தனர். இவ்வாறான நகரை இயேசு தனது முதல் அரும் அடையாளத்தைச் செய்வதற்காகத் தெரிவுசெய்தது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான திருமண வைபவத்தில் திராட்சைரசம் குறைவுபட்டது. யூத திருமணத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்படும் வேளையில் திருமணத்துடன் தொடர்பானவர்கள் எதிர்நோக்கும் நிலையைக் கண்ட இயேசுவின் தாயார் இயேசுவிடம் அதனை அறிவித்தார்.

ஏற்பட்ட அந்நிலையினால் ஏற்படும் அவமானத்தில் இருந்து விடுவிக்க இயேசு தமது முதல் அரும் அடையாளத்தை அதாவது முதல் அற்புதத்தை செய்தார். ஆறு கல் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்று தமது சீடர்களுக்கு கூறினார். அவற்றைப் பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள் என்றார். அப்போது தண்ணீர் திராட்சைரசமாக மாறியிருந்தது.



**உரு** 4.1 **கானா ஊர் திருமணம்**

கானாவில் திருமணத்தில் இயேசுவால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என மரியா விசுவாசித்தாள். தனது மகன் இறைமகன் என அவர் அறிந்திருந்தார். அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என பணியாளரிடம் கூறினார். மரியா விசுவாசம் உடையவளாக இருந்தது மாத்திரமல்ல பணியாளரிடமும் இயேசுவைக் குறித்த விசுவாசத்தைக் கட்டியெழுப்பினார்.

நாம் வாழும் சமூகத்தில் குறைவுகளில் இறைமகன் இயேசுவில் விசுவாசம் வைத்து அவரது ஆசியை எதிர்பார்த்து வாழ மரியா முன்னுதாரணமாகச் செயற்பட்டார்.

வாழ்வின் அனைத்துத் தேவைகளிலும் இயேசுவை அழைத்து அவருடன் இணைந்து வாழ இடமளித்தல் இறை பிள்ளைகளின் பொறுப்பாகும். அவர் எவ்வேளையிலும் பெரிய, சிறிய எல்லோரினதும் அழைப்பை ஏற்றுக்கொள்கின்றார். அவர் எம்முடன் வாசம் செய்வதால் எமது வாழ்வில் ஒளியும் சக்தியும் கிடைக்கின்றது.

அவ்வாறே, வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென இந் நிகழ்வு எமக்குக் கூறுகின்றது. திராட்சைரசம் குறைவுபட்டதைக் கண்ட

மரியா இயேசுவிடம் அறிவித்தபோது, இயேசு ''அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே'' என்றார். உலக வாழ்வின் செயல்களில் கவலைப்படாது இறைமகனாகிய இயேசுவில் விசுவாசம் வைக்க தமது தாயை ஈடுபடுத்தி இயேசு செயற்பட்ட விதம் சிறப்பானதாக அமைகின்றது.

**நாம் மரியாவைப் போன்று,**

- எமது வாழ்வின் பிரச்சினைகளை இயேசுவிடம் கொண்டு செல்வோம்.
- எமது வாழ்வின் பிரச்சினைகளில் கலக்கம் அடையாது இறைமகன் இயேசுவை விசுவாசித்து வாழ்வோம்.
- இயேசுவில் விசுவாசத்துடனும் கீழ்ப்படிவுடனும் செயற்பட்டு அவர் எமது வாழ்வில் அடையாளங்களைச் செய்ய இடமளிப்போம்.

மரியாவின் செயற்பாடுகளை ஆராய்ந்த நாம், அத்திருமண வைபவத்தில் பணியாளர்களின் செயற்பாடுகளையும் ஆராய்வோம்.

அந்த இடத்தில் யூதரின் தூய்மை செய்யும் பாரம்பரியம் தொடர்பாக ஆறு கல் தொட்டிகள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும். பாரம்பரிய சடங்குகளுக்கு முக்கிய இடமளித்த யூதர், தமது தூய்மை மற்றும் புனிதத்துவத்தில் கவனம் செலுத்தி வந்தனர். எந்தவொரு யூத வீட்டுக்குள் நுழைந்தவுடன் பணியாளர் விருந்தினரின் பாதங்களைக் கழுவுதல் யூதரின் பாரம்பரிய பழக்கம் ஆகும். அதேபோன்று கைகள், பாத்திரங்கள் என்பவற்றைக் கழுவ வேறாகத் தண்ணீர் நிரப்பப்பட்ட தொட்டிகள் காணப்பட்டன. பணியாளர் அவற்றை ஆயத்தம் செய்துவைப்பார். பணியாளர் இயேசு கூறியவாறு தொட்டிகளில் நீரை நிரப்பியவேளை புதுமையான அரும் அடையாளம் இடம்பெற்றது. இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட்டமையால் அவர்கள் அரும் அடையாளத்தைக் கண்டனர். வெறுமையான ஆறு கல் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி (அதாவது 600 லீட்டர்) பணியாளர் கீழ்ப்படிவின் நன்மையைப் பெற்றனர். இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென இந்நிகழ்வு எமக்கு வழிகாட்டுகின்றது. இதனால் மகத்தான ஆசிகள் வரும். இயேசு இந்தத் தேவையின்போது அரும் அடையாளத்தைச் செய்தார். எந்தவொரு பிரச்சினைகளையும் அவரால் தீர்க்க முடியுமென்பதை இதன் மூலம் இயேசு காட்டினார்.

இயேசு கானாவில் திருமணத்தில் இருந்தவேளை ஏற்பட்ட சிக்கலை இலகுவாகத் தீர்த்து வைத்தல் புதுமையானது. ஆறு கல் தொட்டிகளை நிரப்பிய பணியாளரும் மேற்பார்வையாளரும் இறை வாசகத்தை அனுபவத்தில் கண்டனர். அவருடைய சீடரும் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

நாம் இறைவல்லமையை அனுபவித்து பிறரும் அதனை அனுபவிப்பதற்கு வழி அமைக்கும் ஊற்றாக செயற்பட வேண்டுமென இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். அப்போது எமது ஆன்மீக வாழ்வு மாற்றமடையும்.

எமது வாழ்வில் இயேசு வல்லமையானவைகளைச் செய்வதற்குக் கீழ்ப்படிவுடன் நாம் இடமளித்தால் ஆன்மீக அனுபவத்தைப் பெற எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இங்கு அவர்கள் இறை பிரசன்னம் மற்றும் இறை சமீபம் இருப்பதைக் கண்டனர்.

எமது நாளாந்த வாழ்வில் இறை பிரசன்னத்தை நாம் அனுபவிக்கும்போது எமது ஆன்மீக வாழ்வு பூரணமடையும். இறைவனின் திட்டத்திற்கு ஏற்ப மிக உயர்வான வற்றையும் நல்லவற்றையும் அவர் எமது வாழ்வில் செய்து வருகின்றார். அப்போது முன் இருந்தவற்றை விட பெறுமதி மிகுந்தவற்றை எம்மால் கண்டு கொள்ள முடியும்.

இயேசு கானாவில் திருமணத்தில்,

1. தண்ணீரை திராட்சைரசமாக்கியதன் மூலம் அரும் அடையாளத்தைச் செய்தார்.
2. இறைவனின் மகத்தான வல்லமை இயேசுவிடம் காணப்பட்டது.
3. திருமண தம்பதிகள் உலக போக்கிலான அவமானத்திலிருந்து பாதுகாக்கப் படைந்தனர்.
4. பணியாளரின் கீழ்ப்படிதல் புலப்படுகின்றது.
5. இறைவனின் கருணையால் சிக்கல் தீர்க்கப்பட்டதை அறியலாம்.
6. சீடர்களின் நம்பிக்கை வளர்ச்சி அடைந்தது.
7. மரியா மற்றும் சீடர்களின் பணியாளரின் திருமண வீட்டின் தேவை நிறை வேற்றப்பட்டது.

வாழ்வின் பல்வேறு தேவைகளில் இறை பிரசன்னத்தை அனுபவித்து, இயேசுவிடம் வர இன்றும் எம்மை அவர் அழைக்கின்றார். அந்த ஆசியைப் பெற்று பிறருடன் இணக்கத்துடன், பிறரின் தேவைகளில் உதவி செய்ய முன்வர வேண்டுமென அவர் கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் எதிர்ப்பார்க்கின்றார்.

**செயற்பாடு**

1. கானாவில் திருமணத்தில் ஒரு நிகழ்வை உரையாடலாக எழுதுக.
2. கானாவில் திருமண வைபவத்தின் பல்வேறு சம்பவங்களில் இருந்து உமது வாழ்விற்கு நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

# 5 இறை வல்லமையால் ஊட்டம் பெறுதல்

**மாற்கு 8 :1-10**

**ஆண்டவரே என் ஆயர்**
**எனக்கேதும் குறையில்லை**

மேற்படி இறைவார்த்தையானது ஆண்டவரே எம் ஆயர் என்ற உண்மையை எமக்கு நினைவுபடுத்துகின்றது. அவர் அதை உறுதிப்படுத்திய சந்தர்ப்பங்கள் பல பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாலை நிலத்தில் இஸ்ரயேலருக்கு உணவளித்தல், இறைவாக்கினர் எலியா சாரிபாத் விதவையாலும் காகத்தினாலும் போஷிக்கப்படுதல் அவற்றுள் சிலவாகும்.

புதிய ஏற்பாட்டிலும் இயேசு மக்களைப் போசித்த அருஞ்செயல்களைச் செய்தார் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. இயேசு செய்த அருஞ்செயல் ஒன்று பின்வருமாறு :



வாசிப்போம்
மாற்கு 8 : 1-10

**தொடர்புடையவர்கள்** → **ஏறக்குறைய நான்காயிரம் பேர், பல்வேறு வயதெல்லை உடையவர்கள், யூத மக்கள், பல்வேறு இன பெண்கள், ஆண்கள், வயோதிபர், பிள்ளைகள்.**

**தங்கியிருந்த காலம்** → **மூன்று நாட்களாக அவர்கள் இயேசுவின் போதனைகளைக் கேட்டு அவருடன் தங்கி யிருந்தனர்.**

**எதிர் நோக்கிய பொதுச் சிக்கல்** → **மூன்று நாட்களாகத் தொடர்ந்து இயேசுவின் போதனைகளைக் கேட்டும் உணவு எதுவும் வழங்கப்படவில்லை.**

இவ்வாறாக இக் கூட்டத்தினர் மூன்று நாட்களாக இயேசுவின் போதனைகளைக் கேட்டு ஆன்மீகத் திருப்தியை அடைந்தனர். அவர்களது ஆன்மீகத் தேவையைத் தமது போதனையூடாக நிறைவேற்றிய இயேசு அவர்களின் உடல் தேவையையும் அறிந்து செயற்பட்டார்.

**உங்கள் வாழ்வில் என்றாவது ஆன்மீக சத்தியங்களை அறிந்து கொள்வதற்கு இறை வார்த்தைகளைக் கற்பதற்கு அதிக தேவை ஏற்பட்டதா? அதற்காக உலக வாழ்வின் தேவைகளைத் தாண்டி அவருடன் தங்கியிருக்க உம்மால் முடியுமா?**

மூன்று நாட்களாக அவரது போதனைகளைக் கேட்ட மக்களின் உடல் தேவைகளை அறிந்து கொண்ட இயேசு,

- கவலை அடைந்தார்.
- அவர்களின் உடல் தேவைகளை அறிந்து கொண்டார்.
- கருணையுடன் அவர்களது பிரச்சினைகளில் இடைப்பட்டார்.

சீடர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அவர் முயற்சித்தார். இப் பாலை நிலத்தில் இவர்களுக்குப் போதுமான உணவு எப்படி அளிப்பது என சீடர்கள் கேட்டனர். உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன என இயேசு கேட்டார். ஏழு அப்பங்கள் உள்ளன. சில மீன்களும் இருக்கின்றன என்றனர்.

அவருக்கு ஒரே கணத்தில் அருஞ்செயலினால் தீர்ப்பளிக்கும் ஆற்றல் இருந்தும் அவர் சீடர்களுடன் தொடர்புகொண்டு செயற்பட்டார். சீடர்களும் மக்களின் தேவைகளை அறிந்துகொள்ளவேண்டுமென இயேசு எதிர்பார்த்தார்.

இவ்வாறாக மானிடரின் பிரச்சினைகளுக்கு மனித அறிவால் தீர்க்க முடியாதவற்றிற்கு இயேசு அருஞ்செயல்களால் தீர்வு பெற்றுக் கொடுத்தார்.

இயேசுவால் இந்த அருஞ்செயல் ஆற்றிய முறை குறித்து நாம் ஆராய்வோம்.

- அவர் மக்களைத் தரையில் அமரக் கட்டளையிட்டார்.
- ஏழு அப்பங்களையும் எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தினார்.

- அப்பங்களைப் பிட்டார்.
- அவைகளைப் பரிமாறும்படி சீடர்களிடம் கொடுத்தார்.
- அவர்களிடம் இருந்த சிறு மீன்களையும் ஆசி கூறிப் பரிமாறச் சொன்னார்.

மேற்படி அருஞ்செயல் நிகழ்வு குறித்து இறைவார்த்தை பின்வருமாறு கூறுகின்றது.

**''அவர்கள் வயிறார உண்டார்கள். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள்'' அங்கு இருந்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேர் (மாற்கு 8-8-9)**

இயேசு மனிதத் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் வண்ணம் அருஞ் செயல்களைச் செய்தார். நான்காயிரம் பேருக்கு உணவளித்த அருஞ்செயலைச் செய்தார். நான்காயிரம் பேருக்கு உணவளித்த அருஞ்செயலில் எமது வாழ்வுக்குக் கிடைக்கும் வழிகாட்டல்கள்:

- இயேசு இறைமகன் என்பதால் மனித எல்லைக்கு அப்பால் சென்று பெரிதான அருஞ்செயலைப் புரிந்தார். நற்செய்தி நூலை வாசிக்கும் போதும் உங்களது தனிப்பட்ட வாழ்வின் அனுபவங்களிலும் அவற்றை நீங்கள் அறிந்துகொள்ள முடியும். இதனால் அன்பான ஆண்டவரை நம்பிக்கையுடன் பார்ப்போம்.

- அவர் மனித தேவைகளைச் சரியாக இனம் கண்டார். மனிதரின் சிக்கலான நிலையைக் குறித்து கவலைப்பட்டார். இயேசு செய்த மேற்படி அருஞ்செயலால் மனிதர் குறித்து அவர் காட்டும் இரக்கம் வெளிப்படுகின்றது. மானிடரின் ஆன்மீக போசணை போன்று உடல் போசணையிலும் கரிசனை காட்டினார். மனிதத் தேவையை நிறைவேற்ற அவர் முன்வந்தார். எமது வாழ்வுப் பிரச்சினைகளில் அவர் பங்கு கொள்கின்றார் என விசுவாசிப்போம்.

- இயேசு மேற்படி அருஞ்செயலை செய்யும் வேளையில் சீடர்களின் பங்களிப்பையும் பெற்றார். அருஞ்செயல் செய்வது ஆண்டவர். ஆனால் பல சந்தர்ப்பங்களில் சீடர்களும் தமது பங்களிப்பை வழங்கினர். அருஞ்செயல் இடம் பெற இயேசு எமது ஒத்துழைப்பையும் நாடுகின்றார். நீங்கள் நம்பிக்கையுடன் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவரது மகத்தான வல்லமையை அனுபவிக்கலாம்.

- எல்லோர் மீதும் இரக்கம் காட்டுவதற்கும் பிரச்சினை வேளைகளில் ஒன்றிணைந்து இறைபாதம் வர நீங்கள் முயற்சிக்க வேண்டும். இயேசு மக்களுக்காக மனதுருகி வாழ்ந்தது போல சமூக தேவைகளுக்காக மனதுருகி வாழ எமக்கும் சவால்கள் காணப்படுகின்றன.

- இயேசு மக்களின் ஆன்மீக, சரீரத் தேவைகளை நிறைவேற்றினார். இறை வார்த்தைகளை வாசித்து இறை தொனியைக் கேட்டு ஆன்மீக பலத்துடன் அவரில் தங்கியிருத்தல் அவசியம். எமது வாழ்வின் அனைத்துத் தேவைகளையும் அவர் வழங்குகின்றார்.

- அதனால் அவரிடம் நம்பிக்கையுடன் செல்வோம். அவரால் போஷிக்கப்படு வோம். உலகில் வல்லமையான செயல்கள் இடம்பெற வேண்டுமென விசு வாசிப்போம்.

### செயற்பாடு

1. நான்காயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்ச்சியில் நீங்களும் தொடர் புடையவர் என நினைத்து அந்த நிகழ்வை உங்கள் வசன நடையில் விபரித்து எழுதுங்கள்.

2. நான்காயிரம் பேருக்கு உணவளித்த நிகழ்வில் நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்கள் 5 இனை எழுதுக.

# 6 நம்பிக்கையில் குணம்

**யோவான் 4: 46 -54**

**கதை கூறுநர்** : இயேசு கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணத்தில் முதலாவது அரும் அடையாளத்தைச் செய்ததை நீங்கள் அறிந் திருப்பீர்கள். இதோ கானா நகரில் இடம்பெற்ற இன்னுமொரு அரும் அடையாளம்.

**இளைஞன்** : இம்முறை இறையருளை அனுபவித்தவர் யார்?

**கதை கூறுநர்** : அவர் ஒரு அரச அலுவலர்; அந்திபஸ் ஏரோது அரசனுக்கு பணி செய்யும் அலுவலர் அவர் அவரது மகன் கப்பர்நகூமில் நோயாளராக இருந்தான். அப்போது யூதேயாவிலிருந்து கலிலே யாவில் உள்ள கானாவுக்கு இயேசு வந்திருப்பதை அவன் கேள்விப்பட்டான்.

**இளைஞன்** : அப்போது அவன் தனது மகனை கப்பர்நகூமிலிருந்து கானாவுக்கு இயேசுவிடம் அழைத்து வந்தாரா?

**கதை கூறுநர்** : இல்லை, அரச அலுவலர் இயேசுவிடம் சென்றார். ஒரு கணம் கேளுங்கள். அவர் இயேசுவைச் சந்திக்கச் சென்றார்.

**அரச அலுவலர்** : ''சாகும் தறுவாயிலிருக்கும் என் மகனை நலமாக்க வாரும்.''

**இயேசு** : ''அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்.''

**அரச அலுவலர்** : ''ஐயா, என் மகன் இறக்கு முன் வாரும்.''

**இயேசு** : ''நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்.''

**கதை கூறுநர்** : அரச அலுவலர், இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார். அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர் கொண்டு வந்தார்கள்.

**இளைஞன்** : அவர்கள் ஏன் வந்தார்கள்? ஏதாவது விசேட காரணம் இருந்ததா?

**கதை கூறுநர்** : நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

**பணியாளர்** : உங்கள் மகன் பிழைத்துக் கொண்டான்.

**அரச அலுவலர்** : எத்தனை மணிக்கு நோய் நீங்கியது?

**பணியாளர்** : நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு காய்ச்சல் நீங்கியது.

**அரச அலுவலர்** : (''எம் மகன் பிழைத்துக் கொள்வான்.'' என நினைத்தல்)

**கதை கூறுநர்** : மேற்படி அரும் அடையாளத்தைக் கண்ட அரச அலுவலரும் அவரது வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர்.

**இளைஞன்** : இயேசு கலிலேயாவில் அரும் அடையாளங்களைச் செய்திருக் கிறார் அல்லவா?

**கதை கூறுநர்** : ஆம் இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்த பிறகு செய்த இரண்டாவது அரும் அடையாளம் இதுவாகும். அவருக்கு எல்லாக் கௌரவமும் மகிமையும் உண்டாவதாக!

மேற்படி நிகழ்வில் எமது வாழ்வுக்குக் கிடைக்கும் முன்மாதிரிகள்.

அரச அலுவலரிடமிருந்து வெளிப்பட்ட பண்புகள்:

- அதிகாரம் செல்வம் காணப்படினும் தனது மகனின் மரணநிலையில் அவன் குணம் அடைய வேண்டுமென விசுவாசத்துடன் இயேசுவிடம் வருதல்
- கப்பர்நகூமிலிருந்து கானா நகருக்கு ஏறக்குறைய 20 மைல் தூரம் இருந்தும் மகன் நலமடைய வேண்டுமென எதிர்பார்த்து அவன் இயேசுவிடம் வந்தார்
- அவர் வேதனை நேரத்தில் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் இயேசுவை அழைத்தல்

- அவர் எதிர்பார்த்தவாறு இயேசு செயற்படாவிட்டாலும் இயேசுவுக்கு விசுவாசத் துடன் கீழ்ப்படிதல்

இவ்வாறாக, இயேசு குணமளிக்கும் கடவுள் என்பதை அலுவலர் கண்டறிந்தார். இயேசு செய்த பெரிய அரும் அடையாளம் மூலமாக ஆண்டவரின் மகிமையைக் கண்டார். வீட்டார் அனைவரும் இயேசுவை விசுவாசித்தனர்.

நாங்கள் நோய்வாய்ப்படும் போதும்,

- இயேசு நோயாளரைக் குணமாக்கும் கடவுள் என்பதை விசுவாசிப்போம்.
- விசுவாசத்துடன் அவரிடம் செல்வோம்.
- குணம் வேண்டி விண்ணப்பம் செய்வோம்.
- இயேசுவில் நம்பிக்கை கொள்வோம்.
- அவரிடத்தில் அடையாளங்களை எதிர்பார்ப்போம்.
- முழு மனதுடன் அவருக்குக் கீழ்படிவோம்.
- நம்பிக்கையுடன் அரும் அடையாளத்தை அனுபவிப்போம்.
- பிறரின் தேவைகளை இயேசுவிடம் கொண்டு செல்வோம்.

**செயற்பாடு**

1. கடவுளிடம் குணம் பெறுவதற்கு எம்மிடம் காணப்பட வேண்டிய குணாதி சயங்களைக் குறிப்பிடுக.
2. நோயுற்ற உமது நண்பன் / நண்பி குணமாகிட விண்ணப்பம் ஒன்றை எழுதவும்.

# 7 கருணையால் குணமடைதல்

யூதர்களுக்கு ஓய்வுநாள் மிக முக்கிய நாளாக இருந்தது. ஐந்நூல்களுக்கு அதாவது பஞ்ச புத்தகங்களுக்கு ஏற்ப ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதில் யூதர் மிக்க கவனம் செலுத்தி வந்தனர். அவர்கள் ஓய்வு நாளன்று எந்த ஒரு வேலையும் செய்வதைத் தவிர்த்தனர்.

ஆனால் இயேசு அவ்வாறான நீதிச் சட்டங்களின் மத்தியிலும் கருணையுடன் பணி செய்வதில் பின்னடையவில்லை. யூதரின் பலவந்த விமர்சனங்களின் மத்தியிலும் இயேசு ஓய்வு நாளில் நோயாளரைக் குணமாக்கி மனிதருக்குக் கருணை காட்டியமை நற் செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒரு நிகழ்வை இங்கு ஆராய்வோம்.



**வாசிப்போம்**
**மாற்கு 3:1-6**

இறைவன் ஓய்வுநாளைப் புனிதமாகக் கடைப்பிடிப்பதற்காக ஏற்படுத்தினார். ஓய்வுநாளில் மனிதனால் நல்லவைகளைச் செய்தல் இறைவனின் எதிர்பார்ப்பு ஆகும். ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை என்பதை இயேசு எப்போதும் கடைப்பிடித்தார்.

நாம் வாசித்த நற்செய்திப் பகுதியில் குறிப்பிடப்பட்ட நிகழ்வு அதனை அறிவுறுத்து கின்றது. இயேசு ஓய்வுநாளில் நன்மையானதைச் செய்வதில் ஈடுபட்ட முறையானது நிகழ்வில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆன்மீக வளர்ச்சிக்குத் தேவையானவைகள் யூத மக்கள் சமூகத்துக்குத் தொழுகை கூடத்தால் வழங்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு தொழுகைக் கூடத் துக்குச் சென்றார் என நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒருநாள் இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்றார். அங்கு கைசூம்பியவர் ஒருவர் இருந்தார்.

***இயேசு தொழுகைக் கூடத்திற்குள் சென்றபோது மக்கள் அவரைக் கூர்ந்து நோக்கினார். அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்?***

- அவரில் குற்றம் சுமத்தும் நோக்குடன்
- ஓய்வுநாளில் கை சூம்பியவரை குணப்படுத்துவாரா என்ற நோக்குடன்

ஓய்வுநாளில் ஏதாவது செயல்களில் ஈடுபடுதல் தண்டனைக்குரித்தான குற்றமென யூதர் விசுவாசித்தனர். இயேசு அவர்கள் நீதிச்சட்டங்களை விமர்சித்த விதங்களை நன்கு அறிந்திருந்தார்.

***இந்த நிலையில் இயேசு என்ன செய்தார்?***

**இயேசு**

- ***கைசூம்பியவரை எழுந்து நடுவே நில்லும் எனக் கூறி முன்னால் அழைத்தார்.***
- ***மக்களிடம் கேள்வி கேட்டார்.***
- ***மக்களின் பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தினார்.***
- ***கை சூம்பியவரைக் குணப்படுத்தினார்.***

ஓய்வுநாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா? எது முறையென்று இயேசு மக்களிடம் வினவினார். இதன்மூலம் மறைநூல் அறிஞர் நீதிச்சட்டங்களைக் கடைப்பிடித்த விதி முறைகளை இயேசு வினவினார். ஓய்வுநாளில் நற்செயல் புரிதல் இறை சித்தம் என்பதை இங்கு எடுத்துக் காட்டினார். மனிதரின் சிந்தனையில் தவறான நிலையை இயேசு இங்கு திருத்தினார். அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததை எண்ணி மனம் வருந்தினார். எனவே இயேசு கருணையுடன் கை சூம்பியவரை நலமாக்கினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இயேசுவிடம் காணப்பட்ட இறை வல்லமையும் குணப்படுத்தும் வரமும் மக்கள் முன்னிலையில் வெளிப்பட்டது.

**நோயுற்ற மனிதர் என்ன செய்தார்?**

**கைசூம்பியவர்**

- **எழுந்து நடுவே நில்லும் என இயேசு கூறிய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.**
- **பல்வேறு விமர்சனங்கள் முன்னிலையில் நின்றார்.**
- **கைகளை நீட்டும் என்றார். அவன் கீழ்ப் படிந்து கைகளை நீட்டினான். அவருடைய கை நலமடைந்தது.**

கைசூம்பியவர் இயேசு கூறியவாறு கீழ்படிவுடன் செயற்பட்டமையால் இறையாசி களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவனாகினார். அவரது கை நலமாக்கப் பட்டது.

இயேசு நீதிச்சட்டங்களையும் பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் கருத்தில் கொள்ளாது கருணையுடனும் பரிவுடனும் இந்த மனிதரிடம் செயற்பட்ட விதமானது எமது வாழ்வுக்கு நல்லதொரு முன்னுதாரணம் ஆகும்.

இறைவனின் பிள்ளைகளாக ஓய்வுநாளில் நன்மையான செயல்களைப் புரிந்து, அதனைப் புனித நாளாகக் கருதி செயற்படுதல் போன்று ஏனைய நாட்களையும் புனித நாட்களாக மதித்து வாழ வேண்டுமென்பதை நினைவில் கொள்வோம்.

எமது சமூகத்தில் நிறைவான வாழ்வு வாழும்போது சமூகத்தில் தேவை உள்ளவர் களை கவனத்தில் கொள்ளுவோம். அவ்வாறு செய்யும்போது,

- சமூகத்தில் ஏற்படும் தீமையான பிரதிநடத்தைகளைக் கண்டு பின்னடையாதிருப் போம்.
- இயேசுவில் விசுவாசம், நம்பிக்கை, கீழ்ப்படிவு போன்றவற்றை வளர்ப்போம்.
- இயேசுவை திவ்விய வைத்தியர் என விசுவாசிப்போம் அதனைச் சமூகத்துக்கு எடுத்துரைப்போம்.

அதற்காக இறைவனிடம் வேண்டுதல் செய்வோம்.

அன்பான ஆண்டவரே.

உம்மில் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் வாழ அருள்தாரும். எமக்குக் கீழ்ப்படிவின் வாழ்வைத் தந்தருளும். கருணையாலும் அன்பாலும் பரிவாலும் நிரம்பி பிறருக்கு நன்மைசெய்ய உம் அருள் தாரும். நீர் பரம வைத்தியரென உலகுக்கு எடுத்துக்காட்டும் கருவியாக எங்களைப் பாவித்தருளும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பின்னடையாது துணிவுடன் உமக்குப் பணிசெய்திட எங்களுக்கு வரம் தாரும்.

ஆமென்.

**செயற்பாடு**

1. கிறிஸ்தவ நம்பிக்கையில் நாள்தோறும் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள் 3 குறிப்பிடுக.

2. கிறிஸ்தவ அன்பின் மூலம் நோயாளருக்காக நாம் செய்யக்கூடிய 3 செயல்களைக் குறிப்பிடுக.

# 8 தூய ஆவியின் வல்லமை பெற்ற தொடக்க திருச்சபை

## திருத்தூதர் பணிகள் 4:5-22

மனித இனத்தின் விடுதலைக்காக இயேசுவின் பணியை அவர் மீண்டும் வரும் வரையில் முன்னெடுத்துச் செல்லுதல் கிறிஸ்தவர்களான எமது பொறுப்பாகும். அவரது பணிக்காக எம்மை ஒப்புவிக்கையில் அதற்கான வழிகாட்டல் வல்லமை, பலம் என்பவற்றை எமக்கு அளிப்பதாக இயேசு உறுதியளித்துள்ளார்.

அதற்காக இயேசு தூய ஆவியின் மூலம் எம்மிடம் செயற்பட்டு வருகின்றார். மரணத்திலிருந்து உயிர்த்த கிறிஸ்து விண்ணேற்றம் அடையும் வேளையில் திருத்தூதர்களுக்கு பின்வருமாறு கூறினார்.

**''தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடைசியெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்.'' என்றார்.**

இயேசு கூறியபடி பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியின் வல்லமை திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்டது.

தூய ஆவியால் வல்லமையைப் பெற்ற திருத்தூதர், இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று பகர்தல், வல்லமையுடன் போதித்தல், மனம் திரும்புபவர்களுக்கு இயேசுவின் பெயரில் திருமுழுக்குக் கொடுத்தல். திருப்பொழிவு செய்தல், நோயாளரைக் குணப்படுத்தல், மக்கள் இயேசுவைப் பின்பற்றுதல் போன்ற பணிகளை ஆற்றினர்.

திருத்தூதர், தூய ஆவியைப் பெற்ற பின்னர் கோவிலின் அழகு வாயிலில் பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த மனிதனைக் குணப்படுத்தியமை அவர்களின் முதல் செயலாக அமைந்தது. கடவுளை மகிமைப்படுத்தும் வண்ணமாக அச்செயல் திருத்தூதர் மூலமாகச் செய்யப்பட்டது. இந்தச் செயலானது இயேசுவை சிலுவையில் அறைந்தவர்களுக்கும் திருத்தூதர்களைக் குற்றப்படுத்த எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கும் பொறுக்க முடியாத ஒரு நிகழ்வாக அமைந்தது.

இவ்வாறாக, திருத்தூதர் தூய ஆவியின் வல்லமையால் நற்செய்தியைத் துணிவுடன் அறிவித்து உயிர்த்த இயேசுவுக்குச் சான்று பகர்ந்தனர். அதனால் அவர்கள் பெரும்

இன்னல்களைச் சந்தித்தனர். தூய ஆவியர் அவர்களில் செயற்பட்டமையால் அவர்கள் அவ்வாறான இன்னல்களை வெற்றிகரமாகச் சந்தித்தனர். அதன் மூலம் இறைவனின் பெயர் மகிமைப்படுத்தப்பட்டது.



உரு 8.1 - **அழகுவாயிலில் கால் ஊனமுற்றவர் குணமடைதல்**

**வாசிப்போம்**
**திருத்தூதர் பணிகள் 4:1-22**

மேற்படி திருவிவிலியப் பகுதியில் திருத்தூதர் பணிகள் 4: 10-20 வாசியுங்கள். எமது வாழ்வுக்குப் பயன்தரும் அனுபவங்கள் பின்வரும் அட்டவணையில் இடது பக்கத்தில் காட்டப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான திருவிவிலியப் பகுதியைக் குறிப்பிடுங்கள்.

| பெறக்கூடிய அனுபவங்கள் | திருவிவிலியப் பகுதிகள் |
|---|---|
| எமது வாழ்வின் மீட்பர் இயேசு | ....................................... |
| உலக வாழ்வில் எதுவித பெறுமதியும் இல்லாத ஒருவர் இயேசுவில் வாழ்ந்து பெறுமதியைப் பெறுகின்றார். | ....................................... |
| வாழ்வின் எல்லாக் காரணிகளிலும் உலக ரீதியிலான செயல்களுக்கு அல்ல கடவுளுக்கு முதலிடம் அளிக்க வேண்டும். | ....................................... |
| இயேசு எமது வாழ்வில் வரும்போது அவருக்குச் சான்று பகன்று அவரை மகிமைப்படுத்தாமல் இருக்க முடியாது. | ....................................... |
| ஒருவர் இறைவனின் பெயரால் புறக் கணிக்கப்பட்டால் அவர் உயர்த்தப் படுவார். | ....................................... |
| உயிர்த்த இயேசுவின் பெயரால் நோயாளர் குணமடைகின்றனர். | ....................................... |

அன்று இயேசு விண்ணேற்றம் அடையும் வேளையில் திருத்தூதர்களுக்கு அளிக்கப் பட்ட பணி **''உலகின் கடைசி எல்லை வரை எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்''** என்பது. இது கிறிஸ்தவர்களாகிய எம் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்ட கடமையாகும். இந்த மகத்தான பொறுப்பை நிறைவேற்றத் தேவையான வழிகாட்டலையும் வல்லமையையும் ஆண்டவர் எமக்கு அருளுவார். அவர் உறுதியளித்தவாறு தூய ஆவியை எமக்குக் கொடையாக அருளியுள்ளார். பணியில் ஈடுபடும்போது பல்வேறு சிக்கலான அனுபவங்கள் ஏற்படும். அன்று திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைப் போன்று இன்று கடவுள் எமக்கு வல்லமையும் பலமும் பாதுகாப்பும் இறுதியில் வெற்றியும் தருகின்றார்.

### செயற்பாடு

1. தூய ஆவியைப் பெற்ற திருத்தூதர்களினால் நிறைவேற்றப்பட்ட வல்லமையான செயல்கள் யாவை?

2. பேதுரு, யோவான் ஆகியோர் மண்டபத்தில் செயற்பட்ட முறையில் எமது கிறிஸ்தவ வாழ்வுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் நான்கைச் சுருக்கமாக விபரிக்க.

# 9 சவால்களின் மத்தியில் நற்செய்தி பரம்பல்

## திருத்தூதர் பணிகள் 5: 12-21

மரணத்திலிருந்து உயிர்த்த இயேசு விண்ணேற்றம் அடையும் வேளையில் கூறியவாறு பெந்தக்கோஸ்து தினத்தில் தூயாவி திருத்தூதர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை நாமறிவோம். தூய ஆவியால் நிரப்பப்பட்ட திருத்தூதர்கள் இயேசுவின் உயிர்ப்புக்கு சான்று கூறி, அருளுரைகள் ஆற்றி, மனம் திரும்பியவர்களுக்கு இயேசுவின் பெயரில் திருமுழுக்குக் கொடுத்து, நோயாளரைக் குணமாக்கி பலர் இயேசுவைப் பின்பற்றி வாழ வழிகாட்டினார்.

இவ்வாறு இயேசுவின் உயிர்ப்பால் புதுவாழ்வு ஏற்படும் என திருத்தூதர்களால் கூறியதை தலைமைக் குருவும், சதுசேயரும் மறுத்தனர். ஏனெனில் இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ரோம அதிகாரிகளுக்கு அவர்களும் பங்களிப்பு வழங்கி இருந்தனர். நோயாளரைக் குணப்படுத்தியதனாலும் பல வல்லமை நிறைந்த செயல் களைச் செய்தமையினாலும் அநேக மக்கள் திருத்தூதர் பக்கம் திரும்பியமை ரோம அதிகாரிகளுக்குப் பொறாமையை ஏற்படுத்தியிருக்கும்.

கோவிலின் அழகு வாயில் என்னுமிடத்தில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்த கால் ஊனமுற்ற மனிதன் குணமாக்கப்பட்ட நிகழ்வில் ''நீங்கள் எந்த வல்லமையால், அல்லது எந்தப் பெயரால் இதனைச் செய்தீர்கள்? என சங்கத்தின் நடுவே கேட்டபோது பேதுரு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செய்கிறோம்'' என மறுமொழியாகக் கூறியதை கடந்த பாடத்தில் கற்றோம்.

அன்று திருத்தூதர்களின் வல்லமை மிக்க செயல்களால் மக்கள் அவர்களைச் சூழ நின்றதால் பிரபல்யமான திருத்தூதர்களுக்குத் தண்டணை வழங்க முடியாமல் இருந்தது. எனவே இயேசுவைப் பற்றி எதுவும் பேசவோ கற்பிக்கவோ கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டு அவர்களை விடுதலை செய்தனர். ஆனால் திருத்தூதர்கள் மேலும் வல்லமைபெற்று பயமின்றித் தமது பணியை வல்லமையுடன் செய்து வந்தனர். தூய ஆவியின் பெயரால் திருத்தூதர்களால் செய்யப்பட்ட அரும் அடையாளத்தைக் கண்டு மேலும் பலர் இயேசுவைப் பின்பற்றினர்.

திருத்தூதர்களுக்குப் பலமுறை துன்பங்கள் ஏற்பட்டதையும் தூய ஆவியின் வல்ல மையால் அவற்றை எதிர்த்து வாழ்ந்த விதத்தையும் நாம் இங்கு ஆராய்வோம்.

**வாசிப்போம்.**
**திருத்தூதர் பணிகள் 5: 12-16**

மேற்படி திருவிவிலியப் பகுதியில் தூய ஆவியின் வருகையால் திருத்தூதரின் செயல் தொடர்பான கருத்துகள் அட்டவணையின் இடது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பொருத்தமான திருவிவிலியப் பகுதியை அட்டவணையில் குறிப்பிடுக.

| தெளிவுபடும் காரணிகள் | திருவிவிலியப் பகுதி |
|---|---|
| ♦ திருத்தூதரின் முன்மாதிரியான வாழ்வு, அவர்கள் செய்த அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் கண்ட மக்கள் பெருமையாகப் பேசினார். | ........................................................ |
| ♦ தூய ஆவியால் நிரப்பப்பட்ட திருத் தூதரால் பல அரும் அடையாளங்கள் செய்யப்பட்டன. | ........................................................ |
| ♦ எருசலேமைச் சுற்றியிருந்த நகரங்களி லிருந்து உடல் நலமுற்றோரையும் தீய ஆவிகளால் இன்னலுற்றோரையும் சுமந்து கொண்டு திரளாகக் கூடி வந்தார்கள். | ........................................................ |
| ♦ பேதுருவின் நிழல் நோயாளர் மீது பட்டபோது குணம் கிடைக்கும் என்ற விசுவாசம், நம்பிக்கை கொண்டவர்களி டம் காணப்பட்டது. | ........................................................ |
| ♦ தூய ஆவியின் வல்லமையால் செயற் பட்ட திருத்தூதர்களின் செயல்களில் கடவுளைப் பின்பற்றும் மக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. அவர்களுள் ஆண்களும் பெண்களும் காணப்பட்டனர். | ........................................................ |
| ♦ நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவ ரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். | ........................................................ |

நீதிமான்களுக்குத் துன்பம் அதிகம் காணப்படும் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் கடவுளுக்குச் சான்று பகர்ந்த மற்றும் தூய ஆவியின் வல்லமையால் பல அருஞ்செயல் களைச் செய்த திருத்தூதர்கள் மீண்டும் துன்பத்துக்கு உள்ளாக்கப்பட்டதை பின்வரும் திருவிவிலியப் பகுதியை ஆராயும்போது நாம் அறிந்து கொள்ளலாம்.



**வாசிப்போம்.**
**திருத்தூதர் பணிகள் 5:17-22**

''கடவுள் கீழ்ப்படிகின்றவர்களுக்கு அருளும் தூய ஆவி'' (தி.ப. 5 : 32) சிறையி லிருந்து திருத்தூதர்களை மீட்டு வாழ்வின் வழி குறித்து அறிவிக்கும் இன்னொரு சந்தர்ப்பத்தை திருத்தூதர்களுக்கு வழங்கியது. மனம்மாறி பாவமன்னிப்புப் பெற்று இறை பிள்ளையாகவும் வரம் பெறுதல் இயேசு எமக்கு வெளிப்படுத்திய வாழ்வின் வழியாகும்.''

மறுநாள் திருத்தூதர்களை அழைத்து அவர்களை அடித்து இயேசுவைப் பற்றிப் பேசக் கூடாது என கட்டளையிட்டனர். எனினும் இயேசுவின் பெயரை முன்னிட்டு அவமதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டதால் மகிழ்ச்சியோடு நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தார்கள் (தி.ப 5:40-44) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுவின் தியாகத்தால் உருவாகிய வாழ்வின் வழியை உலகுக்கு எடுத்து செல்லும் பணி திருத்தூதர்களால் பொறுப்பேற்கப்பட்டது.

திருத்தூதர்கள் கடவுளின் பெயரால் ஏற்பட்ட எச்சரிக்கைகள், நிந்தனைகள், அவமதிப் புக்கள், உடல் வேதனைகள் போன்றனவற்றைப் பாக்கியமாக கருதினார்கள்.

திருத்தூதர்கள் இறைசெயல்களுக்கு முதலிடம் வழங்கிச் செயற்பட்டனர்.

இயேசுவால் அன்று திருத்தூதர்களுக்கு அளிக்கப்பட்ட பணியின் பொறுப்பு எமக்கும் அளிக்கப்படுமென உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அன்று திருத்தூதர்களுக்குத் தூய ஆவியால் வல்லமை - துணிவு வழங்கப்பட்டது போல எமக்கும் வழங்கப்படும் என விசுவாசியுங்கள். தூய ஆவியால் இயேசுவின் வல்லமையைப் பெற்ற நாம் இறை வேண்டலுடன் இறைவனைப் போற்றி தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு சான்று பகர்வோம்.

### செயற்பாடு

1. அன்று நற்செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்லும் பணியில் திருத் தூதர்களுக்கு ஏற்பட்ட சவால்களைக் குறிப்பிடுக.
2. நற்செய்திப் பணியில் சவால்கள் இன்று எமது சமூகத்தில் கிறிஸ்தவர்களுக்கு உள்ளதா? உங்களது விடைக்கான காரணத்தைச் சுருக்கமாக குறிப்பிடுக.

# 10 தொற்கா - தூய ஆவியின் வல்லமையால் உயிர் பெறல்

## திருத்தூதர் பணிகள் 9:36-42

பிள்ளைகள் வகுப்புக்கு ஏனைய நாட்களை விட உற்சாகத்துடன் வந்தனர். கடந்த வாரம் கொடுத்த ஒப்படைக்கு ஏற்ப அவர்கள் ஆயத்தம் செய்த நாடகத்தை நடித்துக் காட்டும் வரை பிள்ளைகளுக்குப் பொறுமை இருக்கவில்லை.

**ஆசிரியர்** : வணக்கம் பிள்ளைகள்

**பிள்ளைகள்** : வணக்கம் ஆசிரியர்

**ஆசிரியர்** : நான் கடந்த வாரம் கொடுத்த ஒப்படைக்கு ஏற்ப திருத்தூதர் பணிகள் 9:36-42 வரை திருவிவிலியப் பகுதியை ஆக்கபூர்வமாக முன்வைப்பதற்கு ஆயத்தமாக வந்தீர்களா?

**பிள்ளைகள்** : ஆம், நாம் அந்தக் கதையை நாடகமாக நடித்துக் காட்ட ஆயத்த மாக வந்துள்ளோம்.

**ஆசிரியர்** : நல்லது, இப்போது நடித்துக்காட்ட உங்களுக்குச் சந்தர்ப்பம் தருகின்றேன்.

(பிள்ளைகள் முன்ஆயத்தம் செய்துள்ளது போன்று நியமிக்கப் பட்ட பகுதிகளை நடித்துக் காட்டுவதற்காக பொருத்தமான நிலை களில் இருத்தல்)

**கதை கூறுநர்** : இன்று உங்களுக்கு நான் கொண்டு வரும் நற்செய்தி யோப்பாவில் வசித்த - தொற்கா என்று அழைக்கப்பட்ட ‘‘தபீத்தா’’ எனும் பெயருடைய பெண் சீடர் அனுபவித்த புதுமையான நிகழ்வு பற்றியதாகும். அவளின் அனுபவத்தை - உங்கள் முன்னிலையில் பகிர்ந்து கொள்கிறேன்.

**பெண்** : ஐயோ! ஐயோ! விரைவாக வாருங்கள்; பாருங்கள் உடல்நிலை குன்றிய தபீத்தாவைப் பாருங்கள்; என்னால் இதைத் தாங்க முடியவில்லை; அவள் எங்களை விட்டுப் போய்விட்டாள்.

**கைம்பெண்கள்** : என்ன? அவள் இறந்துவிட்டாளா? ஐயோ! துக்கமாக இருக் கின்றது. அவள் எங்களுடன் இருக்கும்போது எத்தனை நன்மை செய்தாள். எவ்வளவு இரக்கச் செயல்களைப் புரிந்தாள்!

**கைம்பெண்கள்** : எம்மால் இதைத் தாங்க முடியவில்லை, கடவுளே, எம்மில் கருணை காட்டியருளும்.

**கைம்பெண்கள்** : நாம் இது குறித்து பேதுருவுக்கு அறிவிப்போம். அவரை விரைவாக வருமாறு அழைப்போம்.

**கதை கூறுநர்** : அவர்கள் மரணமடைந்த தபீத்தாவை மேல் மாடியில் கிடத்தினர் யோப்பாவுக்கு அருகிலுள்ள லித்தாவுக்கு பேதுரு வந்திருப்பதைச் சீடர்கள் கண்டு இருவரை அனுப்பி எங்களிடம் உடனே வாருங்கள் என அழைத்தனர்.

பேதுரு புறப்பட்டு வந்தார். அவர் மேல்மாடிக்குச் சென்றார்.

**கைம்பெண்கள்** : (பேதுருவின் அருகில் வந்து வேதனையுடன் அழுகின்றனர்)

**பெண்** : தொற்கா எங்களுடன் இருந்தபோது அங்கிகளையும் ஆடை களையும் செய்து கொடுத்தாள் அவள் எங்களுடன் அன்புடன் இருந்தார். எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்தார்.

**பெண்** : அவள் எங்களுக்கு அதிகம் உதவி செய்திருக்கின்றார்.

**கதை கூறுநர்** : இவைகள் அனைத்தையும் கேட்ட பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். தூய ஆவியால் நிரப்பப்பட்டுப் பின்வருமாறு கூறினார்.

**பேதுரு** : ‘‘தபீத்தா எழுந்திடு’’

**தபீத்தா** : (கண்களைத் திறந்து எழுந்து உட்கார்ந்தாள்)

**கதை கூறுநர்** : பேதுரு அவளுடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார்.

இறைமக்களையும் கைம் பெண்களையும் கூப்பிட்டு அவர்கள் முன் அவளை உயிருடன் நிறுத்தினார். இது யோப்பா நகர் முழுவதும் பரவியது.

**ஆசிரியர்** : நல்லது பிள்ளைகள்
நீங்கள் நாடகத்தை ஆயத்தம் செய்து அழகாக நடித்துக் காட்டி னீர்கள். நாம் இப்போது இக் கதையிலிருந்து எமது வாழ்வுக்குக் கிடைக்கும் முன்மாதிரியும் அனுபவங்களும் யாவை? என பார்ப்போம்.

**தயாளினி** : நாம் தபீத்தாவைப் போன்று நற்செயல்களைச் செய்ய வேண்டும். பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.

**ஆனந்தி** : எம்மால் முடிந்தவரை பிறர் வாழ்வை வலுப்படுத்த வேண்டும்.

**தர்ஷினி** : சமூகத்தில் ஆதரவற்றோர், கைம்பெண்கள், தேவை உள்ளவர் களுக்கு தபீத்தாவைப் போன்று உதவி செய்ய வேண்டும்.

**நிமலன்** : அன்று கைம்பெண்கள், சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட வர்களாக இருந்தனர். நாம் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட வர்கள் மீது கரிசனை செலுத்த வேண்டும்.

**தயாளினி** : பிறரின் பிரச்சினையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**செல்வன்** : நாம் தூய ஆவியின் வல்லமையை விசுவாசிக்க வேண்டும்.

**ஆசிரியர்** : எல்லோரினதும் கருத்துக்கள் சிறப்பானவைகள். செல்வனின் கருத்துக்கள் முக்கியமானது. இதில் தபீத்தாவின் வாழ்வின் நற் செயல்கள் எமக்கு முன்னுதாரணம் ஆகும். தூய ஆவியின் செயற் பாட்டினால் அவள் மரணத்திலிருந்து எழுப்பப்படல் மிக முக்கிய நிகழ்வாகும்.

## சிந்திப்போம்

இவ்வாறு தூய ஆவியின் வல்லமை மரணத்துக்கு அப்பால் செயற்படுகிறது. என்பதை காண்கின்றோம். தூய ஆவியின் செயற்பாட்டால் பலர் பலமடைகின்றனர். அன்று பலவீனமுற்ற சீடர் கூட்டம் தூய ஆவியின் வல்லமையால் மரித்தவர்களை உயிர்ப்பிக்கும் அளவில் பயமின்றிச் செயற்பட்டனர். அவர்கள் நம்பிக்கையுடன்

சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு செயற்பட்டனர். மரணத்துக்கு மேலாக செயற்பட்ட தூய ஆவியின் வழிநடத்துதல் பெற்று தபீத்தாவை மீண்டும் உயிர்ப்படையச் செய்தவை நம்பிக்கையின் செயல் ஆகும்.

அன்றுபோன்று இன்றும் தூய ஆவியானவர் செயற்படுதல் பல வல்லமை நிறைந்த செயல்கள் உலகில் அனைத்து இடங்களிலும் எப்போதும் நடைபெற்று வருகின்றது. எமது வாழ்வில் எதிர்பார்ப்புக்கள் எதுவுமற்ற வேளையில் தூய ஆவி வாசம் செய்து எமக்கு ஆறுதல் வழங்குகின்றார். அதனால் கிடைக்கும் அனுபவத்தை சான்றாகப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

**செயற்பாடு**

1. தூய ஆவியின் வழிகாட்டலுடன் சீடர் செயற்பட்ட இரு நிகழ்வு களைத் திருத்தூதர் பணி நூலில் கண்டுபிடித்து குறிப்பிடுக.

2. தூய ஆவியின் வல்லமையானது உமது வாழ்வில் ஆறுதல் வழங்கும் சந்தர்ப்பங்களை விபரிக்க.

# 11 தூய ஆவியின் வல்லமையால் ஸ்தேவான் மரணத்திற்கு முகம் கொடுத்தல்

**திருத்தூதர் பணிகள் 7 : 54-60**

பாலஸ்தினா தேசமானது உரோமையரின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது திருச்சபை ஆரம்பமாகியது. உரோம ஆட்சியினரின் கீழ் யூதர்கள் விரோதிகளாகக் கருதப்பட்டு பலவிதமான துன்பங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் ஆதித் திருச்சபையானது அனைத்துச் சவால்களுக்கும் முகம்கொடுத்து, தூய ஆவியின் வல்லமையினால் பெலனடைந்து, நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து உலகமனைத்தும் வியாபித்துச் சென்றது. அவ்வாறு ஆதித் திருச்சபையானது முகம் கொடுத்த பல துன்பங்களைக் கீழே காணலாம்.

- கிறிஸ்தவர்கள் யூத சட்டங்களை அவமதிப்பவர்களாகக் கருதப்பட்டனர்.
- அவர்களை உரோமைய அரசுக்கு உரித்தற்றவர்களாகக் கருதி துன்பத்திற்கு உட்படுத்தினர்.
- கிறிஸ்துவின் பெயரால் சான்று பகர்வதைத் தடை செய்தனர்.
- அநீதியான முறையில் தீர்ப்பு வழங்கினர்.
- இவ்வாறு சான்று பகர்பவர்களைக் கைது செய்தனர்.
- சாட்டை அடிகள் போன்ற வன்முறைகளுக்கு உட்படுத்தினர்.

இவ்வாறான துன்பங்களைச் சந்தித்தாலும் பயமற்றவர்களாகக் கிறிஸ்துவிற்காக தம்மை அர்ப்பணித்து, திருச்சபையின் வளர்ச்சிக்காகச் செயற்பட்ட ஒரு பிரிவினராகத் திருத்தூதர்கள் இருந்தனர். இவர்களிடையே திருச்சபைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு, கொலை செய்யப்பட்ட பலர் மறைசாட்சிகள் என அழைக்கப்பட்டனர்.

இவ்வாறு கிறிஸ்தவ திருச்சபைக்காக முதலாவதாக தனது உயிரை அர்ப்பணித்து மறைசாட்சியாக திகழ்ந்தவர் ஸ்தேவான் ஆவார்.

ஸ்தேவான், திருத்தூதர்களால் இயேசுவின் சீடர்களுள் (இயேசுவைப் பின்பற்றியோர்) திருத்தொண்டராக தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட ஏழுபேரில் ஒருவராவார். ஆதித் திருச்சபையின் விரைவான வளர்ச்சியின் மத்தியில் திருச்சபையின் உதவிகளுக்கும் பந்தி பகிர்ந்தளிப்பதற்கும் நலன்புரிப் பணிகளுக்கும் திருத்தொண்டர்கள் ஏழுபேர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஸ்தேவான் பிரதானமானவராகச் செயற்பட்டார்.


ஸ்தேவானிடம் காணப்பட்ட விசேட பண்புகள்

- பொதுவாக அனைவராலும் நல்லவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்.
- தூய ஆவியினால் பூரணமாக நிரம்பி செயற்பட்டவர்.
- ஞானத்தோடு செயற்பட்டவர்.
- நிலையான விசுவாசத்தோடு செயற்பட்டவர்.

ஆதித் திருச்சபைக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த ஸ்தேவான் அருளும், வல்லமையும் நிறைந்தவராய் பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் மக்கள் மத்தியில் செய்துவந்தார் என்பதைத் திருத்தூதர் பணிநூல் 6:8 மூலமாக அறியலாம். சிறந்த பேச்சாளரான ஸ்தேவானின் ஞானத்தையும் தூய ஆவிவாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் அன்று இருந்த யூதத் தலைமைக் குருக்களாலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. எனவே இவர் கடவுளையும் மோசேயையும் அவமதிக்கிறார் என்ற குற்றச்சாட்டை வைத்து அவரைக் கைது செய்தனர். அவ்வாறே மக்களும் தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து பொய் சாட்சிகளோடு அவரை தலைமைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தினார்கள். யூதத் தலைமைச் சங்கத்திற்கு முன்னால் அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியபோது அவரது முகம் வானதூதரின் முகம் போல இருக்கக் கண்டார்கள் என தி.ப. 6-15 குறிப்பிடப்பட்டுள்ளது.



**வாசிப்போம்**
**திருத்தூதர் பணி**
**7:54-60**



*ஸ்தேவான் மூலமாக எமது வாழ்க்கைக்கு...*

**♦ பயமின்றி சான்று பகரவும் சரியானதை செய்வதிலும் ஈடுபடுவோம்.**

தூய ஆவியினால் பூரணமடைந்த ஸ்தேவான் பயமின்றி அன்றைய யூதர்கள் பயணித்த வழியைச் சீர்செய்வதற்கு முயற்சித்தார். இறை மகனான இயேசுவிற்காகச் சான்று பகர்ந்தார். அவ்வாறே நாமும் கிறிஸ்துவுக்காகச் சான்று பகர்வதிலும் பிறரை நல்வழி நடத்துவதிலும் ஈடுபடுவோம்.

**♦ தூயஆவியின் வழிகாட்டுதலோடு பயணிப்போம்.**

ஸ்தேவான் தான் முகம் கொடுத்த துன்பங்களோடு தூய ஆவியின் வல்லமையை நிறைவாய் பெற்று வானத்தை நோக்கினார். அங்கே அவர் விண்ணரசின் காட்சி யையும் கடவுளின் மாட்சியையும் காணும் பாக்கியம் பெற்றார். அவ்வாறே எமது துன்பத்தின் மத்தியிலும் நாம் தூயஆவியின் வழிகாட்டலின் மூலம் பூரண நம்பிக்கை கொண்டு அவ்வழிகாட்டலின்படி செயற்பட முயற்சிப்போம்.

**♦ விண்ணரசின் குரலுக்குச் செவிசாய்ப்போம்.**

ஸ்தேவான் வாழ்வின் இறுதிநேர அனுபவமானது ''விண்ணரசு மறுமகனுக்காகத் திறக்கப்பட்டுள்ளது என்பது காட்சியைக் காணுதல் ஆகும்.'' ஆனால் அன்று ஸ்தேவான் கண்ட தரிசனத்தின் அனுபவத்தை கூறியபோது தலைமைச்சங்கத்தில் கூடியிருந்த வர்கள் அந்த குரலுக்கு தங்கள் செவிகளை அடைத்துக்கொண்டு அதை நிராகரித் தார்கள். உலகின் பலவிதமான லௌகீகக் காரியங்களுக்கு அடிமையாகும் நாம் கடவுளின் குரலுக்கு செவிசாய்ப்பதில்லை. ஆனால் எமது வாழ்வின் அனைத்து சந்தர்ப்பத்திலும் முதலாவதாகக் கடவுளுக்கு உரிய இடத்தைக் கொடுத்து கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்படுவது அவசியமாகும்.

இறை விருப்பத்தை அறிந்துகொண்டு அதனை வாழ்விற்கு ஏற்றதாக்கிக் கொள்வோம். ஸ்தேவான் தூய ஆவியின் வல்லமையால் நிரம்பி நிகழ்த்திய அருளுரையை யூத தலைமைச் சங்கத்தினரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் அவர்களுக்குச் சரியானது எது என்பதை புரிந்து கொள்ளமுடியவில்லை. அன்று ஸ்தேவான் மூலமாக நிகழ்த்தப்பட்ட அருளுரையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களைக் கவனத்திற் கொள்வதற்கு அவர்களுக்கு மனதில்லை. ஏனெனில் அவர்கள் தீமைக்கு அடிபணிந்து செயல்பட்டனர். அவ்வாறே நாமும் தீமைக்கு அடி பணிந்து இருக்கும்போது தூய ஆவியின் மூலமாக வரும் செய்தியை கவனியாது அதை நிராகரித்துவிடுவோம். எனவே, பிறர் மூலமாகக் கொண்டு வரப்படும் இறைசெய்தியை செவி சாய்ப்பதற்கும் அதனை நம் வாழ்விற்கு ஏற்றதாக்கிக் கொள்வதற்கும் ஆயத்தமாக இருப்போம்.

***நிலை வாழ்வை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.***

கிறிஸ்தவ வாழ்வின் வெற்றியானது லௌகீக வாழ்க்கையில் மனிதனின் எண்ணப் படி நிகழ்வதல்ல. அதனைவிட மேலான செயற்பாடாகும். அது மரணத்தைக் கடந்து செல்லும் விண்ணரசின் வெற்றியாகும். எனவே ஸ்தேவான் மரண துன்பத்திற்கு மேலாக இறை வேண்டுதலோடு விண்ணரசை நோக்கிப் பார்த்து நின்றது, விண்ணரசின் வாழ்வை வெற்றி கொள்ளும் எதிர்பார்ப்பாகும். நம் வாழ்வானது நிலையற்றது. எனவே விண்ணரசின் வாழ்வை அடைவதற்கு முயற்சிப்போம்.

**♦ துன்ப வேளையில் மன்றாடுவோம்.**

ஸ்தேவான் மரண துன்பத்திலும் கடவுளிடம் மன்றாடினார். நாமும் அவ்வாறு எமது வாழ்வின் துன்பங்கள், பிரச்சினைகள் அனைத்தையும் கடவுளிடம் ஒப்படைப்பதற்கு செயற்படுவோம். எம்மிடையே வரும் துன்பங்களின் முன்னால் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் செயற்படுவோம்.

**♦ பகைவருக்கு மன்னிப்புப் பெற்றுக்கொடுப்போம்.**

இயேசுவை உண்மையாகப் பின்பற்றிய ஸ்தேவான், சிலுவையில் இயேசு தனது பகைவர்களுக்கு மன்னிப்பளித்தது போன்று தம்மைத் துன்புறுத்தியோரையும் மன்னித்தார். எமக்கு எதிராகப் பலவிதத்திலும் துன்பம் செய்வோரை நாம் மனப்பூர்வமாக மன்னிப்போம். ஸ்தேவானின் இறுதி வெளிப்பாடான தம்மைத் துன்புறுத்திய பகைவர்களுக்காக வேண்டுதல் செய்தது போன்று நாமும் எமது பகைவர்களுக்காக வேண்டுதல் செய்வது அவசியமாகும்.

ஸ்தேவான் தூய ஆவியினால் பெலனடைந்து செயற்பட்டமையால் அனைத்துச் சவால்களின் மத்தியிலும் தைரியத்தோடு செயற்பட்டார். கிறிஸ்தவர்களாகிய நாமும் எம்மை எதிர்நோக்கும் அனைத்துத் தடைகளையும் சவால்களையும் தூய ஆவியின் வழிகாட்டலோடு வெற்றிகொள்ள செயற்படுவோம்.

### செயற்பாடு

1. ஸ்தேவானின் நடத்தை மூலமாக உமது வாழ்விற்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் மூன்றை விளக்குக.

2. வேண்டுதலோடும் தூய ஆவியின் வழிகாட்டலோடும் வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டுமென்பதை நீர் நம்புகின்றீரா? உமது அனுபவத்தைச் சாட்சியாக பகிர்ந்து கொள்ளவும்.

# 12 தூய ஆவியின் வல்லமையால் சவுலின் துணிவான பணி

## திருத்தூதர் பணிகள் 9:19-25

ஆதிக் கிறிஸ்தவத் திருச்சபை பலவிதமான சவால்களுக்கு முகம் கொடுத்த முறைகளும் அதன் பிரதிபலனாக மறைசாட்சியான ஸ்தேவானைக் கல்லெறிந்து மரணத்திற்கு உட்படுத்தியதையும் நாம் முன்னைய பாடங்களில் அறிந்தோம்.

இறை அழைப்பானது மாட்சிமையானது. ஒருவரிடம் இறை அழைப்பு இருந்தால் அவரிடம் தூய ஆவியின் வல்லமையும் பெலனும் பூரணமாக இருக்கும். இவ்வாறு திருச்சபையும் அனுதினமும் தூய ஆவியாலும் ஜெபத்தாலும் பெலனடைந்து வளர்ச்சி யடைந்தது. இவ்வேளையில் கிறிஸ்தவ சபைக்கு யூத மதத்தினால் ஏற்பட்ட தடைகள், சவால்கள் அனுதினமும் அதிகரித்தன.

- அவர்கள் கிறிஸ்தவ சீடர்களைத் துன்பத்திற்குட்படுத்தினர்.
- சீடர்களைத் தலைமைச் சங்கத்திற்குக் கொண்டு சென்றனர்.
- அவர்களைக் கைதுசெய்து பொதுச்சிறையில் வைத்தனர்.
- கிறிஸ்தவ சீடர்களை கல்லெறிந்து கொலை செய்தனர்.
- திருச்சபையைச் சிதைக்க முயற்சித்தனர்.

இவ்வாறு கிறிஸ்தவ சபையை இல்லாதொழிக்க மிகவும் கடுமையான அர்ப்பணிப் போடு செயற்பட்ட விசேட நபரைப் பற்றி திருத்தூதர் பணிநூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. அவர் தான் சவுல் என்னும் யூத பரிசேயன் ஆவான்.

ஸ்தேவானுக்குக் கல்லெறிந்த வாலிபர்களின் மேலுடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் இவர் தான். (தி.ப.7:58) மேலும் கிறிஸ்தவ வீடுகளுக்குச் சென்று கிறிஸ்தவ ஆண்களையும் பெண்களையும் கைது செய்யும் தலைமைத்துவத்தையும் இவர் பெற்றிருந்தார். (தி.ப. 8-3)

இவர் ஒருநாள் கிறிஸ்தவர்களைக் கைதுசெய்ய தமஸ்கு செல்லும் வழியில்,

- ♦ இயேசு இவரைச் சந்தித்தார்.
- ♦ இயேசுவின் குரலை இவர் கேட்டார்.
- ♦ இயேசுவின் பிரசன்னத்தை இவர் அனுபவித்தார்.
- ♦ தான் செய்ய வேண்டியதைப் பற்றி இறை ஆலோசனையைப் பெற்றார்.
- ♦ அவருக்கு புதுவாழ்விற்கான வழி கிடைத்தது.
- ♦ அவர் தூய ஆவியின் வல்லமையினால் பெலனடைந்தார்.
- ♦ அவர் தூய ஆவியின் வல்லமை செயற்படுவதற்கான வழி அமைத்தார்.

இதுவரை கிறிஸ்தவ சபைக்குத் துன்பம் விளைவிக்கும் எதிரியாகப் பெயர் பெற்ற சவுல் தமஸ்குவில் புதுவாழ்வின் அனுபவத்தைப் பெற்றபின் கிறிஸ்தவ சபையின் சீடர்களிடம் செல்வதற்கு அவரால் முடிந்தது. அவரை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? தனது முன்னைய வாழ்வு அவர்களோடு இணைவதற்குத் தடையாக அமையுமா? என எண்ணிய போதும், வரும் சவால்கள் அனைத்தையும் இறை திட்டத்திற்கு கீழ்ப்படிந்து தூய ஆவியின் வல்லமையினால் சவுலால் வெற்றி கொள்ளமுடிந்தது. இறை விருப்பத்திற்கு இணங்கி செயற்படும்போது இறைவன் பிறரின் சிந்தனைகளையும் மாற்றி இறைபணிக்கு ஏற்ற வழி அமைப்பார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

மேலே குறிப்பிட்ட வண்ணம் சவுல் தூய ஆவியின் வல்லமையினால் பெலனடைந்து துணிவோடு தமஸ்குவில் உள்ள தொழுகைக்கூடத்தில் போதனை செய்வதில் ஈடுபட்டார் என்பது முக்கிய சான்றாகும். சவுல் பயமின்றித் தொழுகைக் கூடத்திற்குச் சென்று **இயேசுவே இறைமகன் என்று பறைசாற்றினார்** பின்னர் மீண்டும் மீண்டும் துணிவோடு **அதே இயேசுதான் கிறிஸ்து என உறுதிப்படுத்தி போதனை செய்தார்.**

இவ்வாறு தூய ஆவியின் வல்லமையையும் துணிவையும் பெறும்போது.

- ♦ மனப்பூர்வமாக இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கும்
- ♦ இறைவனுக்குள்ளே உறுதியாய் நிலைத்திருப்பதற்கும்
- ♦ விசுவாசத்தோடு இறைவனுக்குச் சான்று பகர்வதற்கும்
- ♦ இறை திட்டத்தை ஏற்றுக்கொண்டு பிறரையும் நம்பிக்கையில் பெலனடையச் செய்வதற்கும் எமக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

சவுல் தன் மெய்யான அனுபவத்தைப் பயமின்றி வெளிப்படுத்தி தூய ஆவியின் வல்லமையோடும் பெலத்தோடும் செயற்பட்ட போதும் வாழ்வின் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதாவது, காலங்கள் கடந்த பின்னரும் யூதர்கள் சவுலைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தனர். ஆனால் தூய ஆவியின் பாதுகாப்பினாலும் பெலத்தினாலும் அவர்களால் சவுலுக்கு எதுவும் செய்யமுடியாமல் போனது. இங்கு சவுலின் சீடர்கள் அவரின் வாழ்வைப் பாதுகாக்க செயற்பட்டனர் .

நாமும் இறைவழிகாட்டலைப் பெற்று இறை அழைப்பிற்கு கீழ்ப்படியும்போது அங்கே எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அவ்வாறான சவால்களை வெற்றி கொள்வதற்கு தூய ஆவியின் வல்லமையும் பெலனும் எமக்குக் கிடைக்கும்.

அவ்வாறே சவால்களில் உதவியளிப்பதற்காகக் கடவுள் அநேகரை ஈடுபடுத்துவார்.

### செயற்பாடு


1. சவுலின் இறைபணிக்கான அழைப்பினூடாக உமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்?

# 13 இறைவனுடன் நல்வாழ்வு

**நீதிமொழிகள் : 20: 1, 21:5-7** **சபை உரையாளர் : 11:9-12**
**கலாத்தியர் : 5: 19-21** **1 கொரிந்தியர் : 10: 31-32**

இறைவனின் பிள்ளைகளாகிய நாம் சமூகத்தில் நன்மை - தீமை எதுவென நன்கு அறிந்து, நன்மையின் பக்கமாக சார்ந்து வாழவேண்டும் என்பது இறை விருப்ப மாகும். சமூகத்தில் அநேக புதுமையான காரியங்கள் நடைமுறையில் இருப்பினும், நாம் சரியானவற்றைத் தெரிவுசெய்வதற்கு இறை வழிகாட்டலைத் தேடுவது இறைவனின் பிள்ளைகளாகிய எமது கடமையும் பொறுப்புமாகும்.

உலகத்தின் முன்னால் சரியானது நன்மையானது என எண்ணும்போது கடவுளின் முன்னால் அவை சரியானதா? நன்மையானதா? என்பதை அறிந்து கொள்வதற்கு முதலாவதாக இறை வார்த்தையை தியானித்து அதை அறிந்து கொள்ளவேண்டும். இறைவார்த்தையானது ஊனியல்பின் செயல்கள் பற்றி குறிப்பிடுகின்றது. ஊனியல்பின் செயல்கள் பற்றி அறிந்து கொள்வது வாலிபவயதில் அடி எடுத்து வைக்க இருக்கும் உங்களுக்கு மிகவும் அவசியமாகும்.




மேலே குறிப்பிட்ட ஊனியல்பின் செயல்களிடையே குடிவெறியானது இன்று சமூகத்தில் தீர்க்கமுடியாத பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும். இது மதிப்பிற் குரிய வாழ்வை அழிப்பதோடு குடும்பத்தில் பிரச்சனைகளையும் ஏற்படுத்தி முழு

சமுதாயத்தையும் வீழ்ச்சியடையச் செய்யக் காரணமாகின்றது.

குடிவெறியைப் பற்றி இறைவார்த்தை இவ்வாறு குறிப்பிடுகின்றது.

**திராட்சை இரசம் ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும்.**
**போதை தரும் குடி அமளியைத் தோற்றுவிக்கும்.**
**அவற்றில் நாட்டங்கொள்பவர் மடையரே** (நீதிமொழிகள் : 20:1)

மது அருந்தும் ஒருவரின் சுபாவத்தைப்பற்றி இறைவார்த்தை குறிப்பிடும் இக் கருத்துக்கள் உண்மையானவையென, மது அருந்தும் ஒருவரை ஆராய்ந்து பார்க்கும்போது எம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

- மது அருந்தும் ஒருவர் தான் செய்வதை அறியாமல் குழப்பமாகச் செயற்படுவார்.
- பணத்தை வீண் விரயம் செய்வார்.
- தனது பிரச்சனைகள், துன்பங்களுக்கு ஆறுதல் கிடைப்பதாக எண்ணி இதன் மூலம் மீண்டும் மீண்டும் பிரச்சினைகளை வளர்த்துக் கொள்வார்.
- மனிதனின் எண்ணத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தான் செய்யக்கூடாததைச் செய்யவும் பேசக்கூடாததைப் பேசவும் முற்படுவார்.
- தனது குடும்பம், அயலவர், சமூகத்தினர் அனைவரினதும் சந்தோசத்தையும் நிம்மதியையும் இல்லாது செய்வார்.
- பிறரின் மத்தியில் நிர்க்கதி நிலைக்கும் அவமதிப்புக்கும் உட்படுவார்.
- தனது குடும்பத்தினரை வெட்கத்திற்குட்படுத்துவார்.
- பலவிதமான நோய்களால் அல்லல்படுவார்.
- மது அருந்துவதின் பிரதிபலனாக ஏனையோரையும் துன்பத்திற்குட்படுத்துவர்.
- தம்மிடம் நிலவும் இறைசாயல் அழிந்துபோவதற்கு வழிவகுப்பார்.

குடிவெறியானது இவ்வாறு தமது வாழ்வைப் போன்று பிறரின் வாழ்வையும் அழித்து அழிவை ஏற்படுத்தும் என்பதை உம்மால் இப்பொழுது உணர்ந்து கொள்ளமுடியும்.

சிலவேளைகளில் நாம் வாழும் குடும்பச் சூழலில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோர் இருக்கலாம். எனவே அவர்களை இப்பழக்கத்தில் இருந்து மீட்டு எடுப்பதற்காக குடும்ப ஜெபத்தில் அல்லது சரியான ஒரு சந்தர்ப்பத்தில் குடிவெறியால் ஏற்படும் பலன் அழிவு என்பதைப் பற்றி இறைவார்த்தையில் குறிப்பிடப்படுவதை எம்மால் வெளிப்படுத்த முடியும்.

**குடிவெறியால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றி வகுப்பில் ஒருவரோடொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு சமூகத்தை இதிலிருந்து மீட்டெடுப்பதற்கான முறைகளை ஆராய்ந்து பார்ப்போம்.**

ஒரு நபர் உழைக்கும் வருமானத்தை தனது குடும்பத் தேவைகளைவிட்டு குடிவெறி, களியாட்டம் போன்ற பல தீமையான செயல்களுக்கு வீண்விரயம் செய்வார். இன்னும் ஒருவர் அதற்கு அடிமையாகி மீள முடியாதநிலை ஏற்படும்போது பணத்தை சம்பாதிப்பதற்கு பலவிதமான தீமையான முறைகளைப் பின்பற்றுவார். அதனைவிட களவு, மோசடி, சூது போன்றவற்றிலும் ஈடுபடுவார்.

இவ்வாறு தீமையான வழியில் செல்வோர் பாதிப்படைவர் என இறைவார்த்தை எமக்கு விளக்குகின்றது. தீமையாகத் தேடும் பணம் நிலையற்றது. எனவே மோச டிகளில் ஈடுபடுவது அழிவுற்கு காரணமாகும். இவ்வாறான தீய பழக்கங்களைப் பற்றி இறைவார்த்தை குறிப்பிடுவதை அவதானிப்போம்.

**திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவரிடம் செல்வம் சேரும் என்பது திண்ணம் பதற்றத்துடன் வேலைசெய்பவர் பற்றாக் குறையில் இருப்பார். ஒருவர் பொய் பேசிச் சேர்க்கும் பொருள் காற்றாய் பறந்துவிடும் அவரது உயிரையும் அது வாங்கிவிடும். பொல்லார் நேர்மையானதைச் செய்ய மறப்பதால் அவர்களது கொடுமை அவர்களையே வாரிக்கொண்டு போகும்.**

நீதிமொழிகள்: 21: 5-7.

மேலே குறிப்பிட்ட இறைவார்த்தையின் படி நாம்;

- எமது வாழ்வை முன்னேற்றுவதற்கு திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைத்தல் வேண்டும்.
- தீமையான வழிகளில் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாது.
- சூது, மோசடி போன்ற தீய செயல்களை முற்றாக அகற்றவேண்டும்.
- நேர்மையை நிலைநாட்டி வாழ்வது அவசியமாகும்.

இவ்வாறு ஒழுக்காற்றல் நிறைந்த நல்வாழ்வு வாழ்வதன் மூலம் எமக்கு இறைவனின் கருணையும் ஆறுதலும் முன்னேற்றமும் கிடைக்குமென்பது உண்மையாகும்.

மேலும் நாம் தீமையான செயல்களில் ஈடுபடாமல் வாலிப வயதில் இறைவனின் வழிகாட்டலைத் தேடி திடமாக செயற்படும் பிள்ளைகளாகக் காணப்பட வேண்டு மென்பதை சபை உரையாளர் 11-9 இலும் 12:1 இலும் இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது.

**இளையோரே இளமைப்பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே இளமையின் நாட்களில் உள்ளக்களிப்புடன் இருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறை வேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்கிற ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்.**

**சபை உரையாளர் 11-9**

**ஆகையால் உன்னைப் படைத்தவரை உன் இளமைப்பருவத்தில் மறவாதே வாழ்க்கை எனக்கு இன்னும் தரவில்லையே என்று நீக்க சொல்லக்கூடிய துயர நாட்களும் ஆண்டுகளும் வரும் முன் அவரை உள்ளத்திலே நினை.**

**சபை உரையாளர் : 12-1**

இவ்வாறு இறைவார்த்தையில் குறிப்பிடப்பட்ட வார்த்தைகளை ஏற்று வாழ்வது கிறிஸ்தவ பிள்ளைகளான எமது கடமையாகும் அதன்படி 1கொரிந்தியர் 10-31 இல் குறிப்பிடப்படுவது போல எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்ய வேண்டும்.

வாலிப வயதில் வாழும் நாம் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப செயற்பட வேண்டுமேயன்றி எமது விருப்பத்திற்கு அல்ல. நாம் எமது விருப்பப்படி செயற்படும்போது நாம் திருப்தி அடைந்து உலகத்தைச் சந்தோசப்படுத்த முடியும். ஆனால் ஒருநாள் கடவுளின் நியாயத் தீர்ப்புக்கு உட்படுவோம் என்பதை மனதிற் கொள்ளவேண்டும்.

வாலிப வயதில் நாம் எமது முழுப்பெலத்தோடும் இறையரசின் பணிக்காக எமது உழைப்பு, நேரம், செல்வம், அறிவு அனைத்தையும் செலவிடுவோம். இவ்வாறு எப்போதும் எதையும் சரியாகச் செயற்பட முன்வருவோம்.

எமது செயல்கள்
எமது வார்த்தைகள்
எமது எண்ணங்கள்

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் நன்மையாக மாற்றி இறைமகிமைக்காக மட்டுமே அர்ப்பணிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

### *நினைவிற் கொள்வோம்...*

- ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு சமூக அங்கத்தவர்களான எமது பொறுப்பை நிறைவேற்றுவது இறைவனின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்குச் சமனானது என்பதை நினைவில் வைத்துக் கொள்வோம்.

- இவ்வாறு ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கும் எமது வாழ்வின் முன்மாதிரியில் பங்கேற்று நன்மையான வாழ்வு வாழ்வதற்கும் முயற்சிப்போம்.

- கிறிஸ்தவ பிள்ளைகளாக சமுதாயத்தில் நல்லவகைகளையும் சரியானவற்றை யுமே செயற்படுத்துவோம்.

**செயற்பாடு**

1. குடிவெறியினால் ஏற்படும் தீய விளைவுகள் இரண்டைக் குறிப் பிடுக.

2. ஊனியல்பின் செயல்கள் நான்கு எழுதி அதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய முறைகளை எழுதுக.

# 14 இறைவனுடன் நல்நோக்கு

**நீதிமொழிகள் : 2:6-10, 3:21 எபேசியர் : 5:15-17**
**கொலேசையர் : 3:5-7, 1 தெசலோனிக்கர் : 4:2-8**

''நவீன தொழினுட்பம்'' என்ற வாக்கியத்தை அன்றைய பாடத்தின் ஆரம்பத்திலே ஆசிரியர் கரும்பலகையில் குறிப்பிட்டார். பாடத்திற்குப் பொருத்தமில்லாத தலைப்பைக் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் அறிமுகம் செய்தார். மாணவர்களுக்கு வியப்பையும் மகிழ்வையும் அளித்தது. இதை ஆசிரியரும் உணர்ந்து கொண்டு மாணவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்.

**ஆசிரியர்** : பிள்ளைகளே, இவ்வுலகத்தின் அனைத்து செயல்களும் அனைத்து படைப்புக்களும் இறைவிருப்பத்துக்கும் இறை திட்டத்திற்கும் ஏற்ற தாகவே நிகழ்கின்றது என்பது கிறிஸ்தவர்களாகிய எமது நம்பிக்கை யாகும். ''நவீன தொழினுட்படம்'' என்பதின் கீழ் உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டு நாம் பயன்படுத்தும் அனைத்தும் இறை விருப்பத்திற்கு ஏற்றதாக எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டுமென்பதைப் பற்றி நாம் இன்று ஆராய்ந்து பார்ப்போம்.

இவ்வாறு அன்றைய நாளுக்கான பாடத்தை அறிமுகம் செய்த ஆசிரியர் வகுப்பு மாணவர்களை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் தலைப்புக்களை வழங்கினார். ஒவ்வொரு குழுவும் அவர்களது தலைப்பிற்கு ஏற்ப கலந்துரையாடி குறிப்பிட்ட நேரத்தில் அறிக்கையை ஒழுங்குசெய்து அக்குழுவின் தலைவர்கள் மூலமாக வகுப்பு மாணவர்களின் முன் சமர்பிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கினார்.

ஒவ்வொரு குழுவும் மிகவும் ஆர்வத்தோடு சேகரித்த அறிக்கையை நாம் இப்போது ஆராய்ந்துப் பார்ப்போம்.

**1ம் குழுவின் தலைவன்** : எங்களுக்குக் கிடைத்த தலைப்பு நீதிமொழிகள் 2:6-10 வரையுள்ள இறைவார்த்தையின்படி ''நவீன தொழினுட்பத்தின் வளர்ச்சியான கையடக்கத் தொலைபேசியை ஒழுங்கான முறையில் பயன்படுத்தக் கூடிய முறைகள்'' பற்றி கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட அறிக்கையை உங்கள் முன் வாசிக்கின்றேன்.

## நவீன தொழினுட்பமும் இறைதிட்டமும்

நவீன தொழினுட்பத்தின் வளர்ச்சியைப் பற்றி கிறிஸ்தவ கண்ணோட்டத்தின் படி இறை வார்த்தையில் குறிப்பிட்ட கருத்துக்களில் நாம் எமது கவனத்தைச் செலுத்துவோம்.

**""ஞானம் இறைவனின் கொடை''**

**ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே,**
**அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே,**
**நேர்மையாளருக்கு அவர் துணை செய்யக் காத்திருக்கின்றார்.**
**மாசற்றோருக்குக் கேடயமாய் இருக்கின்றார்.**
**நேர்மையாளரின் பாதைகளை அவர் பாதுகாக்கின்றார்.**
**தம் அடியாரின் வழிகளைக் காவல் செய்கின்றார்.**
**எனவே நீதியையும் நியாயத்தையும் நேர்மையையும் நலமார்ந்த**
**நெறிகள் அனைத்தையும் தெரிந்துகொள்வாய்.**
**ஞானம் உன் உள்ளத்தில் குடிபுகும்.**
**அறிவு உன் இதயத்திற்கு இன்பம் தரும்.**

நீதிமொழிகள் 2:6-10

தொழினுட்பத்தைப் புதிய பாதையாகக் கொண்டு செல்வதற்கு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட அறிவும் ஞானமும் கடவுளின் கொடையாகும். நேர்மையாளருக்கு ஞானத்தை அருளுகின்றார் எனவும் அவர் கூறியுள்ளார். அக் கொடையைப் பெற்ற நாம் உண்மையோடு நல்வழியை அறிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கின்றது. அனுதின வாழ்வைக் கொண்டு செல்வதற்கு இலகுவாகப் பயன்படுத்தக் கூடிய பலவிதமான தொழினுட்பங்களில் ஒன்றான கையடக்கத் தொலைபேசியைப் பற்றி இக் கடிதத்தின் மூலமாக விசேடமான கருத்துக்களைப் பகிர்ந்துக்கொள்வதற்கு விரும்புகின்றேன்.

தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சியில் புதிய வழியைத் திறந்த கையடக்கத் தொலைபேசியின் பயன்பாடு இன்று மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. ஒரு பிரதேச த்தில் இருந்து இன்னும் ஓர் பிரதேசத்திற்கும் ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிலுள்ள ஒருவருடனும் தொடர்பு கொள்வதற்கு உதவுகிறது. இதன் மூலமாக மிகவும் சுமுகமாக ஒருவருக்கொருவர் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நட்பைக் கட்டியெழுப்புவதற்கும் கருத்துக்களைப் பகிர்ந்துக்கொள்வதற்கும் பிள்ளை களின் பாதுகாப்பைத் தேடிப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஆனால் மனிதனின் இலகுத்தன்மைக்கும் நன்மைக்கும் பயன்படுத்தக் கூடிய கைய டக்கத் தொலைபேசி இன்றைய சமூகத்தில் நன்மையான செயல்களுக்கு ஏற்றதாய் இருப்பது போன்று தீமையான காரணங்களுக்கும் பயன்படுத்தப்படுவது கவலைக் குரிய விடயமாகும். இதன்மூலம் பலரின் குடும்ப வாழ்வு உடைந்து போகின்றது.

தீமையான செயற்பாடுகளினால் பலரின் உள்ளம் உடைந்து போகின்றது. நம்பிக்கையற்ற தன்மை அதிகரித்து, அநாவசியமான கருத்துக்கள் நிறைந்து சமுதாயத்தில் சீர்குலைவு ஏற்படுகின்றது. இதன் மூலம் மனித வாழ்வு பேரளவில் அழிவதற்கு இடமுண்டு.

கடவுளிடமிருந்து பெற்ற ஞானத்தின் கொடையை ஒவ்வொருவரின் வாழ்வையும் மிகவும் அர்த்தமுள்ளதாக்குவதற்குப் பயன்படுத்த வேண்டும். பலவித அநீதியான செயல்களைத் தொலைபேசியின் மூலமாக நடைமுறைப்படுத்தி வாழ்வை அழிப்பதை கடவுள் விரும்புவதில்லை. கடவுள், மனிதன் தன் அறிவை பயன்படுத்தி சமூகத்தில் நன்மையை செய்வதையே காண விரும்புகின்றார். அவ்வாறான புதிய தொழினுட்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவது கிறிஸ்தவர்களான எமது பொறுப்பாக எண்ணி செயற்பட வேண்டும். கடவுளின் முன்னிலையில் நீதியான, அறிவான, உண்மையான, அனைத்து நல்வழிகளையும் அறிந்து கொண்டு செயற்படுவது அவசியமாகும். அறிவும் ஞானமும் இன்பத்தைக் கொண்டு வருவதால் அதற்கு ஏற்ற வண்ணம் செயற்பட நாம் சிந்திப்போம்.

**ஆசிரியர்** : இக்குழு முன்வைத்தது மிகவும் நன்றாக இருந்தது. தொழினுட்ப வளர்ச்சியானது மனித வாழ்வை மேம்படுத்துவதற்கேயன்றி வாழ்வை அழிப்பதற்கல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறே கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தும்போது நாம் கதைக்கும் இடம், நேரம், தேவை என்பதைப் பற்றி மிகவும் கவனத்தோடு செயற்பட வேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சுதாகர்** : ஆம் சிலரின் தொலைபேசி ஆலயத்தில் இறைவழிபாட்டு நேரத்தில் நீண்டு ஒலிக்கின்றது. இது அனைவருக்கும் இடையூறாக இருக்கும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

**திலினி** : சிலர் விளையாட்டாக இரவு வேளையில் நித்திரையில் இருக்கும் மனிதரை எழுப்பி அநாவசியமான தொலைபேசி அழைப்பை விடுப்பார். அவ்வாறே தொலைபேசியில் கூடாத காட்சிகளை சேகரித்து வைப்பார்.

**அஜித்** : ஏன் இன்னும் சிலர் விளையாட்டாக ஒவ்வொருவரைப் பற்றியும் தவறான கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர்.

**திலினி** : சிலர் தொலைபேசியில் கவனத்தைச் செலுத்தி தன்னை மறந்து பாதையில் பயணம் செய்யும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன.

**ஆசிரியர்** : ஆம் நீங்கள் இதுவரை கூறிய கருத்துக்கள் யாவும் கையடக்கத் தொலைபேசியின் மூலம் ஏற்படும் தீமைகள் பற்றியதாகும். ஆனால் மாணவர்கள் குழுக்களாகக் கலந்துரையாடிய கருத்துப்படி புதிய தொழினுட்பத்தின் வளர்ச்சியானது மனிதனின் நன்மைக்கே ஆகும். இறைவன் ஞானத்தைத் கொடுப்பது மனிதனின் நன்மைக்கே ஆகும். இப்போது இரண்டாம் குழு அறிக்கையை முன்வையுங்கள்.

**2ம் குழுவின் தலைவன்** : எங்களுக்குக் கிடைத்தது நீதிமொழிகள் 3 : 21ம் எபேசியர் 5 :15 -17 இன் படி ''இணையத்தளத்தின் இலகு தன்மையும் முகநூல் பயன்படுத்தலும் பற்றி கிறிஸ்தவ கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது ?'' என்ற தலைப்பின் கீழ் அறிக்கை சமர்பித்தல் ஆகும். நான் இப்போது எங்கள் குழுவின் அறிக்கையை முன்வைக்கின்றேன்.

**இறைவிருப்பத்திற்கு ஏற்ப இணையத்தளத்தின் இலகு தன்மையும் முகநூலின் பயன்பாடும்.**

இன்றைய உலகில் தொழினுட்ப வளர்ச்சியின் மூலம் அறிமுகமான விசேடமான தாகவும் மிக முக்கியமானதாகவும் கருதப்படுவது இணையத்தளம். இணையத்தள மானது தகவல் பரிமாற்றத்தை மிகவும் இலகுவாக்கியுள்ளதோடு அத்தியாவசியமானது என்ற நிலையையும் அடைந்துவிட்டது.

மருத்துவம், போக்குவரத்து, அச்சுப்பதிப்பு போன்ற பலவகையான துறைகளில் வளர்ச்சிக்கு மட்டுமல்லாது தொடர்பாடலிலும் பல புதிய மாற்றங்களை இணையத் தளம் ஏற்படுத்தியுள்ளது.

இணையத்தின் மூலமாக தேவையான துறைகளைப் பற்றிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மின்னஞ்சல் மூலமாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முடியும். பழமையானதும் இன்றைய காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான விபரங் களை பற்றி அறிந்துகொள்வதற்கு மிகவும் பயன்படும் ஒன்றாக இணையத்தளம் செயற்படுகின்றது. ஓர் இடத்தில் இருந்து உலகின் எந்த ஒரு நாட்டிற்கோ தொடர்பை ஏற்படுத்துவதற்கு மின்னஞ்சல் உதவுகின்றது. இதன் மூலமாக மனிதனுக்கு பலவித வசதி வாய்ப்புக்கள் கிடைக்கின்றது. அத்துடன் நேரமும் மிச்சப்படுத்தப்படுகிறது. ஞானத்தின் ஊற்றால் அறிவு புதுப்பித்தல் போன்ற பயன்களை மனிதன் பெறுகின்றான்.

இணையத்தில் முகநூல் மூலமாக அநேக காரியங்களை இலகுவாகக் கையாளலாம். தூரமாக இருப்பவர்களிடமும் வெளிநாட்டில் இருப்பவர்களிடமும் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் கருத்துக்களை விமர்சிப்பதற்குமான பல நன்மையான தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முகநூல் பயன்படுத்தப்படுகின்றது.

பிறரின் அனுபவங்களை அறிந்து கொள்வதற்கும் பகிர்ந்துக் கொள்வதற்கும் இதன் மூலமாக சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இவ்வாறு இன்றைய தொழினுட்பத்தின் வளர்ச்சியினால் நாம் பெற்றுக்கொள்ளும் இறைவனின் இரக்கத்தைப் பற்றி இறைவார்த்தை குறிப்பிடுவதை ஆராய்ந்து பார்ப்போம்.

**"பிள்ளாய்! விவேகத்தையும் முன்மாதிரியையும் பற்றிக் கொள் இவற்றை எப்போதும் உன் கண் முன் நிறுத்தி வை."**

**நீதிமொழிகள் 3:21**

**ஆகையால் உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள். இந்த நாள்கள் பொல்லாதவை, ஆகவே காலத்தை முற்றும் பயன்படுத்துங் கள். ஆகவே அறிவிலிகளாய் இராமல் ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்து கொள்ளுங்கள்.**

**எபேசியர் 5:15-17**

நவீன தொழினுட்பத்தால் கிடைத்த இணையத்தள வசதியும் முகநூல் வசதியும் இன்றைய சமுதாயத்தின் நன்மைக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாகும். ஏனெனில் இன்றைய சமுதாயத்தில் கேட்பதும் பார்ப்பதும் போன்ற கருத்துக்களின்படி அநேகமாக தொழினுட்பத்தின் வளர்ச்சியை நன்மையை விட தீமையானவற்றிற்குப் பயன்படுத்துவதால் ஏற்படும் அழிவுகள் அதிகரிக்கின்றன. இணையத்தளத்தினூடாக நிகழும் ஒழுங்கற்ற தீமையான காரியங்களினால் பிள்ளைகள் தவறான வழிக்குச் செல்கின்றனர். ஒவ்வொருவரும் ஏளனத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாகின்றனர். இணையத்தளத்தில் காணப்படும் பலவிதமான விளையாட்டுக்களினூடாக நேரத்தை வீணாக்குவதால் பிள்ளைகளின் கல்வியும் நல்வழியில் செல்வதற்குமான நேரமும் வீணாகின்றது. அத்துடன் குடும்ப உறவை பேணுவதற்கான நேரமும் வீணாகின்றது. இணையத்தளத்தை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் தீமையான காரியங்களைப் பற்றியும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இறை வார்த்தையின்படி கடவுள் நமக்குத் தந்துள்ள சிறந்த ஞானத்தையும் கூர்மையான அறிவையும் வளர்ச்சியடையச் செய்து, அவை எம்மை விட்டு அகன்று போகாதபடி ஞானத்தோடு செயற்படுவதையே அவர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

இயேசு கூறியபடி, இந்த நாட்கள் பொல்லாதவை. எனவே எமக்குக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இறைவனின் விருப் பத்தை நிறைவேற்றுவதற்கு செயற்படுவது கிறிஸ்தவ பிள்ளைகளாகிய எமது கடமை என்பதை நினைவிற்கொண்டு அதன்படி வாழ்வதற்கு முயற்சிப்போம். இறை வழிகாட்டலை வேண்டி மன்றாடுவோம்.

**ஆசிரியர்** : இக் குழுவினரின் கருத்துக்களைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன் இணையத்தளம், முகநூல் பற்றிய நன்மை, தீமைகளை அறிந்து கொண்டு செயற்பட வேண்டுமென்பதை அறிந்திருக்கின்றீர்கள் என்பது மகிழ்சியான காரியமாகும். இப்போது நாம் எமது இறுதிக் குழுவினர் முன்வைப்பதைப் பார்ப்போம்.

**3ம் குழுவின் தலைவன்** : எமக்குக் கிடைத்தது கொலோசையர் 3:5-7, 1. தெசலோனிக்கா 4:2-8 வரை உள்ள திருவிவிலியப் பகுதியை வாசித்து "கிறிஸ்தவ பிள்ளைகளாக நாம் சரியானவற்றைப் பார்ப்பதிலும், வாசிப்பதிலும் ஈடுபடுவோம்" என்ற தலைப்பின் கீழ் கலந்துரையாடுங்கள். எமது குழுவினர் கலந்துரையாடியதை இப்போது நான் உங்கள் முன் சமர்பிக்கின்றேன்.

## ஒலி, ஒளி ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்துவோம்

மனிதனின் இரசனைக்கும் அறிவை வளர்ப்பதற்கும் பிரதான தகவல் பரிமாற்றத் திற்கான ஊடகமாகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் போன்றன விளங் குகின்றன. புத்தகங்களின் மூலமாக விரிவான அறிவைப் பெற்றுக்கொள்வதோடு இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சி, திரைப்படங்களின் மூலமாக மேலும் மனதில் நிலைத்து இருக்கக் கூடிய முறையில் அறிவை வளர்த்துக் கொள்ளவும் முடியும். அச்சு இயந்திரத்தின் வளர்ச்சியால் உருவான பலவிதமான நூல்கள், சஞ்சிகைகள் மூலம் கருத்துக்களை சேகரித்துக் கொள்வதற்கும் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் தொலைக்காட்சி, திரைப்படங்கள் மூலமாக மனதை இலகுபடுத்தவும் மகிழ்ச்சியாய் இருக்கவும் வாய்ப்பு கிடைக்கின்றது. எம்மைப் போன்ற பிள்ளைகளின் கல்விக்கான தேடல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் இவற்றால் கிடைக்கின்றது.

ஆனால் இன்றைய சமூகம் இவ்வாறானவற்றை நன்மைக்காகப் பயன்படுத்துவதைத் தவிர்த்து தீமையான படங்கள், கூடாத சஞ்சிகைகள், நூல்களைப் பயன்படுத்தி மனிதனின் மனதைக் குழப்பி, இறை கட்டளைகளைக் கைவிட்டு, நவீன தொழினுட் பத்தின் வளர்ச்சியை அழிக்கின்றனர். மனிதனுக்கு வழங்கப்பட்ட இறைவனின் கொடையான ஞானம் மூலமாக தவறு செய்பவர்களின் இயல்பும் அதனை ஒழித்து

விடுமாறும் அன்றேல் கடவுளின் சினத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள் எனவும் 1 கொலேசையர் 3:5-7 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆகவே உலகப்போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை ஒழுக்கக்கேடு கட்டுக்கடங்காத பாலுணர்வு தீய நாட்டம் சிலை வழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்து விடுங்கள். இவையே கீழ்ப்படியா மக்கள் மீது கடவுளின் சினத்தை வரவழைக்கின்றன. இத்தகையவர்களோடு நீங்கள் வாழ்ந்தபோது நீங்களும் இவற்றில் தான் உழன்றீர்கள்.**

ஆபாச படங்கள், ஒழுக்கக்கேடு, பாலுணர்வு, தீயநாட்டம் போன்ற தீமையான செயல்களில் ஈடுபடும்போது கடவுளின் சினம் வரும் என்பது இறைவார்த்தை மூலமாக தெளிவாகின்றது.

இறைவார்த்தை குறிப்பிடுவது

**நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்; பரத்தைமையை நீங்கள் தவிர்க்க வேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் தம் மனைவியைத் தூயவராகக் கருதி, மதிப்புடன் நடத்த அறிந்திருக்க வேண்டும். கடவுளை அறியாத பிற இனத்தாரைப் போன்று நீங்கள் கட்டுக்கடங்காப் பாலுணர்வுக்கு இடம் கொடுக்கலாகாது. இதில் எவரும் தவறிழைத்துத் தம் சகோதரரை வஞ்சிக்கக் கூடாது. ஏனெனில் இத்தகைய செயல்கள் அனைத்தையும் ஆண்டவரே தண்டிப்பார். இதை நாங்கள் முன்னமே உங்களிடம் எடுத்துரைத்திருக்கிறோம். எச்சரித்தும் இருக்கிறோம். கடவுள் நம்மை ஒழுக்கக்கேட்டிற்கு அல்ல தூய வாழ்வுக்கே அழைத்தார். எனவே இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர், மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர்.**

**1.தெசலோனிக்கா 4:3-8**

மேலேயுள்ள இறைவார்த்தையின்படி எமது வாழ்வை நடத்துவதையும் அவரில் மகிமையான வாழ்வு வாழ்வதற்கும் கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நாம் இவைகளை மனதிற் கொள்வோம். அதன்படி,

- எமது உடலைக் கட்டுப்படுத்துவோம்.

- எமது மனதைத் தூய்மையாக வைத்துக்கொள்வோம்.
- இறை விருப்பத்திற்கு ஏற்ப தூய வாழ்வு வாழ்வோம்.
- பரத்தைமையை தவிர்ப்போம்.
- நாம் சரியானதை கருத்திற் கொண்டு நல்வாழ்வு வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரியாக வாழ்வோம்.

**ஆசிரியர் :** மிகவும் நல்லது மூன்று குழுவினரும் முன்வைத்தவை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். பிள்ளைகள் முன் வைத்த கருத்துக்களைக் கொண்டு புதிய தொழினுட்பத்தின் வளர்ச்சி மிகவும் நல்லது என்பதை அறிந்திருப்பீர்கள். ஆனால் அதை சரியாக பயன்படுத்தி இறை விருப்பத்தைத் தேடிப் பார்த்து, கடவுள் கொடுத்த ஞானத்தை கடவுளின் மகிமைக்காக பயன்படுத்தி வாழ்வது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையும் பொறுப்புமாகும்.

### செயற்பாடு

1. புதிய தொழினுட்பத்தின் வளர்ச்சியை இறைபணிக்காக பயன்படுத்தக் கூடிய 3 சந்தர்ப்பங்களை எழுதுக.
2. **“புதிய தொழினுட்பமும் இறை விருப்பமும்”** என்ற தலைப்பின் கீழ் சுவர் பத்திரிகை ஒன்றைத் தயாரிக்குக.

# 15 இறைவனுடன் நல்லுறவு

**1 கொரிந்தியர் 6: 12 - 14, 18 - 20 எபிரேயர் : 13 - 4**

கடவுள் தம் சாயலாக எம்மைப் படைத்தார் என்பதையும் கடவுளின் படைப்பில் நாம் மிகவும் உன்னதமான படைப்பு என்பதையும் எமக்கு வாழ்வளித்து எம்மைப் பாதுகாப்பவரும் கடவுளே என்பதையும் கடந்த காலங்களில் கற்று இருக்கிறோம்.

கடவுள் இவ்வாறு தனது இறைபடைப்பில் எம்மை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்தது மட்டுமல்லாது நாம் ''தூய ஆவியின் கோவில்'' என்பதையும் இறை வார்த்தை இவ்வாறு குறிப்பிடுகின்றது.

> **"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூயஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமை சேருங்கள்"**
>
> **1:கொரிந்தியர் 6:19-20**

இறைவார்த்தையின்படி,

- கடவுள் மூலமாக நாம் எமது உடலைப் பெற்றுக்கொண்டோம்.
- எனவே எமது உடலின் உரிமை கடவுளுக்கே உரியது.
- எமது உடல் தூயஆவியின் கோவிலாக இருக்கிறது. எனவே தூய ஆவியானவர் எம்மில் வாசம் செய்கிறார்.
- எனவே எமது உடலை கடவுளுக்கு மகிமையை ஏற்படுத்தும் வண்ணமாக தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு எமது உடலை கடவுளின் மகிமைக்காக தூய்மையாக வைப்பதற்கு எமக்குள் இருக்கும் தீமையான செயல்களை அறிந்துகொண்டு அதில் இருந்து மீண்டு சரியான

வாழ்வின் பாதையில் பயணிக்க எப்போதும் முயற்சி செய்வது அவசியமாகும். நாம் எமது வாழ்வை நல்ல முறையில் நடாத்திச் செல்வதற்கு இறைவார்த்தை எமக்குத் தரும் வழிகாட்டல்களை ஆராய்ந்து பார்ப்போம்.

**வாசிப்போம்**

**1: கொரிந்தியர் : 6: 12-14, 18**

''எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு'' என நாம் அநேகமாக நினைப்பதுண்டு. ஆனால் இறைவார்த்தை அது அப்படியல்ல என்பதை தெளிவு படுத்துகின்றது. கடவுள் எமக்குப் பெற்றுத்தந்த உரிமையானது அனைத்திலும் நன்மை யானவைகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கே. எனவே எப்போதும் நாம் எந்தத் தீமையான செயல்களிலும் ஈடுபடாமல் இருப்பதற்கு எம் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைச் சரியான வாழ்வை கொண்டு செல்வதற்கேயன்றி கடவுள் அனுமதிக்காத தீமையான காரியங்களில் ஈடுபடுவதற்காக அல்ல என்பதை இறைவார்த்தை எமக்கு உணர்த்துகிறது.

கடவுள் கூறியபடி தூய ஆவியின் ஆலயமான நம்மில் அவர் வாசமாய் இருக்கிறார் என்பதை பிறருக்கு வெளிப்படுத்துவதற்கு எமது சிந்தனைகள், வார்த்தைகள், நடத்தைகள் யாவும் கடவுளுக்கு ஏற்றதாக இருப்பது அவசியமாகும். எனவே இதற்கேற்றவாறு நாம் மெய்யான நல்வாழ்வு வாழ்வது அவசியமாகும். இவ்வாறு எமது வாழ்வில் மெய்யான இறைசாயலை பிறரும் அனுபவிப்பதற்காக செயற்படுவோம்.

எமது வாழ்வினூடாக இறைசாயலைப் பிறரும் அனுபவிக்க வேண்டுமானால் எமது வாழ்வின் நடத்தையில் தாழ்மை, பயபக்தி, தூய்மை, நேர்மை, அன்பு என்பவற்றின் பூரணமான செயற்பாடு எம்மிடம் திகழ்வது அவசியமாகும்.

இவ்வாறு கடவுளின் மகிமைக்காக கடவுளின் விருப்பப்படி எம் உடல், ஆவி, ஆன்மா அனைத்தும் நன்மையான முறையில் நடாத்திச் செல்ல வேண்டும். இன்றைய சமூகப் பின்னணியின் தவறான உருவாக்கத்தினால் சிறுவர்களைப் பாதிக்கும் பல அழிவுகள் ஏற்படுகின்றன. சமூகத்தில் நாம் கேட்பவைகளும் பார்ப்பவைகளும் அனைத்துச் செயல்களுமே ஊனியல்பிற்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. இது பிள்ளைகளின் வாழ்வை அழிவிற்குட்படுத்துகின்றது. அத்தோடு சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற தீயசெயல்கள் சமுதாயத்தில் கவலைக்குரிய விடயமாகின்றது எனவே எம்மைப் போன்று அனைத்து சிறுவர்களின் வாழ்வையும் பாதுகாப்பதும் இறைமகிமைக்காகச் செயற்படுவதும் அவர்களை நல்வழியில் நடத்துவதும் கிறிஸ்தவ குடும்பத்தின் பொறுப்பு என்பதை இறைவார்த்தை இவ்வாறு குறிப்பிடுகிறது.

**திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள் மணவறை படுக்கை மாசறாமல் இருக்கட்டும். காமுகரும் விபச்சாரத்தில் ஈடுபடுவோரும் கடவுளின் தீர்ப்பிற்கு ஆளாவர்.**

**எபிரேயர்:13:4**

குடும்ப வாழ்வானது அன்பிற்கு இடையூறு ஏற்படாவண்ணம் நடாத்திச் செல்வது கடவுளின் கட்டளை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. ஆனால் கடவுளின் கட்டளைக்கு எதிராகச் செயற்படும்போது நியாயத் தீர்ப்பிற்கு உள்ளாக நேரிடும் என்பதைக் காண்பிக்கின்றது. குடும்பப் பின்னணியில் பாதுகாப்பு என்பது அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும். ஆனால் குடும்பத்தின் தீய நடத்தைகளினால்,

- குடும்பத்தில் குழப்பம் ஏற்படுகின்றது.
- கூட்டுக் குடும்பம் உடைந்து போகின்றது.
- குடும்ப சந்தோஷம் இல்லாது கவலைக்குக் காரணமாகின்றது.
- குடும்பத்தில் பிரிவு அதிகரிக்கின்றது.
- பிள்ளைகள் தனித்து விடப்படுகின்றனர்.
- கடவுளின் நியாயத் தீர்ப்பிற்கு உட்படுதல்.

இவ்வாறு குடும்ப ஒற்றுமை உடைந்து போவதன் காரணமாக பெற்றோரும் பிள்ளைகளும் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே நாம் நல்லமுறையில் வாழ்ந்து எமது சமுதாயத்தை ஒன்றிணைந்து பாதுகாப்பதற்கு செயற்படுவோம். அதனூடாக ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதில் அனைவரும் ஒன்றிணைந்து பங்கு கொள்வோம்.

### செயற்பாடு

1. இயேசுவின் மூலமாக வழிகாட்டப்பட்ட பிள்ளைகளின் நல்ல நடத்தைகளுக்குக் காரணமான படிப்பினைகள் மூன்றை எழுதுக.


2. ஒழுக்கமான சமுதாயத்திற்கு அவசியமான வாழ்க்கை முறைகள் இரண்டை பாடத்தில் இருந்து எழுதுக.

# 16 இறைவார்த்தை வாழ்வின் அடிப்படை

**திருப்பாடல் : 119: 105-111**

இறைவன் மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தும் பிரதானமான வழியாக **''இறைவார்த்தை''** யைக் குறிப்பிடலாம் என்பதைக் காண்பிக்கின்றது. இறை வார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக்கொண்டு எமது வாழ்வை வெற்றியடையச் செய்யும் முறையைத் திருவிவிலியம் எமக்கு வெளிப்படுத்துகின்றது. எனவே எமது கிறிஸ்தவ வாழ்வை நல்லவழியில் நடத்துவதற்கு கடவுளின் வார்த்தையை சரியான முறையில் விளங்கிக்கொள்வது மிகவும் அவசியமாகும்.


இறைவார்த்தையை விளங்கிக் கொள்வதற்காக கடவுள் எமக்குப் பலவகையிலும் வழிகாட்டுகின்றார். முக்கியமாகக் குருவானவர், ஒய்வுநாள் பாடசாலை ஆசிரியர், பெற்றோர், பெரியோர், சகோதர, சகோதரிகள் போன்றோர் இறைவார்த்தையை நாம் விளங்கிக் கொள்வதற்கு வழிகாட்டிடுவார்கள்.



**''என் காலடிக்கு உம்வாக்கே விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே''**
**திருப்பாடல் : 119: 105**

**வாசிப்போம்**
**திருப்பாடல் : 119: 105-111**

இறைவார்த்தை எமது வாழ்விற்குச் சரியான வழியை வெளிப்படுத்தக்கூடிய ஒளியாகும். பாவம் என்னும் இருளில் இருந்து எமது வாழ்வை ஒளிமயமாக்குவதற்கு இறைவார்த்தை எமக்கு வழிகாட்டுகின்றது. இது எவ்வாறு நிகழ்கின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.




♦ **வாழ்விற்கு சரியான வழிகாட்டும் இறைவார்த்தை**

இறை வார்த்தையானது எமது வாழ்வை ஒளியாக்குகின்றது. இறைவார்த்தை எப்போதும் நாம் பயணிக்க வேண்டிய சரியான பாதையைக் காண்பிக்கின்றது. இருளான, தவறான வழியில் இருந்து எம்மைச் சரியான வழிக்குள் நடத்திச் செல்வது இறைவார்த்தையாகும்.

♦ **தவறை விளங்கிக் கொள்ளச் செய்யும் இறைவார்த்தை**

இறைவனின் இறை கட்டளைகள் எமது வாழ்வில் ஏற்படும் தீமையான செயல்களை எமக்குக் காண்பிக்கின்றது. இறைவன் மனிதன் மூலமாக இறை கட்டளைகள் நிறைவேற்றப்படுவதை எதிர்பார்க்கிறார். எனவே இறைவனுக்காக எம்மால் செய்யக்கூடிய முழுமையான பணியானது அவரின் கட்டளைகளை நிறைவேற்றுவதே ஆகும். எனவே இடைவிடாமல் இறை தந்தையின் கட்டளைகளை கற்றுக்கொள்ளு வதற்கு முயற்சி செய்வது அவசியமாகும்.

அது மட்டுமன்றி அக்கட்டளைகளை அனுதினமும் தியானித்து எப்போதும்

அக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். இதன் மூலமாக நிறைவான வாழ்வை நோக்கிச் செல்வதற்கு எமக்கு ஆற்றல் கிடைக்கின்றது. நாம் செயற்படும் அனைத்துச் செயல்களிலும் இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு நாம் செய்வது தவறா? சரியா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

### ♦ எம்மைத் தைரியப்படுத்தும் இறைவார்த்தை

இறைவார்த்தையானது நாம் முகம் கொடுக்கவேண்டிய பலவிதமான துன்பங்கள் தொல்லைகளின்போது எம்மைத் தைரியப்படுத்துகின்றது. இறைவார்த்தை எமது ஆன்மீகத்தைத் தைரியப்படுத்தி எமது வாழ்வை உயிர்ப்பிக்கின்றது. நாம் தைரியமற்ற சந்தர்ப்பங்களில் இறைவார்த்தையை வாசித்துத் தியானிக்கும்போது எம்வாழ்விற்கு புதிய பெலனும் வல்லமையும் கிடைக்கின்றது.

### ♦ இறை கட்டளையைக் கற்பிக்கும் இறைவார்த்தை

இறைவார்த்தையின் மூலம் இறை கட்டளைகளைப் புரிந்து கொள்வதற்கு இறைதந்தை எமக்கு வழி காட்டுகின்றார். எம்வாழ்வை நல்வழியில் கொண்டு செல்வதற்கு அவசியமான இறைகட்டளைகளை நாம் இறை வார்த்தையின் மூலமாக அறிந்து கொள்கிறோம். திருவிவிலியத்தில் இருந்து இறைவன் பெற்றுத் தந்த நீதிச்சட்டங்களை அறிந்து கொண்டு அவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமாக எமது வாழ்விற்கு புதிய அர்த்தத்தைக் கொண்டு வருகின்றது.

### ♦ பகைவரைத் தோல்வியுறச் செய்யும் இறைவார்த்தை

இறைவார்த்தையை ஆதாரமாகக்கொண்டு எமக்கு ஏற்படும் அநேகமான பகைவர்களின் துன்பங்களை எம்மை விட்டு அகற்றிவிட முடியும். பாவத்தில் வீழ்வதற்கு எம்மிடையே பலவிதமான சோதனைகள் தோன்றும்போது இறைவார்த்தையினூடாக அவைகளைத் தோல்வியுறச் செய்யக்கூடிய ஆற்றல் எம்மிடம் உண்டு. எனவே எவ்விதமான சந்தேகமோ பயமோ இன்றி இறைவார்த்தை என்னும் பாதையில் பயணிக்க எம்மால் முடியும். எமக்கு நேரிடும் ஆபத்து வேளைகளில் நாம் பயப்படத் தேவையில்லை ஏனெனில் இறைவார்த்தையின் மூலமாக ஆபத்து வேளையிலும் பகைவர்களின் தொல்லைகளிலிருந்தும் எமது வாழ்வு பாதுகாக்கப்படுகிறது.

### ♦ சந்தோசத்தைத் தரும் இறைவார்த்தை

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் நிரந்தரமான உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்ட முறையை திருவிவிலியம் எமக்குக் காண்பிக்கின்றது. எனவே இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டு அதனூடாக வாழ்வது மனிதனின் பொறுப்புமாகும். எனவே முழுமையான விருப்பத்தோடும் பூரண முயற்சியோடும் இறைவார்த்தையின் படி நடப்பது அவசியமாகும். இறைவார்த்தையை தனதாக்கிக் கொண்டு அதற்கேற்ற

படி வாழும்போது மனிதன் மகிழ்வடைகின்றான். எனவே இறைவார்த்தையை விட்டு, தீமையான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது எமது பொறுப்பாகும். இறைவார்த்தை மூலம் வாழ்பவர் நிலையான சந்தோசத்தின் உரிமையாளர் ஆவர். இவ்வாறு இறை வார்த்தையின்படி தன் வாழ்வில் சந்தோசத்தைப் பற்றிக்கொண்ட மாணவனின் உண்மையான அனுபவத்தைக் கீழே காணலாம்.

நகரத்தின் அநேக மைல்களைக் கடந்து தூரத்தில் இருந்த பின்தங்கிய கிராமத்து மாணவன் ஒருவன் க.பொ.த சாதாரண பரீட்சையில் பாடங்கள் அனைத்திலும் விசேட சித்தி பெற்றார். கிறிஸ்தவ பக்தியில் வாழ்ந்த இந்த மாணவன் பாடசாலை முடிந்தபின் மாலை நேரத்தைத் தன் பெற்றோரோடு விவசாயவேலைகளில் உதவி செய்வதில் ஈடுபட்டார் எனவே அம்மாணவனுக்கு எந்த ஒரு பாடத்திற்காகவும் மேலதிக வகுப்புகளுக்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இருப் பினும் அவர் திறமையாகச் சித்தி எய்தினார். அம்மாணவன் தான் பெற்றுக் கொண்ட விசேட பெறுபேறுகளைப் பற்றித் தனக்கு கிறிஸ்தவ பாடத்தை கற்பித்த ஆசிரியருக்கு இவ்வாறு கூறினார் ''நான் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து பாடங்களைப் படிப்பதற்கு முன்பாக திருவிவிலியத்திலிருந்து நீதிமொழி களிலோ அல்லது திருப்பாடல்களிலோ ஒரு அதிகாரத்தை வாசித்து அந்நாளை இறைதந்தைக்கு ஒப்புவித்து ஜெபிப்பேன்'' என்றார். அம்மாணவன் இவ்வாறு வெற்றியாகப் பயணிக்க அவனுடைய நல்ல பழக்கத்தினூடாக இறைவன் வழி காட்டினார் என்பதைத் தனது ஆசிரியருக்கு வெளிப்படுத்தினான்.

இறைவார்த்தையை ஏற்று அதன்படி நடக்கும்போது எமது வாழ்வில் சந்தோசம் கிட்டும். அந்த சந்தோசத்தைப் பிறரும் தமது நம்பிக்கையை பெலப்படுத்த பயன்ப டுத்துவது சிறப்பாகும். இறைவார்த்தைக்கு ஏற்ப வாழ்வதன் மூலம் நாம் பெறும் அனுபவத்தை நம் நண்பர்களிடையே பகிர்ந்து கொள்வது அவசியமாகும். அதன் மூலமாக அவர்களின் வாழ்வையும் நல்வழியில் கொண்டு செல்வதற்கு உதவி செய்யமுடியும். பிறரின் வாழ்வை நல்வழியில் இட்டுச்செல்வதற்கும் அவர்களின் தவறுகளைச் சீர் செய்வதற்கும் வாழ்வின் சவால்களை வெற்றி கொள்வதற்கும் எம்மால் உதவிசெய்ய முடியும். ஆபத்துக்களினால் பாதிக்கப்பட்டோரை தைரியப் படுத்துவதற்கும் பிறரின் பயத்தை நீக்குவதற்கும் நல்வழியின் மூலமாக பகைவரை தோல்வியுறச் செய்வதற்கும் இறைவார்த்தை மூலமாக எம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கு பாரிய பணியாற்ற முடியும்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையைத் தியானித்து அதன் மூலமாக வழிகாட்டுதலைப் பெற்று தைரியத்தோடும் சந்தோசத்தோடும் வாழ்வதற்கு முயற்சி செய்வோம்.

## செயற்பாடு

1. இறைவார்த்தை மூலம் உமது வாழ்வில் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் நான்கு எழுதுக.

2. இறைவனுக்கு நாளை ஒப்புவித்து அதிகாலையில் செய்யக்கூடிய விண்ணப்பத்தை எழுதுக.

3. இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு உமது நண்பர்களின் வாழ்விற்குப் பெற்றுத் தரக்கூடிய வழிகாட்டல்களை விளக்குக.

# 17 இறைவார்த்தை வாழ்வின் அடைக்கலமும் பெலனும்

**திருப்பாடல் : 46: 1-11**

அன்றாட வாழ்க்கையில் நாம் முகம் கொடுக்கும் பலவிதமான துன்பங்கள் பற்றிய பத்திரிகைகளின் தலைப்புக்கள் சில,

அதிக வரட்சியினால் கடும் பாதிப்பு

இந்த வருடத்தில் வாகன விபத்து அதிகரிப்பு

புற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

வெடிகுண்டினால் உயிர்களும் சொத்துக்களும் அழிவு

மண்சரிவினால் வீடுகள் ஐம்பது அழிவு

உயிர் கொல்லி டெங்கு மீண்டும் தலைதூக்குதல்

இவ்வாறான துன்பங்களினால் அதிகமான பாதிப்பு ஏற்படுவது உறுதியாகும். இவை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் இருவகையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். அவற்றினால் மனிதன் அனுபவிக்கும் துன்பங்கள் அநேகமாகும். உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகும் துன்பங்களை நாம் பின்வரும் அடையாளங்களைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

- அதிர்ச்சிக்கும் பயத்திற்கும் உட்படுதல்.
- ஆன்மீக வாழ்வு உடைந்து போதல்.
- வருங்காலத்தின் எதிர்பார்ப்பு இல்லாது போதல்.
- பிறரின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்படுதல்.
- வாழ்க்கையைக் குறித்தான குழப்பம் ஏற்படுதல்.

முன்னைய காலத்தில் இஸ்ரயேல் மக்கள் தம் துன்ப துயர வேளையில் கடவுளின் இரக்கத்தையும் உதவியையும் நாடினர். அவர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த சந்தர்ப்பத்திலும் பபிலோனியாவிற்கு நாடு கடத்தப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஒரே இனமாக ஒன்றிணைந்து கடவுளின் இரக்கத்தை வேண்டினர். அவ்வாறான சந்தர்ப் பத்திலும் இறைதந்தை அவர்களுக்கு உதவி செய்தார். அவர்களைப் பெலப் படுத்தினார். அதுமட்டுமல்லாது அவர் மூலமாக இஸ்ரயேல் மக்கள் வெற்றியை நோக்கி கொண்டு செல்லப்பட்டனர். அவ்வனுபவத்தினூடாக அவர்கள் காட்டிய ‘‘நம்பிக்கையின் வெளிப்பாடு’’ இவ்வாறாகும்.



**வாசிப்போம்**
**திருப்பாடல்**
**46:1-6**


**துன்ப வேளையில் எம் மத்தியில் வாசம் செய்யும் கடவுள்**

- **எமது அடைக்கலமும் பெலனுமாகின்றார்.**
- **எமது வாழ்வைப் பாதுகாக்கின்றார்.**
- **இருளின் மத்தியில் எமது பயத்தை நீக்குகின்றார்.**
- **வெற்றியை நோக்கி எம்மை வழி நடத்துகின்றார்.**

எமது துன்பங்களின் மத்தியில் கடவுள் இரக்கம் செய்யும் முறைகளை ஆராய்ந்து பார்ப்போம்.


### 1. எமது அடைக்கலமும் பெலனுமான கடவுள்

பலவிதமான துன்பங்கள் சவால்களின் மத்தியில் கடவுள் மனிதனுக்கு இரக்கம் செய்த முறைகள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் கடவுள் எம் உடலையும் மனதையும் திடப்படுத்துகின்றார். கடவுள் எமக்கு இரக்கமும் பெலனும் பெற்றுத்தரும் சந்தர்ப்பங்கள் பலவற்றை அறிந்து கொள்வோம்.





### 2. எமது வாழ்வைப் பாதுகாக்கும் கடவுள்

கடவுளின் இரக்கம் எமது வாழ்வை ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கின்றது. இஸ்ரயேல் மக்களின் வாழ்வைக் கடவுள் பாதுகாத்த முறைகளில் இருந்து கிடைத்த அனுபவங்களை இப்பாடத்தின் ஊடாக எம்மால் விளங்கிக் கொள்ளமுடியும். வாழ்வின் பலவிதமான ஆபத்தான சந்தர்ப்பத்தில் அவர் எமக்கு உதவி செய்கிறார்.




### 3. இருளின் மத்தியில் எமது பயத்தைப் போக்கும் கடவுள்

எமது வாழ்க்கையில் இருளின் மத்தியில் பயணிக்கும் பயங்கரமான சந்தர்ப்பங்களில் இறைதந்தை எமக்கு உதவி செய்கின்றார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் நினையாத முறையில் நடுநிலை வகித்து அவர் எமது பயத்தைப் போக்குகின்றார்.




### 4. வெற்றியை நோக்கி எம்மை நடத்தும் கடவுள்

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கைப் பயணத்தில் சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு கடவுள் வழிகாட்டுகின்றார். இதன்மூலம் எம்மால் வெற்றியைக் கிட்டிச் செல்வதற்கான ஆற்றல் கிடைக்கின்றது.




கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக இருந்து எமது வாழ்விற்கு அடைக்கலமும் பெலனும் பெற்றுத் தருகின்றார். இதன்மூலம் எமது வாழ்க்கையில் ஏற்படும் பலவிதமான துன்பங்களையும் சவால்களையும் வெற்றி கொண்டு பூரண வாழ்வை நோக்கி கிட்டிச் செல்வதற்கு எமக்கு ஆற்றல் கிடைக்கின்றது.

பலவித துன்பங்களுக்கு முகம் கொடுத்தல்

↓

கடவுளின் அடைக்கலத்தையும் பெலனையும் பெறுதல்

↓

மனிதன் முழுமையை நோக்கிக் கிட்டிச் சேருதல்

**அமைதி கொண்டு நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள். வேற்று இனத்தாரிடையே நான் உயர்ந்திருப்பேன் பூவுலகில் நானே மாட்சியுடன் விளங்குவேன்.**

**திருப்பாடல் : 46 : 10**

நாம் இடைவிடாமல் கடவுளின் முன்னால் அமைதி கொண்டு அவரின் குரலைக் கேட்டு தரித்திருப்பதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். நாம் அவ்வாறு கடவுளின் அருகில் தரித்து இருக்கும்போது கடவுளின் அடைக்கலத்தையும் பெலனையும் அனுபவிக்கும் ஆற்றல் எமக்குக் கிடைக்கின்றது.

கிறிஸ்தவ பிள்ளைகளாகிய எமது வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் கடவுளின் அடைக்கலமும் பெலனும் எம்மிடையே நிலவும் என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியமாகும். அவ்வாறே அவரின் அடைக்கலமும் பெலனையும் பெற்ற நாம் பிறரோடு ஒன்றிணைந்து வாழ்வதற்கும் அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்பு வதற்கும் செயற்படுவது அவசியமாகும். அவ்வாறாகச் செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் அறிந்து கொள்வோம்.

- ஒவ்வொருவரினதும் தேவைகளை அறிந்து கொண்டு அதற்கு ஏற்ற வண்ணமாக அவர்களுக்கு உதவி செய்வோம்.
- மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை அந்நிலையில் இருந்து மீட்டு எடுப்பதற்கு செயற்படுவோம்.
- பிறரின் வாழ்வைப் பாதுகாப்பதற்கு செயற்படுவோம்.
- ஒவ்வொருவரின் பயத்தைப் போக்கவும் செயற்படுவோம்.
- வாழ்வை வெற்றி கொள்வதற்கு அவர்களைத் தைரியப்படுத்துவோம்.
- உற்சாகமாக எழுந்து நிற்பதற்கு அவர்களுக்குக் கைகொடுப்போம்.

### செயற்பாடு

1. துன்பங்களில் பாதிக்கப்பட்டோர் காண்பிக்கும் பிரதிநடத்தையை சுருக்கமாக அறிமுகம் செய்க.

2. இறைவனில் நம்பிக்கை கொண்ட உங்களின் வாழ்வில் துன்பங்களை வெற்றி கொண்ட சந்தர்ப்பங்களை விளக்குக.

3. இறைவனில் அடைக்கலமும் பெலனும் பெற்ற நீர் வகுப்பறையில் உமது நண்பனின் வாழ்வை பெலப்படுத்துவதற்கு செயற்பட்ட சந்தர்ப்பங்கள் மூன்றைக் கூறுக.

# 18 தன்னலம் துறந்து சிலுவை சுமப்போம்

**மத்தேயு : 16 : 24 - 27**

(ஒய்வுநாட் பாடசாலையில் தரம் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலைக் கீழே காணலாம்.)

**ஆசிரியர்** : இப் புகைப்படத்தில் இருப்பவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

**கலா** : இவர் வெளிநாட்டுப் போதகர் அல்லவா?

**ஆசிரியர்** : ஆம்! மகளே விடை சரியானது. எமது நாட்டின் கல்வித்திட்டத்திற்காக பாரிய பணியாற்றிய போதகரின் படம். இவரின் பெயர் வண. ஜேம்ஸ். எச். டொல் போதகர்.

**ரவி** : அப்படியானால் இவரின் விசேடத்துவம் என்ன?

**ஆசிரியர்** : இவரைப் பற்றிக் கூறுவதானால் 1872 ஜுன் 9ம் திகதி பிறந்த இவர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணித பாடம் தொடர்பாக உயர்ந்த திறமை பெற்ற ஒருவராவார். பொதுவாக எல்லா வகையிலும் கல்வியில் திறமை பெற்றவராவார். ஆனால் இவர் போதகராக தனது திறமைகளையும் தன் வாழ்வையும் பிறருக்காகவே அர்ப்பணித்தவர். அதன்படி இறை விருப்பத்திற்கு இணங்கிய இவர் பணியாற்று வதற்காக இலங்கைக்கு வந்தார்.

**மலர்** : இலங்கைக்கு வந்த அவர் எங்கே வசித்தார்? எங்கே பணி செய்தார்?

**ஆசிரியர்** : இவர் 1896 இல் காலியில் உள்ள ரிச்மன்ட் கல்லூரியில் அதிபராக பணியாற்ற நியமிக்கப்பட்டு வந்தார். அப்போது அவரின் வயது 24. இளமை வயதில் அவர் அதிக திறமை பெற்றவராக இருந்தார். அவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக பாரிய பணியாற்றினார். 1906 இல் காலிப் பிரதேசத்தை கடுமையான ஒரு காய்ச்சல் நோய் தாக்கியது.

**ரவி** : இந்த நோய் என்பது மலேரியா காய்ச்சலைப் போன்று விரைவாக பரவக்கூடிய ஒன்றா?

**ஆசிரியர்** : ஆம், இக் காய்ச்சலானது மிகவிரைவாக எல்லா இடங்களிலும் பரவக்கூடியது. அன்று அந்தப் பாடசாலை விடுதியில் 100 இற்கு மேலான மாணவர்கள் தங்கி இருந்தார்கள். அந்த மாணவர்களுக்கும் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது.

**ரவி** : ஐயோ! பாவம்! பிள்ளைகளுக்கு மரணமும் ஏற்பட்டிருக்குமே?

**ஆசிரியர்** : ஆம். அதிகமானோர் மரித்தனர். இந்நோய் பயங்கரமான படியால் எவருமே உதவிக்கு வரவில்லை. பெற்றோரும் பிள்ளைகளைப் பார்க்க வரவில்லை. ஆனால் இந்தப் போதகர் மட்டும் பிள்ளை களை கைவிட்டுச் செல்லவில்லை. தனிமையில் பிள்ளைகளைப் பாதுகாத்தார். அவர்களுக்கு மருந்து கொடுத்தார். அசுத்தங்களைத் தம் கைகளினாலே அகற்றினார். அவர்களை நல்ல முறையில் பராமரித்தார். தனக்கும் சுகயீனம் ஏற்பட்டதை உணர்ந்து கொண்ட போதிலும் இயேசுவின் அன்பு அவரிடம் காணப்பட்டதால் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

**ரவி** : இலங்கைக்கு வந்து இவ்வாறான பணி செய்வதற்கு அவர் எவ்வளவு நல்லவராக இருக்க வேண்டும்.

**ஆசிரியர்** : ஆனால் ஒருநாள் இவ்வாறு களைத்துப்போய் வேலை செய்துவந்த அவருக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. 1906 ஜுலை 12 இல் அவர் மரணம் அடைந்தார். அவர் மரிக்கும்போது அவரின் வயது 35. வாழ்வில் எவ்வளவோ துன்பம் வந்தாலும் அவை அனைத்தையும் தாங்கிக்கொண்டு இயேசுவுக்காகப் பணிசெய்த முறையை இந்தப் போதகர் அவர்களின் வாழ்க்கை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

**வாசிப்போம்**
**மத்தேயு**
**16 : 24 -27**

இயேசு தன்னைப் பின்பற்றுவதற்காகவே சீடர்களை அழைத்தார். அதாவது இயேசு வின் வாழ்வின் முன் மாதிரியில் உருவாகும் இறையரசை வளர்ச்சியடையச் செய்யும் செயல்களில் அவர்கள் பங்கு பெறுவதற்காகவே ஆகும். இயேசுவைப் பின்பற்றுவது சுயவிருப்பத்தோடு நிகழும் செயலாகும். இதை ஒருவர் கொடுப்பதாலோ அல்லது கேட்பதாலோ நிகழ்வது அல்ல. மற்றும் வெளி உலகத்திற்கு காண்பிப்பதற்கான வெளிவேடமான செயலும் அல்ல. இது மனதிலும் ஆன்மீகத்திலும் நிகழவேண்டிய உண்மையான பின்பற்றுதலின் செயலாகும்.

இயேசுவைப் பின்பற்றுவோர் ஆயனின் பின் செல்லும் மந்தைக்கு சமமானவர்கள். ஆயன் எப்போதும் மந்தைகளுக்கு முன்னால் சென்று வழிகாட்டுவார். மந்தைகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி தன் ஆயனின் பின் செல்லும். அவரைப் பின்பற்றிச் செல்வதற்கு அழைக்கப்பட்ட நாம் அப்பயணத்தின் இறுதிவரை சுயவிருப்பத்தோடு பயணிப்பது அவசியமாகும்.

நாமும் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாவதற்கு எமக்குத் தேவையான தகுதிகள் எவை என ஆராய்ந்து பார்ப்போம்.

***பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து ''என்னைப் பின்பற்ற விருப்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.''***

**மத்தேயு : 16 : 24**

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதிக்கேற்ப இயேசுவைப் பின்பற்றுவதனால் எம்மிடையே இருக்கவேண்டிய முக்கியமான செயல்கள் இரண்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

1. தன்னலம் அகற்றுதல்.
2. சிலுவையைச் சுமந்து அவர்பின்னால் செல்லல்.

## 1. தன்னலம் அகற்றுதல்

தன்னலம் துறப்பதைப் பற்றிய உயர்ந்த முன்மாதிரியை பெற்றுத்தந்தவர் இயேசு. விண்ணகத் தந்தையையும் அவரின் செல்வாக்கையும் விட்டு இயேசு மாட்டுத்தொழு வத்தில் பிறக்கும் அளவிற்குத் தம்மைத் தாழ்த்தினார். எவ்வித பாவமுமின்றி அவர் பலவித துன்பங்களுக்கும் ஏளனத்திற்கும் உட்பட்டு மனிதரின் மீட்புக்காக இறைதிட்டத்திற்குப் பணிந்து சிலுவையில் அறையப்பட்டார். தம் வாழ்நாள் முழுவதும் அவர் தன்னலம் துறந்து, அதைத் தன் வாழ்வில் வெளிப்படுத்தி எமக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

உதாரணமாக, இயேசு முகம் கொடுத்த சோதனைகளில் அவர் உலகத் தேவைகளை விட்டு ஆன்மீகத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். முழு மனித இனத்தின் மீட்புக்காகவே இயேசு விண்ணுலகை விட்டு மண்ணுலகம் வந்தார். தன்னலம் அகற்றுதலின் பிரதான கருத்தானது தன்னிடம் இருக்கும் நான் என்ற அகந்தையை அகற்றி விடலாகும். அதாவது, இறை தொடர்புக்குத் தடையான முறையில் காணப் படுபவைகளைக் கைவிடுவதற்கு ஆயத்தமாய் இருத்தல் ஆகும். இயேசு இதைத் தன் வாழ்வில் முன்மாதிரியாகக் காண்பித்துள்ளார். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், நான் என்ற அகந்தையை அகற்றாவிடில் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக நிலைத்து இருப்பது கடினமான காரியமாகும். தன்னலம் துறக்க வேண்டியது எமது மீட்புக்காக மட்டுமல்ல பிறரின் மீட்புக்காகவுமே ஆகும்.

## 2. சிலுவை சுமந்து அவர் பின்னால் செல்வோம்



5.3 இயேசு சிலுவை சுமத்தல்

சிலுவையில் அறைவது அன்றைய யூத சமுதாயத்தில் பாரதூரமான குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை முறையாகும். இயேசுவும் அதற்கு முகம் கொடுத்தார். இயேசு அன்று சிலுவை சுமந்து பாவிகளான மனிதரைப் பாவத்திலிருந்து மீட்டார். அவர் சமுதாயத்தினால் ஒதுக்கப்பட்ட பாவிகளுக்குச் சரியான வழிகாட்டியாவார். அன்று மக்களை துன்பத்திற்குட்படுத்திய குருக்கள், பிரபுக்கள், ஆட்சியாளர்கள் உடன் முரண்பட்டு சமூக அநீதியை எதிர்த்து நின்றார். அவ்வாறு பாவத்தில் இருந்து மீட்படைவதற்கு, மனந்திரும்பி இறையரசுக்குள் மக்களை அழைத்தார். இறுதியில் தனது விருப்பத்தோடு சிலுவையில் பலியானார்.

இயேசுவின் சிலுவை மரணத்தினால் நாம் இறை பிள்ளைகள் என்னும் தகுதியையும் பாவ மன்னிப்பையும் நாம் பெற்றுள்ளோம். நாம் சிலுவை சுமந்து அவரைப் பின்பற்றி செல்வதென்றால் அவரின் வாழ்வின் முன்மாதிரியைப் பின்பற்றுவதும் அவரின் போதனைக்கு ஏற்ற வண்ணம் எமது வாழ்வை நடாத்துவதுமாகும். அது இலகுவான செயலல்ல. அதனால் எமக்கு பலவிதமான துன்பங்களை தாங்கிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். எனவே, நாம் சிலுவையை சுமந்து அவரைப் பின்பற்றிச் செல்வது என்பதைப் புரிந்துகொண்டு அவரின் பிள்ளைகளாக வாழ்வில் ஏற்படும் அனைத்து சவால்களின் மத்தியிலும் அவரைக் கைவிடாது அவரைப் பின்பற்றுவோம்.

**வாசிப்போம்**
**மத்தேயு 16 : 25**

கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

எம்மால் அனேகமாக போஷிக்கப்படுவது எமது உடலாகும். எமது உலக வாழ்வை திருப்தி அடையச் செய்வதற்கு நாம் அநேகமாக முயற்சிக்கின்றோம். ஆனால் எமது ஆன்மீக வாழ்வைப்பற்றி அதிகமாக சிந்திப்பது இல்லை. ஆன்மீக வாழ்வை போஷிப்பதற்கு வாழ்வின் எல்லா வேளைகளிலும் முதலாவதாக இறை திட்டத்திற்கு இடமளித்தல் முக்கியமாகும்.

இயேசுவுக்காக தன் வாழ்வை அர்ப்பணிப்பவர்கள், கடவுளின் உயிர் மூச்சினால் தாம் பெற்றுக் கொண்ட ஆன்மீக வாழ்வைப் பாதுகாத்துக் கொள்கின்றார்கள். எமது மரணத்தின்போது எமது ஆத்மா கடவுளுடன் ஒன்றிணையும் சந்தர்ப்பம் உருவாகும்.

இயேசு சிலுவை சுமந்து சென்றது போல் அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு எமது வாழ்வை அர்ப்பணிக்கும்போது நாம் உடல் ரீதியாக துன்புறவும் மரணத்திற்கும் உட்பட இடமுண்டு. இருப்பினும் இதனூடாக எமது ஆன்மீக வாழ்வு பாதுகாக்கப்பட்டு கடவுளின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**வாசிப்போம்**
**மத்தேயு 16 : 26 -27**

இயேசுவைப் பின்பற்றுவதால் எமக்கு இறைவனின் பிள்ளைகளாக நிறைவான வாழ்விற்குள் செல்லமுடியும் முழு உலகையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும்

கிறிஸ்துவுக்குள் எமது வாழ்வு இல்லாவிட்டால் அதில் அர்த்தமில்லை.

இயேசு ஆன்மீக வாழ்வின் பெறுமதியையும் உலக வாழ்வில் கடவுளின் பிள்ளையாக வாழவேண்டிய ஒழுங்குகளையும் எமக்குக் காண்பித்துள்ளார். நித்திய வாழ்வை நாம் இழந்துவிடுவோம் என்பது ஆன்மீக வாழ்வு இல்லாது போதலாகும்.

உலக காரியங்களுக்கு அநாவசியமாக முக்கியத்துவம் கொடுப்பதால் கடவுளுடனான எமது தொடர்பு பாதிக்கப்படுகிறது. இந்த உலகியல் வாழ்வில் நாம் பெற்றுக்கொள்வது அநேகமாக நிரந்தரமற்றது. ஆனால் கடவுளுக்குள்ளாக நாம் கட்டியெழுப்பும் ஆன்மீக வாழ்வோ நிலையானது. எனவே எமக்கு ஏற்படும் உலகத்தின் சோதனைகளை வென்று வாழ்வது எமது பொறுப்பாகும்.

இயேசு அரச மகிமையோடு இரண்டாம் முறையாக இவ்வுலகிற்கு வருவதாக வெளிப்படுத்தினார். நாம் அனைவரும் இறுதித் தீர்ப்பில் வெவ்வேறாக நியாயம் தீர்க்கப்படுவோம் என்பதை திருவிவிலியம் எமக்குக் காண்பிக்கின்றது. அந்த சந்தர்ப் பத்தில் நாம் நியாயம் தீர்க்கப்படுவது இந்த உலகத்தில் நாம் வெற்றி கொண்டவைகள் அல்ல. மாறாக இயேசுவைப் பின்பற்றுவோராக நாம் செயற்பட்ட முறையின்படியே ஆகும்.

அவ்வாறே, நாம் எமது வாழ்வை மட்டுமல்லாது பிறரின் வாழ்வையும் கட்டியெழுப்பு வதற்கு செயற்படுவது மிகவும் அவசியமாகும்.

தன்னலம் துறந்து இயேசுவைப் பின்பற்றுபவராக எமது வாழ்வைக் கொண்டு செல்லவேண்டிய பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- எமது விருப்பத்தையும் எமது தேவைகளையும் விட மேலாக பிறரின் விருப்பத் துக்கும் அவர்களின் தேவைகளுக்கும் இடமளிப்போம்.

- இயேசுவுக்குச் சொந்தமான பிள்ளையாக செயற்படும்போது எமக்கு ஏற்படும் துன்ப துயரங்களை மகிழ்வோடு ஏற்றுக்கொள்வோம்.

- பிறரின் வாழ்வைக் கட்டியெழுப்பி நல்லவைகளுக்காக நாம் வெறுமையாவோம்.

- நாம் செய்யும் அனைத்துச் செயல்களிலும் முழுமையாக அர்ப்பணித்து நிறைவு செய்வோம்.

- வாழ்வின் அனைத்து சவால்களின் மத்தியில் திடமாக நின்று இயேசுவைப் பின்பற்றுவோம்.

இயேசு தன்னலம் துறந்து எமது வாழ்வின் மீட்புக்காகச் சிலுவைப் பாதையைத் தெரிவு செய்தார். அவ்வாறே நாமும் எமது வாழ்வில் சுயநல நோக்கத்தைவிட்டு பிறர்நலம் பேணி பிறரின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்போம்.

**செயற்பாடு**

1. பிறரின் ஆன்மீக வாழ்வைப் பெலப்படுத்த உங்களால் எடுக்கக் கூடிய செயல்முறைகள் என்ன?

2. கிறிஸ்துவைச் சார்ந்தவர்களாக தன்னலம் துறந்து பிறருக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த நபர்களைப் பற்றிய கருத்துக்களை உட்படுத்தி கையேடு தயாரிக்கவும்.

# 19 கிறிஸ்துவின் படைவீரர் ஆவோம்

**எபேசியர் : 6 : 13-20**

கிறிஸ்தவர்களாக வாழும் எமக்கு அதற்கு எதிரான முக்கிய சவால்கள் ''தீயோன்'' இடம் இருந்து கொண்டுவரப்படுகின்றது. நாம் அறிந்தும் அறியாமலும் பல விதமான வடிவங்களிலும் பலவிதமான வழிகளிலும் தீமை எம்மை நோக்கி வருகின்றது. இவ்வாறாக தீயோன் ஏற்படுத்தும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கான முறைகளை பவுல் அடிகளார் எபேசு மக்களுக்கு எழுதிய திருமுகம் மூலமாக நாம் அறிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கின்றது.

யூதரல்லாத இனத்தவரிடம் நற்செய்தியைக் கொண்டு செல்வதற்காக கடவுளின் அழைப்பைப் பெற்றவர் பவுல் ஆவார். இவர் நற்செய்தியை அறிவித்தபடியால் கைது செய்யப்பட்டு சிறையில் கடுமையான பாதுகாப்போடு இருக்கும்போது எபேசியரின் திருமுகத்தை எழுதி எபேசு மக்களுக்கு அனுப்பினார். சிறைச்சாலையில் இருக்கும் போது அவர் எப்போதும் பலவிதமான போர் ஆயுதங்களைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே படைவீரரின் சுயவடிவத்தை அடையாளப்படுத்தி எபேசு மக்களின் ''ஆன்மீகப் போரை'' வெற்றியடையச் செய்வதற்காகவும் அதற்கு எதிராக வரும் தீமையான சக்திகளைத் தோல்வியடையச் செய்யவும் ஆயத்தம் செய்த முறையையும் ஆராய்ந்து பார்த்து இதன் மூலம் எமது ஆன்மீக வாழ்வை வெற்றியடையச் செய்வதற்கான முன் மாதிரியையும் ஆராய்ந்து பார்ப்போம்.

**எனவே பொல்லாத நாள் வரும்போது எதிர்த்து நின்று அனைத்தின் மீதும் வெற்றிபெற்று நிலை நிற்க வல்லமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைகலன்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்.**

**எபேசியர் : 6 : 13**

திருத்தூதர் பவுலைப் போன்று கிறிஸ்தவர்கள் முகம் கொடுக்க வேண்டிய போராட்டம் என்ன?

பவுல் போராயுதங்களை அடையாளப்படுத்தி, அதன் மூலம் ஆன்மீக போராட்டத் திற்காக இறைமக்களை ஆயத்தம் செய்தார். இது தீமைக்கு எதிராகச் செய்யும்

போராகும். இன்று சமுதாயத்தில் தீயசக்திகள் பலவிதமான வடிவங்களில் எம்மிடையே வருகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் சிலவற்றை அறிந்து கொள்வோம்.

- சில நண்பர்கள் மூலமாக வரும் தவறான தூண்டுதல்.
- நவீன தொடர்பு சாதனங்களை தவறாக பயன்படுத்துதல்.
- போதை பொருள்கள், புகைபிடித்தல் போன்றவற்றை தூண்டுதல்.
- ஆசிரியர், பெற்றோர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் நாட்டமின்மை.
- பொது தீர்மானங்களுக்கு தலைசாய்ப்பதற்கு காண்பிக்கும் நாட்டமின்மை.



**வாசிப்போம்**
**எபேசியர் : 6 : 14 -17**

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியின் மூலமாக இறைமக்களின் போர் ஆயுதங்களைப் பெயரிடுக.

உண்மை என்னும் → இடைக் கச்சை

போர் நிகழும்போது உடலை சரியாக வைத்துக்கொள்வதற்கு இடைக்கச்சை பயன்படுத்துகின்றது. கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் ஆன்மீகப் போராட்டத்தில் உண்மையை விட்டுவிலகாமல் இருக்க வேண்டுமென்பதை இது வெளிப்படுத்துகின்றது. மெய்யான உண்மையை எமக்கு விளக்கித்தரும் இறைவார்த்தையாகும்.

- பொல்லாத செயல்களை அகற்றிவிடுவதும் அதை இல்லாது செய்வதில் பங்கேற்றல்.
- தூய ஆவியானவர், மனதில் பேசுவதைக் கேட்டு உண்மையுள்ளவர்களாக செயற்படுவது அவசியமாகும்.

நீதி என்னும் → மார்புக்கவசம்

படைவீரர்களின் முக்கியமான வாழ்வைப் பாதுகாக்கும் அணிகலனான மார்புக்கவசம். இது அவர்களின் மார்பை ஏதாவது ஆயுதங்கள் தாக்கிச் செல்லா வண்ணம் தடுப்பதாகும். எமது வாழ்வும் தீமையால் அழிந்து போகாமல் இருப்பதற்கு, எமது வாழ்வில் எப்போதும் நீதியை நிலைநாட்டுவது அவசியமாகும்.

- தீமைக்கு எதிராகப் போராட வேண்டும்
- எனவே எமது வாழ்வு நீதியால் நிரம்பி இருப்பதற்கு முயற்சி செய்வோம்.
- நீதியினூடாக இறையரசிற்குச் செல்லும் உரிமை கிடைக்கின்றது.
- நீதியின் வழியில் செல்வோருக்கு அநேக தடைகள் ஏற்பட்டாலும் இறுதியில் அவர் தனது வாழ்வை வெற்றியடையச் செய்யலாம்.

அமைதி அருளும் நற்செய்தி என்னும் ⟶ மிதியடி

நற்செய்தியை உலகம் அனைத்தும் எடுத்துச் செல்லவேண்டியது கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பாகும் மிதியடியை போட்டுக் கொள்ளுதல் என்பதன் அர்த்தமானது பயணம் செல்லுதல் ஆகும். அமைதி அருளும் நற்செய்தியை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் முறைகள் பலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

- இயேசுவின் பிறப்பின் மூலமாக உலகிற்கு அமைதி உதயமான முறையை வெளிப்படுத்துவோம்.
- நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றுவது கிறிஸ்தவர்களான எமது பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்படுவோம்.
- எம் வாழ்க்கை முன்மாதிரி நற்செய்தியைப் பிறரிடம் கொண்டு செல்வதற்கு தகுதியானவழி எது என்பதனை சிந்தித்து வாழ்வோம்.

நம்பிக்கை என்னும் ⟶ கேடயம்

கேடயத்தைப் பிடித்துக்கொள்வது தீயோனிடமிருந்து வரும் தீமைகளைத் தடுப்பதற்காகும். கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் மூலமாக எம்மிடையே வரும் சோதனைகளில் இருந்து வெற்றி பெறமுடியும்.
இதனால்,

- எல்லா வேளைகளிலும் எம்மிடமுள்ள நம்பிக்கை என்னும் கேடயத்தை வைத்திருப்பது அவசியமாகும்.
- எமது வாழ்வின் இறுதிவேளை வரை இறை நம்பிக்கையோடு செயற்படுவது அவசியமாகும்.
- பலவிதமான தடைகள், சவால்கள் மத்தியில் எம்மிடையே காணப்படும் நம்பிக்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும்.

*மீட்பு என்னும் ⟶ தலைச்சீரா*

*படைவீரர்கள் தலைச்சீராவை அணிந்து கொள்வது புத்தியோடும் சுயசிந்தையோடும் தனது பொறுப்பை நிறைவு செய்வதற்கும் தமது தலையைப் பாதுகாத்துக் கொள் வதற்கும் இதை அணிவர். கிறிஸ்தவர்களான எமக்கு இதை இவ்வாறு பொருத்தமாக்கிக் கொள்ள முடியும்.*

- *தலையானது உடலின் முக்கியமான அவயவமாகும். இதைப்போன்று கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய குறிக்கோளானது பாவத்திலிருந்து மீட்பு.*
- *தலைச்சீராவால் தலையைப் பாதுகாப்பது போன்று கிறிஸ்தவ வாழ்வைப் பாதுகாப்பது பாவத்தில் இருந்து மீட்படைவதன் மூலமேயாகும்.*
- *நாம் எமது வாழ்வைப்போன்று பிறரின் வாழ்வையும் பாவத்தில் இருந்து மீட்பதற்கு முயற்சி செய்வது எமது பொறுப்பாகும்.*

*தூயஆவி அருளும் கடவுளின் வார்த்தை என்னும் ⟶ வாள்*

*பகைவரிடம் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கும் பகைவரை அழிப்பதற்கும் வாள் பயன்படுத்தப்படுகின்றது. இதனைப் போன்று எமது கிறிஸ்தவ வாழ்வினை நடாத்திச் செல்வதற்கும் பகைவரை அழிப்பதற்கும் பயன்படுத்த வேண்டியது இறை வார்த்தையாகும்.*

- *இறைவார்த்தை என்னும் கூர்மையான வாளினால் எமது வாழ்வில் காணப் படும் தீமையான செயல்களை அகற்றி விடுவதற்கு வழி காட்டுகின்றது.*
- *பகைவரைத் தோல்வியடையச் செய்வதற்கு வாள் பயன்படுத்தப்படுவது போல எமது வாழ்வில் வரும் தீமையைத் தோல்வியடையச் செய்ய இறை வார்த்தையைப் பயன்படுத்துவோம்.*
- *இயேசுவைப் போன்று சோதனைகளின் மத்தியில் இறை வார்த்தையைப் பயன்படுத்தி பாவத்திலிருந்து விலகியிருப்பதற்கு முயற்சி எடுப்போம்.*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி கவச ஆயுதங்களை அணிந்து கொண்ட கிறிஸ்தவன் இயேசுவின் படைவீரன் ஆகிறான். இங்கு கிறிஸ்தவர்கள் மூலமாக நிகழக்கூடியது தீமைக்கு எதிராகச்செய்யும் போராகும். அவ்வாறான படைவீரனிடம் இருக்கவேண்டிய முக்கியமான பண்பாக இருப்பது ஜெபித்தல் ஆகும். இது எபிரேயர் 6:18-20 வரை இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

**இவ்வாறாக படைவீரரிடம் இருக்க வேண்டிய மன்றாட்டைப் பற்றி எபிரேயருக்கு வழங்கப்பட்ட அறிவுரை**

- முழு மனதோடு மன்றாடுதல்
- தூய ஆவியின் வல்லமையினால் நம்பிக்கை கொண்டு மன்றாடுதல்
- விழிப்பாயிருந்து இடைவிடாமல் மன்றாடுதல்
- இறை மக்களுக்காக மன்றாடுதல்
- இறைபணியில் ஈடுபடுவோருக்காக மன்றாடுதல்

இயேசுவுக்காக சிறையில் இருந்தபோது பவுல் அடிகளார் இடைவிடாமல் எல்லா இடங்களிலும் இயேசுவுக்காக அவரின் தூதுவனாக நியமிக்கப்பட்டவராக நம்பிக்கை கொண்டவராக தன் பணியின் போராட்டத்தில் இயேசுவுக்கு ஏற்ற படைவீரனாக செயற்பட்டார்.

இவ்வாறு பயமற்ற போர்வீரராக இறைமக்களின் போர் ஆயுதங்களை தரித்துக் கொண்டு தீமையின் சக்திக்கு எதிராக போராடிக் கிறிஸ்துவின் தூதுவராக செயற்படுவதற்கு அவர் எங்களையும் அழைக்கின்றார்.

### செயற்பாடு

1. கிறிஸ்தவன் எதற்கு எதிராக போர்புரிய வேண்டும்?
2. கிறிஸ்துவின் படையில் போர்வீரனாக இறைபணியில் நீர் ஈடுபடும் முறையை விளக்குக.

# 20 கிறிஸ்தவ கொள்கையைப் பாதுகாப்போம்

**உரோமையர் 12 : 9-21**

(குமாரின் , பாடசாலை விளையாட்டு விழாவைக் கண்டுகளிப்பதற்காகக் குடும்பத்தில் அனைவரும் பாடசாலைக்குச் சென்றார்கள். பாடசாலைத் தோட்டத்தில் மாமரத்தில் இருந்து ஒரு மாம்பழத்தைப் பறிப்பதற்கு அவனுடைய இளைய சகோதரன் முயற்சி செய்தான். அங்கு இவ்வாறான உரையாடல் நிகழ்ந்தது.)

**குமார்** : தம்பி, நீ அந்த மாம்பழத்தைப் பறிக்க வேண்டாம்.

**தம்பி** : ஐயோ அண்ணா ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?

**குமார்** : தம்பி இது எமது பாடசாலையின் சம்பிரதாயம்.

**தம்பி** : அப்படி என்றால் என்ன அண்ணா?

**குமார்** : எமது பாடசாலையின் தோட்டத்தில் இருக்கும் எந்த ஒரு மரத்திலும் பழங்களை யாரும் பிடுங்குவதும் இல்லை எடுத்துக் கொள்ளுவதும் இல்லை. அப்பழங்கள் ஒவ்வொன்றும் விலங்குகளின் பயனுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. அது எமது பாடசாலையின் சம்பிரதாய மாகும்.

**தம்பி** : அண்ணா இதைப்போன்று இன்னும் சம்பிரதாயங்கள் உங்கள் பாடசா லையில் காணப்படுகின்றதா?

**குமார்** : ஆம் தம்பி, எமது பாடசாலையில் இவ்வாறான சம்பிரதாயங்களைப் போன்று கொள்கைகளும் நிறைய இருக்கின்றன. நாம் நல்வாழ்வு வாழ்வதற்கு நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதற்கும் தான் இவ்வாறான கொள்கைகள் சம்பிரதாயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே திருவிவிலியத்திலும் கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டிய நல்ல கொள்கைகளை நாம் காணக் கூடியதாய் உள்ளது.

**தம்பி** : அது என்ன அண்ணா?

**குமார்** : எமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் பற்றி தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் விளக்கமாக குறிப்பிடுகின்றார்.

பாடசாலையைப் போன்று எந்த ஒரு நிறுவனத்திலும் கொள்கைகளும் சம்பிரதாயங்களும் நிறைந்து காணப்படுகின்றது. ஒருவர் சமுதாயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு இவை அவசியமாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் எமது வாழ்வில் அடிப்படையாகக் கொள்ளவேண்டியது யாதெனில் கடவுள் எமக்களித்த கட்டளைகளே இக்கருத்துக்களை இரண்டாகப் பிரிக்கமுடியும். அவை

1. நல்ல ஒரு இறைத் தொடர்புக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கைகள்.

2. நல்ல ஒரு சமுதாய தொடர்புக்காக நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கைகள்.

கிறிஸ்தவ வாழ்வை நாம் கொண்டு செல்வதற்கான கொள்கைகளை ஏற்று விளங்கிக் கொள்வதற்கு புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**வாசிப்போம்**
**உரோமையர்**
12 : 9 - 21

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியின் மூலமாக கிறிஸ்தவ கொள்கைகளை ஆராய்வோம்.

இந்த அட்டவணையை உங்கள் அப்பியாசப் புத்தகத்தில் பிரதி செய்யுங்கள். இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்பட்ட திருவிவிலியப் பகுதியின் மூலமாக மூன்றாம் பகுதியை பூரணப்படுத்துங்கள்.

| கொள்கைகள் | திருவிவிலியப் பகுதி | நடைமுறைப்படுத்த வேண்டிய பண்புகள் |
|---|---|---|
| நல்ல இறை தொடர் பிற்காக நாம் கடை பிடிக்க வேண்டிய கிறிஸ்தவ கொள்ளைகள் | உரோமையர் 12:9 | தீமையை ............................... ............................................ |
| | உரோமையர் 12:11 | ஆர்வம்மிக்க .......................... ............................................ |
| | உரோமையர் 12:12 | எதிர்நோக்கி இருப்பதில் .......... ............................................ துன்பத்தில் ............................ ............................................ இறைவேண்டல் ...................... ............................................ |
| பிறர் நலனுக்காக நாம் கடைப்பிடிக்க வேண்டிய கிறிஸ்தவ கொள்கைகள் | உரோமையர் 12:16 | நீங்கள் அறிவீர்களென ............................................ ............................................ |
| | உரோமையர் 12:10 | உடன் பிறப்புக்கள் போன்று ............................................ ............................................ பிறர் உங்களைவிட ................. ............................................ |
| | உரோமையர் 12:13 | இறைமக்களோடு ................... ............................................ விருந்தோம்பலில் ................... ............................................ |
| | உரோமையர் 12:14 | உங்களை துன்புறுத்துவோருக்கு ............................................ |
| | உரோமையர் 12:15 | மகிழ்வாரோடு ........................ அழுவாரோடு .......................... |
| | உரோமையர் 12:16 | அனைவரும்........................... உயர்வு மனப்பான்மை............... ............................................ |

| | | |
|---|---|---|
| | உரோமையர் 12:17 | தீமைக்கு ................................ ............................................ எல்லா மனிதரும் ................... ............................................ |
| | உரோமையர் 12:18 | உங்களால் முடிந்தவரை .......... ............................................ |
| | உரோமையர் 12:19 | பழிவாங்காதீர்கள் ................... |
| | உரோமையர் 12:20 | உன் எதிரி பசியாய் இருந்தால் ............................................ தாகத்தோடு இருந்தால் ............ ............................................ |
| | உரோமையர் 12:21 | தீமை உங்களை....................... ............................................ ...........................வெல்லுங்கள் |

கிறிஸ்தவர்களான நாம் இடைவிடாமல் கடவுளோடு நெருங்கிய தொடர்பை பேணிக் கொள்வது அவசியமாகும். அதன்மூலம் மனதாலும் வார்த்தையாலும் செயலாலும் எமது ஆன்மீகத்தை கட்டியெழுப்புவதற்கு முயற்சி செய்வோம். அனுதின வாழ்வில் நாம் செய்யும் அனைத்து செயல்களும் கடவுளின் விருப்பத்திற்கு ஏற்றதாகவும், நன்மையானதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்வோம். நாம் எமது இல்லம், பாடசாலை, சமூகத்தினூடாகவும் கடவுளுக்காக வாழ்வின் முன்மாதிரியோடு சான்று பகர்வது முக்கியமாகும். நாம் முகம் கொடுக்கும் பலவிதமான சவால்களின் மத்தியில் கடவுளில் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையோடும் எதிர்ப்பார்ப்போடும் செயல் படுவதற்கு முயற்சி செய்வோம். இவ்வாறான கொள்கைகளை எமது வாழ்வில் ஏற்படுத்திக்கொண்டு கடவுளுடன் நெருங்கிய தொடர்பை உருவாக்கிக் கொள்வதற்கு எம்மால் முடியும்.

நம் எவருக்கும் சமுதாயத்தில் தனிமையாக வாழ்வதற்கு இயலாது. கடவுள் எம்மை ஒருவருக்கொருவர் அன்புசெய்து ஒற்றுமையாக வாழ்வதற்கே அழைத்தார். சமூகமாக இணைந்து வாழும் நாம், நல்ல கிறிஸ்தவ கொள்கைகளுக்கு ஏற்றவாறு சமூகத்தின் தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கான முறைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

## சகோதர அன்பில் செயல்படுதல்

> **உடன் பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்.**
>
> **உரோமையர் 12:10**

- *அன்பில் சுயநலம் என்பது இருக்கக் கூடாது.*
- *அது தீமையை அகற்றி நன்மையை சார்ந்த அன்பாக இருப்பது அவசியம்.*
- *இரக்கத்தை முதன்மையாகக் கொண்டு சகோதரத்துவத்தோடு செயல்படுவது அன்பின் பண்பாகும்.*
- *தன் சுயவடிவத்தை மறைத்து வஞ்சனையாக செயல்படும் அன்பு அன்பல்ல.*
- *ஒவ்வொருவரிடமும் பிரதிபலனையும் இலாபத்தையும் எதிர்பாராதது அன்பின் பண்பாகும்.*
- *அன்பின் நிமித்தம் பலவற்றை இழந்தாலும் அதை தாங்கிக்கொள்வது முடிவது அன்பின் பெரிய அடையாளமாகும்.*

## ஆர்வமிக்க உள்ளத்தோடு பணிபுரிதல்

> **விடா முயற்சியோடும் ஆர்வம்மிக்க உள்ளத் தோடும் ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள்**
>
> **உரோமையர் 12:11**

- *இறை பணியை எம்மால் முடிந்த அளவு உயர்வாக செய்வோம்.*
- *இறைவனுக்காக செய்யும் செயல்களுக்கு எப்போதும் முதலிடத்தைக் கொடுப்போம்.*
- *அதை ஆர்வத்தோடு குறிப்பிட்ட வேளையில் நிறைவுசெய்வோம்.*
- *இறைவனுக்காக செய்யவேண்டிய காரியங்களைக் கைவிடுவதைத் தவிர்ப்போம்.*

## துன்பத்தில் பொறுமை கொள்ளுதல்

> **எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சிகொள்ளுங்கள். துன்பத்தில் தளரா மனத்துடன் இருங்கள். இறைவேண்டலில் நிலைத்திருங்கள்.**
>
> **உரோமையர் 12:12**

- துன்பவேளையில் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு பொறுமையோடு செயல்படுவோம்.

- பொறுமையோடிருந்து பொறுமையாக செய்யும் செயல்களை அறிந்துகொள் வோம்.

- அப்படியான சந்தர்ப்பத்தில் இறைவேண்டலின் மூலம் இறைத்தந்தையோடு ஆழமான தொடர்பில் ஈடுபடுவோம்.

- இறைவேண்டலை துன்பவேளையில் மட்டும் எல்லைப்படுத்தாமல் அது இறை வனோடு இடைவிடாது நிகழும் இணைப்பாக்கிக் கொள்வோம்.

### துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுதல்

> **உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள். ஆம் ஆசி கூறுங்கள் சபிக்க வேண்டாம்.**
>
> **உரோமையர் 12:14**

- துன்புறுத்துவோரை சபியாமல் அவர்களுக்கு ஆசி வழங்குவதற்கு முயற்சி செய்வோம்.

- பகைவரை மன்னிப்பது கடினமானதெனினும் அந்த நல்ல பழக்கத்தை கட்டியெழுப்புவோம்.

- பகைவர்களின் மத்தியிலும் சமாதானமாக வாழ்வதற்கு முயற்சி செய்வோம்.

- எம்மை பகைப்பவர்கள் சமாதானத்திற்கு இணங்க மறுத்தால் அதை இறைவனிடம் ஒப்படைப்போம்.

- பகைவரை சபிப்பதோ அல்லது தண்டிப்பதோ கடவுளுக்கு ஏற்ற செயலல்ல என்பதை ஏற்றுக் கொள்வோம்.

## அறிவாளிகளெனக் கருதிப் பெருமிதம் கொள்ளாமை

> **நீங்கள் ஒரு மனத்தவராய் இருங்கள். உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள். நீங்கள் உங்களையே அறிவாளிகளெனக் கருதிப் பெருமிதம் கொள்ள வேண்டாம்.**
>
> **உரோமையர் 12:16**

- நாம் அனைவரும் இறைவனுக்கு ஏற்ற பிள்ளைகளானபடியால் அனைவரையும் சமமாக எண்ணுவோம்.
- எப்போதும் பிறர் எம்மை விட உயர்ந்தவர்கள் என எண்ணுவோம்.
- தன் அறிவைப் பற்றி பெருமிதம் அடையாதிருப்போம்.
- தன்னைப் பற்றி பெருமிதம் கொண்டு செயல்படுபவர் தன் சகோதரனோடு சமமாக இருக்கமுடியாது என்பதை அறிந்துகொள்வோம்.

## நன்மையை சார்ந்து தீமையை தோல்வியுறச் செய்வோம்.

> **தீமைக்கு பதில் தீமை செய்யாதிருங்கள் எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள்**
>
> **உரோமையர் 12:17**

- தீமைக்கு தீமை என்பது ஒன்றுக்கு ஒன்று செய்வது, கடவுள் இதை விரும்புவ தில்லை என்பதை அறிந்துகொள்வோம்.
- தீமையை தோல்வியடையச் செய்வது நன்மையால் மட்டுமே என்பதை ஏற்றுக் கொள்வோம்.
- தான் மாத்திரம் சரி என்ற எண்ணம் எப்போதும் சரியானது அல்ல என்பதை அறிந்து செயல்படுவோம்.
- பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்மையானவைகளை ஏற்றுக் கொள்வோம்.
- தீமையானவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர்ப்போம்.

- கிறிஸ்தவ கொள்கைகளின்படி வாழ்வதை கடவுள் எம்மிடம் எதிர் பார்க்கின்றார்.

- கிறிஸ்தவ கொள்கையின் அடிப்படையில் வாழ்வது மட்டுமல்ல. அக் கொள்கைகளை வாழ்வின் முன்மாதிரியாக சமுதாயத்திற்கு கொண்டு செல்வது கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பு என்பதை சிந்திப்போம்.

### செயற்பாடு

1. உரோமையர் 12:9-12 படி கிறிஸ்தவ கொள்கைகள் அடங்கிய சுவரேடு ஒன்றைத் தயாரிக்கவும்

2. கிறிஸ்தவ கொள்கையின் அடிப்படையில் இருக்கும் உங்களை துன்புறுத்துவோருக்கு நீர் எவ்வாறு செயல்படுவீர்?

3. கிறிஸ்தவ மாணவராக பாடசாலையில் நீர் ஆற்றலோடு செயற்படும் சந்தர்ப்பங்கள் ஐந்து எழுதுக.

# 21 கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வு

**உரோமையர் 12 : 1-3 எபேசியர் 4 : 22 -24**



**உரோமையர் 12 : 1 - 3**

கிறிஸ்தவ வாழ்க்கை கடவுளின் பெரிதான இரக்கத்தினால் புதுப்பிக்கப்படுகின்றது என்பதை திருத்தூதர் பவுல் குறிப்பிடுகின்றார். இந்த புதிய மாற்றத்தை, புதிய வாழ்வாக அவர் அறிமுகம் செய்கிறார். அவ்வாறான மனிதனின் வாழ்வு கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட வேண்டிய ஒன்று என்று அவர் காண்பித்துள்ளார். எமது ஆன்மா, சரீரம் மட்டுமல்ல முழு வாழ்வையும் கடவுளுக்கு அர்ப்பணிப்பதன் உண்மையான வழிபாடு என்று கருதப்படும்.

ஆதிகாலத்தில் மனிதர் ஆடுகளைப் போன்ற விலங்குகளின் இரத்தத்தை பலியாக கடவுளுக்கு ஒப்புக் கொடுத்தனர். இயேசு எம் அனைவரின் மீட்புக்காக உயிருள்ள பலியாக அவரின் வாழ்வை கல்வாரி மலையிலே ஒப்புவித்தார். அது பூரணமான பலியாக அறிய முடிந்தது. எனவே நாமும் கடவுளுக்கு உகந்த தூய பலியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய முறையில் செயல்படுவது கடவுளுக்கு செய்யும் உள்ளார்ந்த வழிபாடு என்பதை திருத்தூதர் பவுல் காண்பித்துள்ளார்கள்.

**இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது என தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாக தெரியும்.**

**உரோமையர் 12:2**

அனுதின வாழ்வில் இறைவிருப்பத்திற்கு மாறாக பலவித செயல்களை நாம் செய்வதால் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. அவ்வாறு உலக காரியங்களுக்கு ஏற்றதாக நடவாமல் எமது ஆன்மீக வாழ்வை புதுப்பித்துக் கொள்வதற்காக பவுல் அவர்களின் மூலமாக எமக்கு வழிகாட்டப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதனால் கடவுளுக்குள்ளாக சரியானதை தெரிவு செய்வதற்கு எம்மால் முடிகின்றது. இவ்வாறாக புதிய வாழ்வை ஆரம்பிப்பவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் பலவற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

### ♦ தம்மைக் குறித்து எவரும் பெருமிதம் கொள்ளக்கூடாது

பவுல் அவர்கள் பெருமிதத்தை தவிர்த்துக் கொள்ளுதல் பற்றி தனது திருமுகத்தின் மூலமாக (உரோமையர் 12:3) எமக்கு வழிகாட்டியுள்ளார். சமுதாயத்தில் ஒருவருக்கு மேலாக ஒருவர் உயர்வடைய வேண்டும் என்பதற்காக ஒருவருக்கொருவர் போட்டியிட்டு வாழும் வாழ்கை வட்டத்துக்குள் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறான சமுதாயத்துக்குள் மனிதன் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணும் பல கருத்துக்களை கீழே காணலாம். அவை

- தனது சக்தி
- தனது ஆற்றல்
- தனது சுபாவம்
- தனது செல்வம்
- தனது அறிவு
- தான் வகிக்கும் பதவி

இவ்வாறான பலவித காரணங்களால் மனிதன் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணி செயல்படுகின்றான். அது மட்டுமன்றி இதனூடாக பிறரையும் துன்பத்திற்கு உட்படுத்துவதிலும் ஈடுபடுகின்றான். இவ்வாறான செயல்களை செய்யாமல் இருப்பது கடவுளினால் புதுவாழ்வு பெற்றவர்களின் பொறுப்பாகும்.

### ♦ கடவுள் கொடுத்த நம்பிக்கையின்படி மனதோடு இருத்தல்

மிகவும் வேலைப்பளு நிறைந்த உலகில் நாம் இன்று வாழ்கின்றோம். எனவே எமது சிந்தனைகள் செயல்கள் யாவும் உலகக் காரியங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்பட இடமுண்டு. ஆனால் கடவுளின் இரக்கத்தைப் பெற்று வாழ்வை புதிதாக மாற்றியமைத்துக் கொண்டவர்களின் சிந்தனை, செயல், வாழ்க்கை அனைத்தும் நல்லமுறையில் செயலாற்றி வாழ்வது அவசியமாகும். இவ்வாறான நல்ல வாழ்வு கடவுள்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையினாலேயே முழுமை அடையும். கடவுளின்

நம்பிக்கை நிறைந்த பிள்ளையாக வாழும்போது அதை நாம் எமது வாழ்க்கையில் வெளிப்படுத்த புதிய வாழ்வை எதிர்பார்த்து இருக்கும் வண்ணத்துப் பூச்சியின் வாழ்கை வட்டத்தின் மூன்று நிலைகளுடன் ஒப்பிடலாம். அவை கீழே படத்தின் மூலமாக காட்டப்பட்டுள்ளது.

**வாசிப்போம்**
**எபேசியர் 4 : 22 - 24**



புழுவாக வாழுதல்

இதை கிறிஸ்துவில் புதுவாழ்வு ஆரம்ப மாவதற்கு முன் நாம் வாழும் வாழ்வு புழுவுக்கு சமமானதாகும்.



கூட்டுக்குள் புது வாழ்வுக்கு ஆயத்தமாகும் கூட்டுப்புழு


கிறிஸ்துவை அனுபவிப்பதற்கு முன் எமது பாவத்தை உணர்ந்து புது வாழ்வு அவசியம் என்பதை, அறிந்து கொண்டு அதற்காக ஆயத்தமாகும் சந்தர்ப்பம் கூட்டுப் புழுவுக்கு சமமானதாகும்.




வண்ணத்துப் பூச்சியைப் போன்று
புது வாழ்வை வாழ்தல்

பழைய வாழ்வில் இறைவனுக்கு விருப் பமில்லாத செயல்களை கைவிட்டு கிறிஸ் துவுக்குப் புதுவாழ்வு வாழ்பவர்களை வண்ணத்துப் பூச்சிக்கு ஒப்பிடலாம்.

சமுதாயத்தில் நிலவும் இச்சை நிறைந்த காரியங்களில் நாட்டம் கொண்டு ஒரு சிலர் வாழ்கின்றனர். இவ்வாறான செயல்களில் இருந்து விலகி ஆன்மீகத்தின் புதுவாழ்வை நோக்கி அடி எடுத்து வைப்பதில் நாட்டம் கொள்வது அவசியமாகும். ஆன்மீகத்தோடு புதிய வாழ்வில் ஈடுபடுவதற்கு நாம் பயணிக்க வேண்டிய அவசியமான பயணப்பாதை இவ்வாறு காட்டப்பட்டுள்ளது.



ஆன்மீக ரீதியில் புதிய வாழ்வை நோக்கி பயணம் செய்யும் நாம் கடவுளின் மூலமாக பெற்ற புதிய வாழ்வில் பின்வரும் பண்புகளை நமது வாழ்வில் காண்பிப்போம்.




**நீதி -** கடவுள் எம்மை அவரின் பிள்ளைகளைப் போன்று ஏற்றுக்கொள்வதன் மூலம் எமக்கு நீதிமான்கள் என்ற சான்று கிடைக்கும். இறைப் பிள்ளைகளின் பண்புகளோடு அனுதின வாழ்வில் சான்று பகர்ந்து பயணிக்கும்போது நீதியான வாழ்வு எமக்கு உரித்தாகும்.

**தூய்மை -** தூய ஆவியின் வழிகாட்டலோடு உடல், உள்ளம், ஆன்மா அனைத்தும் கடவுளுக்கு கீழ்ப்படிந்து செயல்படும்போது நாம் தூய்மையான வாழ்வை வாழ்பவர்களாவோம்.

கடவுளின் அன்பிற்கூடாக அன்றைய சமுகத்தில் வாழ்ந்த அனேகர் புது வாழ்வை அனுபவித்தனர். அவருக்குள்ளாக நாமும் ஆன்மீகத்தின் புதிய தன்மையை நோக்கி பயணிக்கும்போது இறைசாயலுக்கு உரிமை கூறுவோம். இவ்வாறு உரிமையாக்கிக் கொண்ட புதுவாழ்வினூடாக நாம் வாழும் சமுதாயத்தை ஒளியாக்குவதற்கு முயற்சிப்பது அவசியமாகும்.

### செயற்பாடு

1. கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான பண்புகள் எவை?
2. இயேசுவை சந்தித்த பின் தன் வாழ்வில் புதிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்ட ஒருவரைப் பற்றி புதிய ஏற்பாட்டிலிருந்து விளக்கவும்.
3. நீர் பெற்றுக் கொண்ட புதிய வாழ்வின் மூலமாக பாடசாலை, வீடு, சமுதாயம் என்பவற்றை ஒளியாக்குவதற்கு நீர் செய்யக்கூடிய மும்மூன்று செயற்பாடுகளை எழுதுக.